கல்கி

KALKI 21.7.91 ரூ. 2·50



ஏ.வி.எம்: 1-150



சுவையான பழங்கள்
உங்கள் குழந்தை வளர்ந்திட.
குழந்தைக்கான ':ப்ரூட்ஸ்ஸலாட்' உணவு'
ஆப்பிள், மாம்பழம் மற்றும்
வாழைப் பழத்தின் எல்லா வித
நற்பயன்களையும் உங்கள்
குழந்தைக்குத் தருவது
ஃபாரெக்ஸ் ஃப்ரூட்ஸ்
மட்டுமே—அத்துடன் கோதுமை
மற்றும் பாலும் கொண்டது.
குழந்தைகள் மிகவும் விரும்பும்.
முன்கூட்டிப் பக்குவம்
செய்யப்பட்ட சுவைமிக்க உணவு.
ரெகுலர் பேக்கைவிட
100 கிராம் அதிகம்.
:பாரெக்ஸ்-:ப்ரூட்ஸ்
சுவையுடன் வளரும் வழி.
Farex-fruits
WITH CEREAL, FRUITS AND MILK
Gx 357.90 Tm



சில்லிட வைக்கும் சித்தூர் கொலைகள்!

சிரிப்பும் கும்மாளமுமாக, ஒன்பது பெண்கள் மலை உச்சியை நோக்கி நடை போட்டார்கள். வெங்கடம்மா துள்ளிக் குதித்து முன்னேறினாள்.

''ஏய்... ரொம்ப வேகமா போகாதடி!'' ஆதிலட்சுமி கத்தினாள்.

''மலை மேல காட்டுக்குள்ளே
வெறகு வெட்ட போற பெண்ணே
★ துரை வந்து பிடித்துக் கொள்வார்
துட்டு கேட்டு நச்சரிப்பார்!''

''என்னடி பாட்டெல்லாம் பிரமாதமா இருக்கு!'' - வெங்கடம்மாவைக் கிண்டல் செய்தாள் பார்வதி.

''அதை விடுடி. சிரஞ்சீவியோட ''ருஸ்தம்'' டவுன்லே ஓடிட்டிருக்கு. பார்க்கலாமா?''

''ஏய், வெங்கடம்மா! சரியான சினிமா பைத்தியம் நீ...'' என்ற பிரேமலதாவைக் கைநீட்டி அடிக்க வந்தாள் வெங்கடம்மா.

ஒருவழியாக மலை உச்சியை அடைந்து சுள்ளிகளைப் பொறுக்கிச் சேகரிக்க ஆரம்பித்தார்கள். கைக்கெட்டும் கிளைகளைக் 'கறக்' 'கறக்'கென்று ஒடித்தார்கள். இப்படியாக இரண்டு மணி நேரம் சென்றது.

யாரோ நடந்து வரும் சப்தம் கேட்டது. பெண்கள் மிரள, மிரளச் சுற்றிப் பார்த்தார்கள்.

சடாலென்று ஒரு பள்ளத்திலிருந்து மேட்டுக்கு வந்தான் **அவன்.**

பெண்கள் மிரண்டு பின்வாங்கினார்கள்.

''பயப்படாதீங்க. நான் ஃபாரஸ்ட் இலாகாதான். ஏன் பச்சை மரங்களை ஒடிக்கறீங்க?''

''இல்லையே... நாங்க காஞ்ச மரங்களைத்தானே வெட்டினோம்...''

''அரிவாளை இப்படிக் கொடுங்க.''

வெங்கடம்மாவின் கையிலிருந்து அரிவாளைச் சரேலெனப் பறித்துக் கொண்டு செயலில் இறங்கினான் **அவன்.** சின்ன மரங்களில் தாவி ஏறி, காய்ந்த கிளைகளை வெட்டினான். அவற்றைக் கட்டுக் கட்டாகக் கட்டி வைத்தான். நடுவே கேலிக்கும் பஞ்சமில்லை.

''என்ன உன் பேரு.. வெங்கடம்மாவா? பாக்கு வெத்தலை மாத்திட்டாங்களா?''

வேஷ்டிக்குள் மறைத்து வைத்திருந்த தன்னுடைய அரிவாளை எடுத்து அனைவரும் காண ஒருமுறை பார்த்துக் கொண்

★ வனத்துறை அதிகாரி

டான்.

''உன்கிட்டே எப்படி அரிவாள்.. எதுக்கு...?'' வெங்கடம்மா தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டாள்.

''உன்னை மாதிரி ஒரு பொண்ணு விறகு வெட்ட வந்தா. அவகிட்டேருந்து பிடுங்கினதுதான்!''

ஹ ஹஹா என்று சிரித்தான். மலைகள் சிரிப்பை எதிரொலித்தன.

''நாங்க கிளம்பணும்'' - பெண்கள் முணுமுணுக்க ஆரம்பித்தனர்.

''கட்டுக்களை எடுத்துத் தலை மேல வச்சுக்கிட்டு நடக்க வேண்டியதுதானே!''

ஒவ்வொரு பெண்ணாகத் தலையில் கட்டுக்களைச் சுமந்து கொண்டு மெதுவாக, நகர ஆரம்பித்தார்கள். கடைசியாக வெங்கடம்மா. அவள் தலையில் கட்டை இவனே எடுத்து வைத்தான். சற்று மிரண்டபடி 'ஆளை விட்டால் போதும்' என்று நடையைக் கட்ட ஆரம்பித்தாள் அவள்.

''நில்லு!''

வெங்கடம்மா திரும்பினாள்.

அடுத்த விநாடி அவன் கையிலிருந்த அரிவாள் வெங்கடம்மாவின் கழுத்தில் இறங்கியது. அவள் அலறலில் மலை முகடுகள் நடுங்கின. என்ன ஆயிற்றோ, ஏது ஆயிற்றோ என்று மலை இறங்கிய மற்றப் பெண்கள், திரும்பி மேலே ஓடோடி வந்தார்கள். முதலில் வந்தவள் ஹேமலதா.

''கிட்டே வராதே!''

மீறி நெருங்கிய ஹேமலதாவை அரிவாளைத் திருப்பிப் பிடியால் கழுத்தில் அடித்தான் அவன்.

''ஐயோ!'' என்று அலறியபடி கழுத்தைப் பிடித்துக் கொண்டு ஹேமலதா ஓட, மற்றப் பெண்கள் அங்கு ஏன் நிற்கிறார்கள்? மலை உச்சியிலிருந்து கூச்சலிட்டபடி அவர்கள் தடதடவென்று இறங்க, கீழே வயல்களில் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஆண்களும், பெண்களும் விழுந்தடித்துக் கொண்டு அவர்களை எதிர்கொண்டு



❖ வெங்கடம்மாவின் தம்பியும் பாட்டியும்

❖ வெங்கடம்மா





❖ ஹேமலதா

ஓடினார்கள். ஒருவழியாக விஷயம் இன்னது என்று புரிந்து கொண்டு போய்ப் பார்த்த போது, வெங்கடம்மா உலகை விட்டு விடைபெற்றுக் கொண்டு போய் விட்டிருந்தாள். **அவன்?** எங்கேயும் காணப் படவில்லை!

போலீஸ் ஃபோன் அலறியது. ரேணிகுண்டா சப்-இன்ஸ்பெக்டர் கருணாநிதி அப்போதுதான் வீட்டில் வந்து உட்கார்ந்தார்.

''வெங்கடாபுரத்து மலையில் ஒரு கொலை நடந்திருக்கு. உடனே ஸ்பாடடுக்குப் போங்க'' - திருப்பதி கூடுதல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து கரகரப்பான குரலில் கட்டளை வந்தது.

ஜீப்பில் ஸ்பாட்டுக்கு விரைந்தார் கருணாநிதி. **அவனைத்** தேடியதுதான் மிச்சம். ஒரு பயனும் இல்லை. வழக்கப்படி மாயமாய் மறைந்து விட்டான் **அவன்.**

திருப்பதியைச் சுற்றியுள்ள மலைகளிலும் காடுகளிலும் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து இதுவரை பதினான்கு பெண்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்- வெங்கடம்மா உட்பட. மாடு மேய்க்கப் போன பெண்கள் விறகு வெட்டப் போன பெண்கள்... ஒரு ஆண் கூட அவனால் தொடப்படவில்லை. எங்கிருந்தோ திடீரென வருவான் **அவன்.** ஜாலியாகப் பேசுவான். முடிவில் ஒரு பெண்ணைத் துடிதுடிக்கச் சாகடித்த பிறகுதான் இடத்தைக் காலி செய்வான். ஏன் பெண்களை மட்டும் கொலை செய்கிறான்? எல்லாக் கொலைகளையும் செய்தவன் ஒரே ஆள்தானா?

''கொலைகள் நடந்துள்ள முறையைப் பார்க்கும் போது ஒரே ஆசாமியாகத்தான் தோன்றுகிறது. **அவன்** கண்டிப்பாக மனநோயாளியாகத்தான் இருப்பான்'' என்றார் கருணாநிதி. கிட்டத்தட்ட 200 போலீஸ்காரர்கள் **அவனைத்** தேடிக் கொண்டு இருக்கிறார்கள். ஹைதராபாத்திலிருந்து பெரிய போலீஸ் அதிகாரிகள் திருப்பதியில் முகாமிட்டிருக்கிறார்கள். காடு மலைகளில் அலைகிறார்கள். **அவன்** அடிச்சுவட்டைக் கூடப் பார்க்க முடியவில்லை - இதுவரை.

''பெண்கள் விஷயத்தில் ஏமாற்றத்திற்குள்ளானவனாக **அவன்** இருக்க வேண்டும். வெங்கடம்மாவைத் தவிர மற்ற எல்லோரும் நடுத்தர வயதுப் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கொலை செய்வதற்கு முன் யாரையும் கெடுக்க வில்லை **அவன்.** ஆக **அவனுடைய** 'மோடிவ்' என்ன என்று



◆ வெங்கடம்மாவின் பெற்றோர் - பரத்தாமையா, பங்காரம்மா.

தெரியவில்லை.

''இந்தச் சித்தூர் மாவட்டத்தில் உள்ள மலைகளையும் காடுகளையும் பற்றி நன்கு தெரிந்தவனாக இருப்பான். அதனால்தான் எங்களுக்கு நன்றாக 'டிமிக்கி'க் கொடுக்கிறான்'' என்றார் கருணாநிதி. (''போட்டோ வேண்டாமே ப்ளீஸ்'')

கொலைகளைத் தொடர்ச்சியாகச் செய்வதில்லை **அவன்!** ஒரு கொலை செய்த பின்பு பரபரப்பு அடங்கி, போலீஸ் அசந்திருக்கும் போது அடுத்த கொலை செய்கிறான்! பெண்களைக் கொலை செய்து விட்டு அவர்கள் அணிந்திருக்கும் தோடு, மூக்குத்தி போன்ற சின்ன நகைகளை மட்டுமே எடுத்துக் கொள்கிறான். மற்றவற்றைத் தொடுவதில்லை.

''சாப்பாட்டுக்கு என்ன செய்கிறான் என்றே தெரியவில்லை. டீக்கடை, சாராயக் கடை, மார்வாடிக் கடை என்று எல்லா இடங்களிலும் கண்காணித்துக் கொண்டு இருக்கிறோம். பஸ்ஸில் **அவன்** பயணம் செய்வதில்லை. 'கூட்ஸ்' ரயிலில்தான் போகிறானாம். அல்லது கால்நடையாகத் திரிகிறான். எப்படியும் பிடித்து விடுவோம்'' என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் கருணாநிதி.

சித்தூர் மாவட்டத்தில் உள்ள மலைகளிலும் காடுகளிலும் இப்போதெல்லாம் பெண்கள் விறகு வெட்டவோ, மாடு மேய்க்கவோ செல்வதில்லை. எந்த மலையில், யாரை வெட்டக் காத்திருக்கிறானோ!

- ப்ரியன்

படங்கள் : ராஜன்



விம்பிள்டன் வீரர்-1991

"உங்கள் பெயரை எப்படி உச்சரிப்பது?" என்று பலரும் கேட்டார்கள்.

ஸ்டிக்?

ஷிஷ்?

ஸ்டிச்?

"நான் சொல்லித் தந்தால் கூட உங்களால் திருப்பிச் சொல்ல முடியாது!" என்றார் இந்த இருபத்திரண்டு வயது ஜெர்மன் டென்னிஸ் வீரர். தையல் கலைக்கும் பெயருக்கும் சம்பந்தமில்லை என்பது மட்டும் நிச்சயம். சில நாளிதழ்கள் "Stich Sews it up in straight sets" என்பது போன்ற தலைப்புக்கள் வெளியிட்டது விநோதம்!

உலகின் டென்னிஸ் சாம்பியன்கள் வரிசையில் ஏழாவதாக இருந்தார் இவர். எட்பர்கை அரை இறுதியில் வென்ற போது, "நான் உலகின் நெம்பர் 1 ஐ இப்போது வென்றிருக்கிறேன். இறுதி ஆட்டத்தில் எனக்கு நிச்சயம் வெற்றி வாய்ப்பு இருக்கிறது!" என்று எந்த வாய் முகூர்த்தத்தில் சொன்னாரோ, போரிஸ் பெக்கரை மூன்று அடுத்தடுத்த செட்களில் வென்று காட்டினார்.

ஸ்டிஷ் இப்படிச் சொன்னது, அகம்பாவத்தினால் அல்ல; அவர் ஆட்டத்தின் மீது அவருக்கு இருக்கும் அபார தன்னம்பிக்கைதான் காரணம். தம்மை விட ஒரு வயதே மூத்தவரான தம் நாட்டுக்காரரான போரிஸ் பெக்கரை, துளியும் உணர்ச்சிகளை வெளிக் காட்டாமல் அமைதியாக ஆடி வென்ற மைக்கேல் ஸ்டிஷ், சென்ற பிரெஞ்ச் ஓபனில் அரை இறுதி வரைதான் வந்தார் என்றால் நம்ப முடியுமா?

ஸ்டிஷ் அடித்த பல பந்துகளை, பெக்கரால் தொடக்கூட முடியவில்லை. ஒரு டஜனுக்கும் மேல் 'ஏஸ்'கள்! மெக்கன்ரோ பாணியில் பெக்கர் களத்தில் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் பண்ணியது வேடிக்கையாக மட்டுமல்ல, பரிதாபமாகவும் இருந்தது.

"நீ ஒரு நாளும் டென்னிஸ்ஸில் உருப்பட மாட்டாய். பேசாமல் கால்பந்து ஆடப் போய் விடேன்!" என்று ஆரம்பத்தில் ஒருமுறை அவருடைய கோச் அலுத்துப் போய்ச் சொல்லுமளவுக்கு மோசமான ஆட்டக்காரராயிருந்தவர் ஸ்டிஷ். விளையாட்டில் அக்கறை காட்டாமல் அந்த அளவுக்குக் குறும்பு, கொட்டம்.

ஸ்டிஷ்ஷின் வெற்றிக்கு, அவரது கோச் மார்க் லூயிஸ்தான் காரணம். நியூஸிலாந்துக்காரர். பழைய விம்பிள்டன் ஆட்டக்காரரான கிறிஸ் லூயிஸின் சகோதரர். ஜெர்மனியிலுள்ள மியூனிச்சில், ஒரு லீக் மாட்சில்தான் தம் 'குரு'வைச் சந்தித்தார் ஸ்டிஷ். அப்புறம் அவர் சொன்னபடி எல்லாம் 'ஆடி'யிருக்கிறார்!

"எனக்கு இப்போது கிடைத்த பட்டத்தில் சரி பாதி அவருக்குப் போய்ச் சேர வேண்டும். 'நீ நிச்சயம் விம்பிள்டனில் வெல்லப் போகிறாய்' என்ற நம்பிக்கையை ஊட்டியவர் அவர்தான்" என்றார் ஸ்டிஷ். "முதல் செட்டில் பெக்கரைத் தோற்கடித்ததுமே எனக்கு நம்பிக்கை கூடி விட்டது. அப்புறம் எந்தப் பந்தையும் நான் விட்டு வைக்கவில்லை!"

ஆறடி நாலங்குல மைக்கேல் ஸ்டிஷ்ஷுக்கு உயரம் உதவுகிறது. அடிக்கடி கையாண்ட பேக் ஹேண்ட் ஸ்ட்ரோக் டி.வி.யில் பார்க்க பிரமிப்பாயிருந்தது. இவருக்கு இதாலிய உணவு வகைகள்தாம் மிகவும் பிடிக்குமாம். அதே அளவுக்கு கிளின்ட் ஈஸ்ட்வுட் நடித்த படங்களும், ஜெர்மன் ராக் இசையும்.

இறுதிப் போட்டிக்கு முன்னர், போரிஸ் பெக்கர் லண்டனில் சுற்றி வந்த போது ரசிகர் கூட்டம் மொய்ப்பதைத் தவிர்க்க டோப்பாவும், கறுப்புக் கண்ணாடியும் அணிந்து, மாறுவேடம் தரித்திருந்தார்! அத்தகைய கவலையின்றி வளைய வந்த ஸ்டிஷ் இறுதிப் போட்டிக்குப் பிறகு தாமும் மாறுவேடம் தரிக்க வேண்டிய நிர்பந்தத்துக்கு உள்ளானார்.

இறுதிப் பந்தயத்தின் போது கடுமையான வெயில். பெக்கர் இரண்டு முறை சட்டையை மாற்றிக் கொண்டார். ஸ்டிஷ் தமக்கு மிகவும் பிடித்த (ராசியான) கறுப்புக் கோடு போட்ட வெள்ளைச் சட்டையை இறுதிவரை மாற்றவேயில்லை!

– சித்தார்த்.



பாலில் குங்குமப் பூ; பிறக்கும் குழந்தை தாமரைப் பூ!

O என். ரவிகுமார், சென்னை - 53

OO இறந்த மனிதன் உடலிலிருந்து ஆறு மணி நேரத்திற்குள் கண்களை எடுத்துப் பயன்படுத்துவதைப் போல வேறெந்த பாகத்தையாவது (இறந்த பின்) மாற்று அறுவைச்சிகிச்சைக்காக எடுத்துப் பயன் படுத்தலாமா?

O டாக்டர் டி.ஆர். சுவாமிநாதன், சென்னை - 4.

OO பயன்படுத்தலாம். ஆனால் இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒன்று - கண்ணிலிருந்து எடுத்து, மற்றொருவருக்குப் பொருத்தக் கூடிய பாகமான 'கார்னியா' இரத்த நாளங்களோடு நேரடியாகத் தொடர்பு இல்லாத பாகம். ஆகவே அதை உடலிலிருந்து பிரித்து எடுத்த பின்னும், ஒரு வாரம் வரை, அதற்குகந்த முறையில் பாதுகாக்க முடியும். ஆனால் இருதயம், கல்லீரல், சிறுநீரகம் போன்றவை இரத்த நாளங்களோடு தொடர்ப்பு உள்ளவையாதலால் இறந்தவுடனேயே இவை எடுக்கப்பட்டு, இருபத்துநாலு மணி நேரத்திற்குள், உறுப்பு தானம் பெறுபவர் உடலில் பொருத்தப்பட வேண்டும். இவ்வகையான அறுவைச் சிகிச்சைகள் மிகுந்த கவனத்தோடும், எச்சரிக்கையோடும் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வகைப் பணிகளில் மேலை நாடுகள் மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளன. காரணம் அறுவைச்சிகிச்சைக்கான உபகரணங்களும், குறிப்பிட்ட பாகங்கள் வேண்டியவர்களின் பெயர்ப் பட்டியலும் தயார் நிலையில் உள்ளமைதான்.

O இரா. சம்பத்குமார், இராசிபுரம்.

OO கர்ப்பம் தரித்தவர்கள் குங்குமப் பூவைப் பாலில் கலந்து சாப்பிட்டால் குழந்தை சிவப்பாகப் பிறக்கும் என்கிறார்களே. உண்மையா?

O டாக்டர் பிரேமா ராஜேந்திரன், சென்னை - 4.

OO குங்குமப் பூவைப் பாலுடன் சேர்க்கும் போது அதற்கு நிறமும், மணமும் கொடுக்கிறது. இது உடம்பின் உஷ்ணத்தைக் குறைக்குமே தவிர மற்றபடி இதை அருந்துவதால் குழந்தை வெளுப்பாகப் பிறக்கும் என்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படவில்லை.

O சிவ. சீனிவாசன், கும்பகோணம்.

OO உதடு வெடிப்பு எதனால் ஏற்படுகின்றது? இதை எப்படி நீக்குவது?

O டாக்டர் இராம தேனப்பன், சென்னை - 4.

OO உதடு வெடிப்பு என்பது அதிக குளிர்ச்சியாலோ அல்லது விட்டமின் சத்துக் குறைவாலோ ஏற்படுகிறது. பனி மிகுந்த நாட்களில் உதடுகளுக்கு நடுவில் ஏற்படும் வெடிப்புகளுக்கு 'கிளசரினோ', 'கோல்ட் கிரீமோ' பயன்படுத்தலாம். உதட்டின் ஓரத்தில் வெண்மை நிறத்தில் ஏற்படும் வெடிப்புக்கு பி. காம்ப்ளக்ஸ் மாத்திரையுடன் ஏ, டி, விட்டமின் மாத்திரைகளையும் உட்கொள்ள வேண்டும். தொடர்ந்து சாப்பிட்டால்தான் பூரண குணமாகும்.

தொகுப்பு : கீதா மோஹன்

காலை உணவிற்கு
சுவைமிக்க பானி மிக்ஸ்
சாப்பிடுங்கள்

கூடவே
ரூ.4/-
சேமியுங்கள்



அறிமுகம்!
ரீஃபில்
பேக்கிலே
பானி மிக்ஸ்

காலை உணவிற்கு சுவையுடன் ஊட்டச்சத்தும் கூடிய பானிமிக்ஸை உங்கள் குடும்பத்திற்கு தினந்தோறும் அளியுங்கள். அத்துடன் பணமும் சேமியுங்கள்.

உங்களுக்குப் பிடித்தமான பாரிட்ஜ் இப்பொழுது சிக்கனமான ரீஃபில் பேக்கில் கிடைக்கிறது.

டின்
பேக்கைவிட
ரூ.4/- விலை
குறைவு

பானி மிக்ஸ்® உடனடியாக தயாரிக்கக்கூடிய பாரிட்ஜ்
நாச்சுரல் * சாக்லேட்

உடல் நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ

இப்பொழுது தேர்ந்தெடுத்த இடங்களில் மட்டுமே கிடைக்கிறது

GL/331/91 TAM



ஏ.வி.எம்: 1-150

வரலாறு படைத்த ஏ. வி. எம். நிறுவனத்தின் படங்கள் சிலவற்றை எடுக்கையில் ஏற்பட்ட அனுபவங்களைக் கூறுகிறார் ஏ. வி. எம். சரவணன் :



★ ஏ. வி. மெய்யப்பன்



★ ஏ. வி. எம். சரவணன்

★★ 1934 - ல், எங்கள் தந்தை ஏ. வி. மெய்யப்பன் சரஸ்வதி சவுண்ட் புரொடக்ஷன் என்ற பெயரில் ஒரு கம்பெனி ஆரம்பித்து, 'அல்லி அர்ஜுனா' என்ற முதல் படத்தை எடுத்தார். சென்னையில் ஸ்டுடியோ வசதிகள் இல்லாததால், கல்கத்தா சென்று, நியூ தியேட்டர்ஸ் ஸ்டுடியோவிலேயே ஒரு மாதம் தங்கி, அப்போது நடிப்பில் சிறந்து விளங்கிய கே. எஸ். அனந்த நாராயண அய்யர் மற்றும் பல நாடக நடிகர்களைக் கொண்டு அப் படம் எடுக்கப்பட்டது. படம் தயாரான பின் போட்டுப் பார்த்தால், வெளிச்சத்தில் கண்கள் கூசவே ஹீரோ படத்தின் முக்கால் பாகத்துக்குக் கண்களை மூடிக் கொண்டே நடித்திருந்தார். மொத்தச் செலவு ரூபாய் எண்பதாயிரம்! அவ்வளவும் நஷ்டம்! அடுத்த படம் ரத்னாவளியை ஒன்றரை லட்சம் செலவு செய்து எடுத்தார். அதுவும் தோல்வியே அடைந்தது!

★★ எங்கள் சொந்த ஊரான காரைக்குடிக்குப் பக்கத்தில் உள்ள தேவகோட்டை ரஸ்தாவில், ஒரு டூரிங் கொட்டகையையும், அதனைச் சுற்றிய நிலத்தையும் வாடகைக்கு எடுத்து, எளிமையான முறையில் அதே சமயம் சகல வசதிகளுடனும் ஏ. வி. எம். ஸ்டுடியோவை ஆரம்பித்தார் எங்கள் தந்தை. 1946-ல் அங்கே எடுக்கப்பட்ட படம் தான் நாம் இருவர். மகாகவி பாரதியின் பாடல்கள் உரிமையை ஜேசிங்லால் மேத்தா என்பவரிடமிருந்து வாங்கி, நாம் இருவர் படத்தில் புகுத்தினார்.

★★ ஏ.வி.எம். மின் படங்கள் என்றாலே பூஜை போடுமிடம், ஏ.வி.எம். ஸ்டுடியோவின் மூன்றாம் தளம்தான். காரணம், 1945-இல் தேவகோட்டையில் நிர்மாணித்த ஏ.வி.எம். ஸ்டுடியோவை நட்டு, போல்டு முதல் அத்தனையையும் கழற்றி, பேக் செய்து, ரயில் மூலமாகச் சென்னைக்குக் கொண்டு வந்து, 23.8.48ல், இப்போது உள்ள ஸ்டுடியோவின் மூன்றாவது தளமாக அமைத்தோம்.

★★ களத்தூர் கண்ணம்மா படத்துக்கு மதுரை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் கமல்ஹாசனுக்காகப் பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். குழந்தை நட்சத்திரம் கமல் தவிர அதில் நடித்த நகைச்சுவை நடிகரும் விழாவில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழா பற்றிப் பெரிய அளவில் பேனர்கள் வைக்கப்பட்டிருந்தன. பேனர்களில் பாதி வரை கமல் பெயரும், மறுபாதியில் நகைச்சுவை நடிகர் பெயரும் எழுதி விளம்பரப்படுத்தியிருந்தனர். 'சிறுவன் பெயரைப் பெரிதாகப்

போட்டுத் தம்மை இன்சல்ட் செய்து விட்டார்கள்' என நகைச்சுவை நடிகர் கோபித்துக் கொண்டு, சண்டைக்கு வந்து விட்டார். தயாரிப்பாளர்கள் அதற்குப் பொறுப்பில்லை; தியேட்டர்க்காரர்களின் காரியம் அது என்ற எங்கள் விளக்கத்தை அவர் ஏற்காமல், 'விழாவில் நான் கலந்து கொள்ள மாட்டேன்' என்று கூறி விட்டார். அதன் பின் விளைவுகளை எடுத்துச் சொல்லியும், அவர் கேட்காமல், நிகழ்ச்சிக்கு வரவே இல்லை. அவர் வராவிட்டால், ரசிகர்கள் நிச்சயம் கோபமுற்று, கலாட்டா செய்வார்கள். என்ன செய்வது என்று யோசித்து ஒரு வழி கண்டுபிடித்தோம்.

நிகழ்ச்சி ஆரம்பித்தது. திரை விலகி ஸ்பாட் லைட் ஒளி மேடையில் விழுந்த போது, மேடையில், கைகளைக் கூப்பிய படி குட்டிப் பையன் கமல், ''நான்தான் கமலஹாசன். இந்தப் படத்தில் குழந்தையாய் ஆக்ட் பண்ணியிருக்கேன்.'' நகைச்சுவை நடிகர் பெயரைக் கூறி, ''அந்த மாமாவுக்கு அவசரமா ஒரு தந்தி வந்ததால ஊருக்குப் போயிட்டார்'' என்றதும், ஒரே கைதட்டல். விழா அமர்க்களமாய், நடந்து முடிந்தது. இப்போது கூட கமல் ஏதாவது நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குகிறார் என்றால் இந்தச் சம்பவம் என் நினைவுக்கு வரும்.

★★ 'நானும் ஒரு பெண்' படத்தில் ஒரு சுவையான காட்சி வரும். எஸ். வி. ரங்காராவுக்கு டயாபடீஸ் என்பதால், டாக்டர், வீட்டில் இருப்பவர்கள் அனைவரும் கண்டிப்பாய் ஸ்வீட் சாப்பிடக் கூடாது என்று தடை விதித்திருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் தெரியாமல் ரங்காராவ் திருட்டுத்தனமாய் சுவீட் சாப்பிட்டு மகிழ்வார். இக்காட்சியை யாரெல்லாம் ரசித்தார்களோ தெரியாது. என் தந்தை மிகவும் ரசித்துப் பாராட்டினார். காரணம், அந்தக் காட்சிக்கு இன்ஸ்பிரேஷனே அவர்தான்! முப்பத்து இரண்டு வருடங்களாய் என் தந்தைக்கு டயாபடீஸ் இருந்தது. மற்றவர்களுக்குத் தெரியாமல் சுவீட் சாப்பிடுவது அவருக்கு ரொம்பப் பிடிக்கும்! டயாபடீஸ் பற்றி அநேகமாய் எல்லாப் புத்தகங்களும் படித்திருப்பார். அவர் மட்டும், டயாபடீஸ் பற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியிருந்தால், நிச்சயம் டாக்டர் பட்டம் கிடைத்திருக்கும்!

★★ பிரதமர் நேரு, குழந்தைகள் மீது கொண்ட அலாதி பிரியத்தால் குழந்தைகளுக்கான திரைப்படத்துக்கென்று விசேஷ பரிசு ஒன்றை ஏற்படுத்தினார். அந்தப் பரிசு முதன் முறையாய் ஏ. வி. எம். தயாரிப்பான ''ஹம் பஞ்சி ஏக் டால்கே'' (நாம் அனைவரும் ஒரு மரத்தின் கிளைகள்) என்ற இந்திப் படத்துக்குக் கிடைத்தது. புது தில்லியில் நடந்த ஸ்பெஷல் விழாவில் பரிசளிப்பு நடந்தது. அதில் நடித்த குழந்தைகளுக்கு நேரு பிரத்தியேக மான தேனீர் விருந்து அளித்தார். அது ஏ. வி. எம். மின் சரித்திரத்தில் ஒரு பொன்னாள்.

★★ ஏ. வி. எம். தயாரிப்பான ஓர் இரவு படத்திற்குக் கதை வசனம் அறிஞர் அண்ணா. அவர் இரவில் தான் வசனம் எழுதுவார். தனியறையில் அமர்ந்து எழுதுவார். எழுதும் போது முதலில் பக்கத்துக்கு வரிசை எண் போட்டு, எழுதி முடித்ததும், அப்படியே தாளைக் கீழே போட்டு

❖ முள்ளும் மலரும்



❖ சகலகலாவல்லவன்



❖ மாநகரக் காவல்





✱ பராசக்தி

விடுவது அவரது பழக்கம். எழுதுவதில் அடித்தல், திருத்தல் இருக்காது. இரவு பூராவும் எழுதி விட்டு, அந்த அறையிலேயே ஓர் ஓரமாய்ப் படுத்துத் தூங்கி விடுவார். காலையில் அறையைத் திறக்கும் போது, ரூம் முழுக்கப் பேப்பர்கள் சிதறிக் கிடக்கும். பக்க நெம்பர்படி அவற்றை வரிசைப் படுத்தினால் வசனம் ரெடி!

★★ ஒரு படம் ரொம்ப நன்றாய் ஓடினால் அதன் முக்கிய அம்சங்களை மற்றப் படங்களிலும் வைப்பது என்பது அந்த நாளிலிருந்தே கடைப்பிடிக்கப்படுவதுதான். ஒரு வங்காளிக் கதையைத் தழுவி எடுக்கப்பட்டது ஏ. வி. எம். மின் 'நானும் ஒரு பெண்'. அதன் டிஸ்கஷன் சமயம், பிரமாதமாய் ஓடிக் கொண்டிருந்த படம் பாசமலர். அதில் டிராஜெடி முடிவு. ''அந்தப் படத்தின் வெற்றிக்கு அதன் முடிவுதான் காரணம்: எனவே நானும் ஒரு பெண்ணுக்கும் சோகமான முடிவுதான் வைக்க வேண்டும்'' என்று ஒரு வாதம். ''இல்லை கதை மங்களகரமாய் முடிய வேண்டும்'' என்பது மற்றொரு வாதம். எஸ். வி. ரங்காராவ், விஜயகுமாரி இருவர் உயிரும் கதையில் ஊசலாடிக் கொண்டிருக்கக் கதையின் முடிவு என் தந்தையிடம் விடப்பட்டது! ஒரு பெண் கறுப்பாய் இருக்கிறாள் என்பதற்காக அவள் வெறுக்கப்படுகிறாள் என்றோ, அவள் இறக்க வேண்டும் என்றோ சொல்வது சரியல்ல. பெண் கறுப்பு என்றாலும், அவள் நன்றாய் வாழ வேண்டும். எனவே அவளைக் கணவனும், மாமனார் மற்றவர்களும் மனம் மாறி ஏற்றுக் கொள்வதாய்த்தான் கதை முடிய வேண்டும்'' என்று தம் தீர்ப்பை வழங்கினார் என் தந்தை. ரங்காராவும், விஜயகுமாரியும் உயிர்ப் பிழைத்தனர். அந்தப் படம் தமிழில் மாபெரும் வெற்றி பெற்று அதையே தெலுங்கிலும், இந்தியிலும் கூட எடுத்தோம்!

★★ படிக்காத மேதை படத்தை இந்தியில் மெஹர்பான் என்ற பெயரில் எடுத்தோம். தமிழில் ரங்காராவ் செய்த ரோலை, இந்தியில் அசோக்குமார் செய்வதாய் இருந்தார். அதற்காகக் கணிசமான தொகை அட்வான்ஸாகவும் தரப்பட்டது.

அப்போது அசோக்குமாருக்கு வயிற்றில் ஒரு மேஜர் ஆபரேஷன் அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் நடக்கவிருந்தது. ''பிழைத்து வந்தால் அட்வான்ஸ் வாங்கிக் கொள்கிறேன்'' என்று அசோக்குமார் சொன்ன போது, ''முதலில் அட்வான்ஸைப் பிடியுங்கள்... தைரியமாய்ப் புறப்படுங்கள். ஆபரேஷன் முடிந்து, முற்றிலும் குணமடைந்து வருவீர்கள். பயப்படாதீர்கள்'' என வாழ்த்தி அனுப்பினார் என் தந்தை. என் தந்தையின் இந்த நம்பிக்கையே அசோக்குமாருக்குப் புதுத் தெம்பு அளித்தது. ஆபரேஷன் முடிந்து நலமுடன் திரும்பினார். படமும் ஓகோ என்று ஓடியது.

★★ அன்பேவா ஷூட்டிங்கை முடித்துக் கொண்டு, திரும்பிக் கொண்டிருந்தோம். வழியில் ஒரு உணவு விடுதியில் சாப்பிடுவதற்காக வண்டியை நிறுத்தினோம். சிம்லாவின் பலத்த பனி காரணமாய் எனக்குத் தொண்டை வலி. காது அடைத்துக் கொண்டு அவஸ்தை. தெருவிலிருந்து ஐம்பது படியேறி ரெஸ்டாரண்டை அடைய வேண்டும். என்னால் படியேறிப் போக முடியாதபடி உடல் சோர்வு. காரிலேயே பசியுடன் படுத்து விட்டேன். காரின் கண்ணாடி தட்டப்படும் சப்தம் கேட்டுக் கண்விழித்துப் பார்த்தேன். கிளவுஸ் அணிந்த கைகள், துணியால் மூடி ஒரு கிளாஸைப் பிடித்திருப்பது தெரிந்தது. கண்ணாடியை இறக்கினேன். ''சூடாய்ப் பால் சாப்பிடுங்க! தொண்டை வலிக்கு இதமாய் இருக்கும்!'' என்றார் வந்தவர். மற்றவர்கள் அனைவரும் ரெஸ்டாரண்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, தாயன்புடன் எனக்குச் சூடாய்ப் பால் கொண்டு வந்தவர் யார் தெரியுமா? எம்.ஜி.ஆர்.தான்!

★★ பராசக்தி படம் ரிலீஸானதிலிருந்து திரையுலகில் 'நைன்த் ரீல்' என்ற வார்த்தை ரொம்பப் பிரபலம். திரையுலகில் ஒருவரை யாராவது அளவுக்கு மீறிப் புகழ்ந்தால் அதை 'நைன்த் ரீல்' என்பார்கள், இதன் பொருள் என்ன தெரியுமா? பராசக்தி படத்தில் ஒன்பதாவது ரீலில் சிவாஜி கணேசன் பாடும் பாடல் ''கா...கா... கா....''!!

★★ 'முள்ளும் மலரும்' படத்தைப் பார்த்து விட்டு, என் தந்தை ரஜினிகாந்தின் நடிப்பை வெகுவாய்ப் பாராட்டினார். 'தமிழில் இன்னொரு கிரேட் ஆர்டிஸ்ட் உருவாகிறார்' என்று கூறினார். அது மட்டுமில்லை. முள்ளும் மலரும் படத்தின் விற்பனை உரிமையை எந்தெந்த ஏரியாக்களுக்குக் கிடைக்கிறதோ அதையெல்லாம் வாங்கி விடச் சொன்னார். ஏற்கெனவே உரிமை வாங்கியவர்களிடமிருந்து, அதிக விலை கொடுத்து, உரிமையை வாங்கினோம். படம் வெற்றிகரமாக ஓடியது.

★★ 'குமரிப் பெண்', 'பெரிய இடத்துப் பெண்', 'கல்யாணமாம் கல்யாணம்', 'பட்டிக்காட்டுப் பெண்', 'பட்டிக்காடா பட்டணமா?', 'சவாலே சமாளி' இத்தனை தமிழ்ப் படங்களையும் ஒன்று சேர்த்து, ஒரு கதை பண்ணி, ஒரு படம் எடுத்தோம். அந்தப் படத்தில் ஹீரோ ரொம்ப ஈடுபாட்டுடன் ஒத்துழைத்தார். வழக்கமான மசாலாக் கதை, எதிர்பார்த்ததை விட சூப்பர் ஹிட் ஆயிற்று. அதுதான் சகலகலா வல்லவன். மேன் ஹன்டர் என்ற படத்தில் வந்தது போல ஒரு 'சேஸிங் ஸீன்' வைத்தோம். அனைத்துத் தரப்பு ரசிகர்களுடைய ஏகோபித்த வரவேற்பையும் பெற்ற அந்தப் படத்தின் வெற்றிக்குக் கமலுடைய ஒத்துழைப்பு ஒரு முக்கிய காரணம் என்பதை என் வாழ்நாள் முழுக்க நான் மறக்கவே மாட்டேன்.

★★ ரஜினியை வைத்து ஏ.வி.எம். எடுத்த படம் நல்லவனுக்கு நல்லவன். அதிலே ரஜினி ஒரு ரௌடி போல அறிமுகமாகி, வழக்கமான ரஜினி ஸ்டைல் காரியங்களைச் செய்வார். படத்தில் ரஜினி, மிகவும் சாந்தமான மனிதராகி, சொத்து ஏதும் தேவையில்லை என்று உதறி விட்டுத் தம் மனைவியின் போட்டோ ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு போவதாய் கிளைமாக்ஸை அமைத்து, சென்சாருக்கு அனுப்பப்பட்டு சர்டிபிகேட்டும் வந்து விட்டது. ஆனால் 'அந்தக் கலைநயம் மிக்க முடிவு, ரஜினி ரசிகர்களால் ஏற்றுக் கொள்ளப்படுமா?' எனச் சந்தேகம் வந்தது. படத்தின் இயக்குனர் கூட அப்படியே படத்தை முடிக்கலாம் என்றே அபிப்பிராயப்பட்டார். ஆனால், நான் ''எனக்கும் இந்த முடிவு பிடித்திருக்கிறது. ஆனால் எனக்குப் பிடித்தால் மட்டுமே போதாதில்லையா? ரசிகர்கள் தானே படத்தை வெற்றி பெறச் செய்பவர்கள்?'' என்று சுட்டிக் காட்டவே, ரஜினிக்கு ஒரு சண்டைக் காட்சியை கிளைமாக்ஸில் சேர்த்து, புதிய முடிவு தரப்பட்டது. படமும் ஹிட்.

★★ எல்லாப் படங்களும் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில்தான் எடுக்கப் படுகின்றன என்றாலும், பலவற்றின் ரிசல்ட், படம் ரிலீஸ் ஆகிற வரை சஸ்பென்ஸ் ஆகவே இருக்கும். எதிர்பார்த்ததற்கு மாறாகச் சில படங்கள் தோல்வியடையும். உதாரணம் 'அம்மா'. சில படங்கள் எதிர்பார்ப்புக்கு அதிகமாய் மாபெரும் வெற்றியை அடையும். இதற்குப் பல படங்களை உதாரணம் சொல்லலாம். ஆனால் சில படங்கள் தயாரிப்பிலிருக்கும்போதே, யூனிட்டில் ஒவ்வொருவருக்கும், 'நாம் ஒரு வெற்றிப் படத்திற்காக உழைத்துக் கொண்டிருக்கிறோம்' என்ற தன்னம்பிக்கையும், உள்ளுணர்வும் இருந்து கொண்டிருக்கும். அப்படிப்பட்ட உணர்வு, சமீபத்தில் 'சகலகலாவல்லவன்', 'பாட்டி சொல்லைத் தட்டாதே' ஆகிய இரண்டின் படப்பிடிப்பின் போதும் எங்களுக்கு ஏற்பட்டது.

★★ விசுவை, ஏ.வி.எம்.முக்காக ஒரு படம் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்ட போது, அவர் பல கதைகளைச் சொன்னார். எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை. விசுவே வெறுத்துப் போய் ஒரு கட்டத்தில், ''எனக்குப் படம் இயக்க வாய்ப்பு அளிக்கத் தயக்கமாய் இருந்தால், வெளிப்படையாய்க் கூறி விடுங்கள். ஆனால், இது போல, சொல்கிற கதைகளையெல்லாம் வேண்டாம் என்று சொல்லாதீர்கள்'' என்று கூறினார். விசுவிடமிருந்து எத்தகைய குடும்பக் கதையை எதிர்

(பேட்டிக்கு வந்த பையனிடம்)
நிர்வாகி : ''என்னப்பா இது. உன் சர்ட்டிபிகேட்டில் நீ பி.ஏ. படித்ததாக இருக்கிறது. நீயானா போஸ்ட் கிராஜுவேட் என்கிறாய்?''
பேட்டிக்கு வந்த பையன் : ''ஆமாம் சார்! நான் பி. ஏ. கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸில்தான் படிச்சேன்!''
- லட்சுமி சுந்தரம்.



பார்க்கிறேன் என்று நான் விளக்கினேன். அதன் பின் அவர் சொன்ன ஒரு கதை எனக்கு அப்பீலிங்காக இருந்தது. ஆனால், ''சார்! இந்தக் கதை என்னுடைய 'உறவுக்குக் கை கொடுப்போம்' என்கிற நாடகத்தின் கதை. இதை ஏற்கெனவே ஒரு இயக்குனர் வாங்கி, படமாய் எடுத்து ஒரு வாரம் கூட ஓடவில்லை'' என்றார் விசு. ''எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. நல்ல கதை, நிச்சயமாய் ஓடும். தைரியமாய் எடுக்கலாம்'' என்று கூறி விட்டு, அதற்கான உரிமைகளை வாங்கினேன். எல்லாத் தரப்பு மக்களையும் கவரும்படி ஒரு கதாபாத்திரத்தை சிருஷ்டிக்கும்படி நான் கூறியதன் பேரில், விசு உருவாக்கிய பாத்திரம்தான் மனோரமாவினுடையது. சிறிய பட்ஜெட் படமான அது, தமிழுக்குத் தேசிய அளவில் ஸ்வர்ண கமல் விருது வாங்கிக் கொடுத்தது. ஏ. வி. எம்.மிற்கே பெருமை சேர்த்தது. அதன் வெற்றிக்கு முக்கிய காரணம், கிளைமாக்ஸ் கிளப்பி விட்ட சர்ச்சைதான்.

★★ 'சம்சாரம் அது மின்சாரம்' படம் விருதுபெற்றது சற்றும் எதிர்பார்க்காதது என்றால், நிச்சயம் அவார்டு வாங்கும் என்று எதிர்பார்த்து நாங்கள் எடுத்த படம் ஒன்றுக்கு அவார்டு கிடைக்காமல் போனதில் எங்களுக்கு வருத்தம் உண்டு. அந்தப் படம் 'தியாகு'. மதுவிலக்குப் பிரசாரப் படமான தியாகுவை கமர்ஷியலாய் வெளியிட முடியாது என்று தெரிந்து தான் எடுத்தோம். ஆனால் எங்கள் துரதிருஷ்டம் கடும் போட்டி காரணமாய் அவார்டும் கிடைக்கவில்லை. ஒருவேளை கிடைத்திருந்தால், அவ்வப்போது விருதுக்கென்றே படம் எடுப்பதைப் பழக்கமாக்கிக் கொண்டிருப்போம். தியாகு படத்தைத் தமிழக அரசு கேட்ட போது, பணமேதும் வாங்கிக் கொள்ளாமல் கொடுத்தோம். அது தமிழகம் முழுதும் இலவசமாய்க் காட்டப்பட்டது.

★★ ஒரு சுவாரசியமான விஷயம். மாநகரக் காவல் படத்துக்குப் பூஜை போட்ட போது, அது ஏ. வி. எம். மின் நூற்று ஐம்பதாவது படம் என்று எங்கள் யாருக்குமே தெரியாது. திடீரென ஒருநாள், எங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த அர்ஜுனன் என்னிடம் வந்து, ''சார்! கணக்குப் பண்ணிப் பார்த்தால், மாநகரக் காவல், நம் நிறுவனத்தின் நூற்றைம்பதாவது படம்'' என்றார். அப்புறம்தான் விழித்துக் கொண்டோம்.

தொகுப்பு : எஸ். சந்திரமௌலி.

அட்டையில் : 'அல்லி அர்ஜுனா' - 'மாநகரக் காவல்' படக் காட்சிகள்

கல்கி

ஆகஸ்டு 4௨



பொன்விழா ஆண்டு மலர்

சுஜாதா

எழுதும் புதுமைத் தொடர்

கம்ப்யூட்டர் கிராமம்



தண்ணீர் விடச் சொல்லுங்க, காவேரியில தண்ணீர் விடச் சொல்லுங்க...
உனக்கும் பெப்பே... நடுவர் மன்றத்துக்கும் பெப்பே...



உல்ஃபா தீவிரவாதிகள்
வா, வா...
வந்து மாட்டிக்க... வா!
கொலை செய்யப்பட்ட ரஷ்யர்



சபாநாயகர் தேர்வுக்கு ஒத்துழைப்புக் கொடுங்க...
நம்ம ஆளுதான் சபாநாயகர், சம்மதமா?
!
உங்க ஆளு சபாநாயகர், நம்மாளு துணை சபாநாயகர்!



கல்கி

1991 ஜூலை 21
மலர் : 49 இதழ் : 51
பிரஜோத்பத்தி ஆடி 5



முதல் கோணல்!

''நான் ஒரு பெண் என்பதால், 'ஒரு பெண், அதுவும் 'இந்தப் பெண்' ஆட்சியில் அமர்வதா?' என்ற ஆத்திரத்தில் இப்படியெல்லாம் தொல்லை கொடுக்கிறார்கள்'' என்கிறார் முதல்வர். ஒரு பெண் என்பதாலேயே ஒரு முதல்வர் எந்தவித சலுகையும் எதிர்பார்க்க முடியாது என்பதையும் அவர் உணர வேண்டும்.

''பொதுவாக நூறு நாட்கள் வரை ஒரு புதிய ஆட்சியை யாரும் விமர்சனம் பண்ண மாட்டார்கள்'' என்று ஆதங்கத்துடன் கூறுகிறார் முதல்வர். உண்மைதான். ஆனால் பத்து தினங்களுக்குள் தமது நடத்தையால் ஒரு முதல்வர் விமர்சனத்தை வருவித்துக் கொண்டால் அது அவர் தவறே தவிர, விமர்சகர்கள் தவறு அல்ல.

ஆளுனர் தமது உரையைப் படித்துக் கொண்டிருந்த போது கூடவே தமது ஓர் உரையையும் படித்துக் கொண்டிருந்த பண்ருட்டியாரின் செயலோ, அவரை முதுகில் பாய்ந்து வந்து அடித்த (அல்லது தட்டிய) தாமரைக்கனியின் செயலோ சரியானது என்று யாருமே ஒப்புக் கொள்ள மாட்டார்கள். 'முதல்வர் மன்னிப்புக் கோர வேண்டும்' என்ற பண்ருட்டியாரின் கூற்றும், 'மன்னிப்புக் கோரும் வரை உண்ணாவிரதம்' என்று ஆரம்பித்த ராமதாஸ் அவர்களின் போக்கும் மிக மிகத் தவறானவை. தேவையற்ற அதீதமான எதிர்ச் செயல்கள். இதையொட்டி நடந்த வன்முறைகள் கண்டனத்துக்குரியன. மக்களுக்குச் சொல்லி முடியாத துன்பத்தையும் வரி செலுத்தும் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் நஷ்டத்தையும் ஏற்படுத்தின. 'முதல்வர் மன்னிப்புக் கோர வேண்டும்' என்று நிபந்தனை விதித்து உண்ணாவிரதம் இருப்பதற்குப் பதில், 'தமக்கும் தமது தொண்டர்களுக்கும் சாத்துவிக எதிர்ப்பு என்றால் என்ன என்பது புரிய வேண்டும்' என்பதற்காக டாக்டர் ராமதாஸ் உண்ணாவிரதம் இருக்கலாம்!

இது ஒருபுறமிருந்தாலும் பாட்டாளி மக்கள் கட்சி தலைவர்களும் தொண்டர்களும் இம் மாதிரிதான் நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்த்து, அதன் பின்விளைவுகளையும் யோசித்து, இதற்கெல்லாம் இடம் தராத வகையில் சாணக்யமாக நடந்து கொள்கிறவரே சிறந்த முதல்வர் என்று பெயரெடுக்க முடியும். அவ்வாறின்றி, ஒன்றிலிருந்து ஒன்றாகப் பல அசம்பாவிதங்கள் கிளைத்தெழ அனுமதித்து விட்டு, வன்முறை காரணமாக ஏற்பட்ட நஷ்டத்துக்குச் சட்டசபையில் கணக்குச் சொல்பவர் கெட்டிக்கார முதல்வர் என்று கருதப்பட மாட்டார்.

தாமரைக்கனியைத் தக்கவிதத்தில் கண்டித்து, அவருக்குச் சரியான தண்டனை கிடைக்கவும் வழிவகுத்திருந்தால்; ''பண்ருட்டியார் செய்தது தவறுதான், ஆனாலும் அவருக்கு நேர்ந்த அவமானத்துக்காக இந்தச் சபையே வருந்துகிறது'' என்று கூறியிருந்தால் முதல்வர் குறிப்பிடுகிற ''சதித் திட்டம்'' பிசுபிசுத்துப் போயிருக்கும். இத்தனை வன்முறைகளும் மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களும் தவிர்க்கப்பட்டிருக்கும்.

ஆனால் ''தான்'' என்ற எண்ணம் இருதரப்புத் தலைவர்களுக்கும் கௌரவப் பிரச்னையாக வளர்ந்து - வளைந்து கொடுக்க முடியாமல் தடுத்து, மக்களுக்குத் துன்பமாய் முடிகிறது. பண்ருட்டியாரின் தண்டனையைக் குறைக்க முதல்வரால் சபாநாயகருக்குச் சிபாரிசு செய்ய முடியுமெனில், தாமரைக்கனியை இன்னும் சற்றுக் கடுமையாகத் தண்டிக்கவும் கண்டிக்கவும் முதல்வரால் முடியும்தானே? பத்திரிகைப் புகைப்படக்காரர்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்துக்கு முதல்வர் வருத்தம் தெரிவிக்க முடியுமெனில், பண்ருட்டியாருக்கு ஏற்பட்ட அவமானத்துக்கு வருத்தம் தெரிவிப்பதில் என்ன தயக்கம்?

'அச்சுறுத்தலுக்குப் பணிய மாட்டேன்' என்று வீராவேசமாகப் பேசுகிறார் முதல்வர். அது சரிதான்; ஆனால் அச்சுறுத்தலாக நிலைமை வளரு முன்னரே பிரச்னையைச் சமாளிப்பதுதான் சாமர்த்தியம். மாறாகத் தமது அதிகார பலத்தைக் காட்டி, போலீஸ் தடியடி, மண்டை பிளப்பு என்றெல்லாம் வளர்த்தால் அது அபரிமித மெஜாரிட்டி உருவாக்கிய ஆணவமாக - சர்வாதிகாரமாகக் கருதப்பட வாய்ப்புண்டு. அபரிமித மெஜாரிட்டி அபரிமித அடக்கத்துடன் கைகோத்து நடக்க வேண்டும்.

முதல் கோணல், முதல் கோணலாக மட்டுமே முடிந்து போகட்டும்; முற்றும் கோணலாகி விடாமல் முதல்வர் முன்னெச்சரிக்கையுடன் செயல்படட்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிட்டி பாப்பா - பாரதியார்.

வட்டமேஜை

O கருணாநிதி முந்தைய ஆட்சியிலே முதல்வர். மூன்றில் இரண்டு பங்கு பேர் அவர் கட்சியைச் சேர்ந்தவர்கள். அப்படி இருந்தபோதே ''பட்ஜெட்'' உரையைப் படிக்க எழுந்த அவரைக் கண்ணாடி கீழே விழத் தாக்கி, கையிலிருந்த ''பட்ஜெட்'' உரையையும் பிடுங்கி கிழித்தெறிந்த கூட்டம் இன்று ஏறக்குறைய சபை முழுவதும் நிரம்பியிருக்கையில் அவரைப் பேச விடுவார்களா? சட்டமன்றத்தில் அவருக்குப் பாதுகாப்பு இருக்காதே. இதை எண்ணிப் பார்க்கும் போது கருணாநிதி பதவியை ராஜினாமா செய்தது சரி என்றே தோன்றுகிறது. அவ்வப்போது சட்டமன்றம் சென்று கையெழுத்துப் போட்டு விட்டுத் தம் பதவியை அவர் காப்பாற்றிக் கொள்ள முயலவில்லையே!

சென்னை - 14, பொ. வஜ்ரவேலு.

O ஜெயலலிதாவின் மிகைப்படுத்தப்பட்ட முழக்கத்தையும், மன்மோகன் சிங்கின் யதார்த்தமான அறிவிப்பையும் ஒப்புநோக்கி எழுதப்பட்டிருந்த 'முதல் தவறுகள் மூன்று' தலைப்பிலான தலையங்கம் நன்கு சீர்தூக்கி எழுதப்பட்டிருந்தது.

மொரட்டுப்பாளையம், இராஜேஸ்வரன்.

O ஒரு பெண் தன் உயிரையும் துச்சமாக நினைத்து, 'விடுதலைப் புலிகளை ஒடுக்குவோம்' என்று சொன்னால், அது உமக்கு யதார்த்த நிலையை உணராத பேச்சாகத் தெரிகிறதா? விடுதலைப் புலிகள் மக்களைத் தாக்கவும், ரயில், விமான நிலையங்களில் குண்டு வைக்கவும் நீரே சொல்லிக் கொடுப்பது போலிருக்கிறதே!

தஞ்சாவூர், வெ. முருகானந்தம்.

O அசுர பலத்துடனிருக்கும் ஆட்சியாளர்களுக்குச் சற்றும் அஞ்சாமல், நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் கொண்டு, யதார்த்த நிலைமையை விளக்கிய அருமையான தலையங்கத்திற்குப் பாராட்டுக்கள்!

சென்னை - 30, புளியரை கணேசன்.

புலிகளுக்கு நீரே சொல்லிக் கொடுப்பீரோ!

O ''முதல் காதல்'' முற்றிலும் மாறுபட்ட சிறுகதை. பிஞ்சு உள்ளத்தில் ஏற்படும் ஒருவித இனம் புரியாத உணர்ச்சியை எளிமையாக, நேரடியாக உணர்த்தியிருந்தார் ம. வெ. சிவகுமார்.

சித்தோடு, சந்தனப்ரியன்.

O ''பெண்கள் தங்களுக்குள்ள தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும், தாழ்வு மனப்பான்மையை அகற்றிக் கொள்ளவும் கல்கி இதழ் பெரிதும் உதவி வருகின்றது. தங்கள் இதழில் வெளியாகும் எந்தவொரு கதையையும் நேரத்தைப் போக்குவதற்காக மட்டும் படித்து விட்டு ஒதுக்கி விட முடியாது. ''துரோகம்' சிறுகதையும் அப்படித்தான்!

தக்கோலம், அ. முஸ்தபா.

O நவீன ஓவியங்களை, இந்த வாரக் கல்கியைப் படிக்கும் வரை, வெறும் கிறுக்கல்கள் என்றுதான் கருதி வந்தேன். ஆனால் இவ்வகை ஓவியங்கள் உருவங்களை விட உணர்வுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன என்பதை அறிந்து கொண்டேன். ''பார்வை''யை மாற்றிய கட்டுரையை வெளியிட்ட கல்கிக்கும், விட்டல் ராவுக்கும் யோசனை தெரிவித்த வாசகருக்கும் வாழ்த்துக்கள்.

புவனகிரி, ச. அருட்செல்வன்.

O ஒவ்வொரு மாணவரின் கட்டுரையையும் படித்த போது இயற்கையாகவே மனத்தில் ஒரு உற்சாகம் உண்டாயிற்று. இந்த வார இதழைப் பத்திரப்படுத்திக் கொண்டேன். சோதனைகள் வரும் காலத்தில், படித்து விட்டு, அவற்றைச் சாதனையாக மாற்ற ஊக்கப்படுத்துமே!

மதுரை - 2, எஸ். ஏ. நாகேந்திரன்.

O எதிர்ப்பு, இடைஞ்சல், என்றால் ஆமையாக அடங்கிப் போய் விடும் இன்றைய ஆண்களின் மத்தியில், சலசலப்புக்கு அஞ்சாமல், சமுதாயப் பணி ஆற்றிட முன்வந்திருக்கும் அரவக்குறிச்சி எம். எல். ஏ. மரியம் உல் ஆசியாவை, மனதார வாழ்த்துவதோடு அவரின் துணிவையும் பாராட்டுகிறோம்!

கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

O புதிய பிரதமரின் படத்தை அட்டையில் வெளியிட்டு விட்டு, அரசு அடகு வைத்த தங்கத்தை மீட்க முடியுமா? என்று கட்டுரையின் கேள்வியினை கீழே பிரசுரித்திருப்பது புதிய அரசுக்கு ஒரு சவாலான கேள்வியாக இருக்கிறதே!

திருச்சி - 2, ஆர்க். எழிலன்.

O கல்கி 7.7.91 இதழில் தராசு பதில்கள் பகுதியில் மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், ஹிமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பாரதிய ஜனதா 1989 தேர்தலை விடக் குறைவான தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் அதே மாநிலங்களில் பாரதீய ஜனதா கட்சி முறையே +5.03%, +10.49%, +4.13% சதவிகித வாக்குகள் கூடுதலாக 1989 தேர்தலை விடப் பெற்றுள்ளது.

ஆத்தூர், ஆர். குருப்பிரசாத்பட்.



முரட்டுக் கைதி, போலீஸ் லாக்கப், தொடரும் கம்பிகள், பறவை பார்வையில் சிறை, ஆக்ரோஷ அடிதடிகள், தப்பிப்பு, எதிரியைப் பழிவாங்குதல் என வழக்கமான திரைப்படக் கல்லூரி மாணவர்களின் ஃபார்முலாவை இங்கு மணிரத்தினத்தின் முன்னாள் சகா சுபாஷ் கையாண்டிருக்கிறார்.

பலன்?

பத்து நிமிடத்திலேயே படத்தில் என்ன மிச்சம் என்று இலகுவாகப் புரிந்து, தட்டுப் படுவது ஆயாசம்.

முதல் கதாநாயகன் காமிரா! அட்டகாசமான கோணங்கள், புதுப்புது அழகுடன் நிலைக்களன்கள் என்று பிரமாதப்படுத்தி இருக்கிறது.

இரண்டாவது கதாநாயகன் (!?) பிரபுவுக்குப் பழகின வேடம். அனாயாசமாக வந்து நடிக்கிறார். ஆனால், மனுஷர் வில்லனை, அவருக்குத் துணை போகும் காவலதிகாரியை விட்டு விட்டு, ரேவதியைக் குறிவைப்பதுதான் பரிதாபம். கதையின் ஒட்டையால் பாவம்... சின்னதம்பி பிரபு சாண் ஏறி இரண்டு முழம் சறுக்கியிருக்கிறார்.

ரேவதி மன்னிக்க : இனி மூத்த மருமகள், குடும்பத்துக்கு உழைக்கும் அக்கா மாதிரி கேரக்டர்களில் மட்டுமே நடிப்பதை யோசித்துப் பார்ப்பது ரசிகமகா ஜனங்களுக்குப் பேருதவி.

'பாடுது பாடுது' - பாடல் 'சபாஷ்' ரகம். 'ஒரு ராக்கோழி' - பாடல் சுபாஷ் ரகம். மற்றபடி சங்கர்-கணேஷ் இசை நமக்கு வசையே. நிற்க. அழகாய்த் தெரிந்தாலும் ஐம்பது லட்ச ரூபாய்க்கு யாராவது ஒரு கண்ணாடி டம்ளரை வாங்க முனைவார்களா? நடந்திருக்கிறது. அதை 'ஜிணுங்'கென்று கீழே போட்டு உடைப்பார்களா? நடந்திருக்கிறது. விலை உயர்ந்த ஏமாற்றம்!

-சுந்தர்ஜி.



❖ வாடகைக்கு ஸ்கூட்டர்...



❖ வரதராஜன்

வாடகைக்கு: வாக்குவம் கிளீனர் முதல் வாகனங்கள் வரை!

சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன் அருகே உள்ள பிக்னிக் ஹோட்டலில் ஒரு புதுவிதமான வசதி... கார்கள், இரண்டு சக்கர வாகனங்களைத் தேவையான காலத்துக்கு வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம். இந்த வசதியை வழங்குவது யூ-ரென்ட் என்ற நிறுவனம். இதன் ஒரு கிளையே பிக்னிக் ஹோட்டலில் உள்ளது. ஏராளமான பயணிகள் சென்னை வந்திறங்கியதுமே, தாங்கள் தங்கப் போகும் காலத்துக்கு வாகனங்களை வாடகைக்கு எடுத்துக் கொள்கிறார்கள்.

இந் நிறுவனத்தை ஆரம்பித்த வரதராஜன் அமெரிக்காவில் எம். பி. ஏ. படித்து, பதினைந்து ஆண்டுகள் அங்கேயே தங்கியவர். இந்தியா திரும்பியதும், பல்வேறு பொருள்களை வாடகைக்குப் பெறக் கூடிய மேற்கத்திய நாடுகளின் வசதியை நம் நாட்டிலும் வழங்கினால் பொது மக்களுக்கு உபயோகமாக இருப்பதுடன் லாபகரமாகவும் இருக்கும் என்ற எண்ணத்தில் யூ-ரென்டைத் துவக்கினார்.

''இந்தியாவில் கார்களை விட இரண்டு சக்கர வாகனங்களுக்கு அதிகத் தேவை இருப்பதால் ஆரம்பத்தில் அவற்றை வாங்கி வாடகைக்குக் கொடுக்க எண்ணினேன். இப்போது எங்கள் நிறுவனம், வாக்குவம் க்ளீனர், வி. சி. பி., டி.வி., வீடியோ காமெரா, கம்ப்யூட்டர்கள், ஃப்ரிட்ஜ், டிரான்ஸ்ஃபார்மர், ஸ்டெபிலைஸர், ஐஸ்க்ரீம் மேக்கர், பெட்ரோமாக்ஸ் காஸ் சிலிண்டர், பெரிய சைஸ் காஸ் அடுப்பு பர்னர்கள் போன்ற பல விதமான பொருள்களை வாடகைக்குத் தருகிறது. இவற்றுக்கு நாளொன்றுக்கு இருபது முதல் இரு நூறு ரூபாய் வரையிலான வாடகை, பொருளுக்குத் தக்கபடி, வசூலிக்கப்படுகிறது...'' என்கிறார் வரதராஜன்.

''எந்தப் பொருள்கள் அதிகமாக வாடகைக்கு எடுக்கப்படுகின்றன...?''

''இரண்டு சக்கர வாகனங்கள் தவிர, கோடை விடுமுறையில் 'பாபுலராக' இருந்

குழந்தை மேதை குஞ்சப்பா



தவை வி. சி. பி. யும் ஐஸ்க்ரீம் தயாரிக்கும் கருவியும். இவற்றுக்கு முறையே இருபது, பத்து ரூபாய் வாடகை... ஆட்டோவில் அவசரத்துக்கு வெளியே போனால் பதினைந்து - இருபது ரூபாய் செலவாகும். எங்களிடம் ஒரு மணி நேரத்துக்கு ஐந்து ரூபாய் என்ற கட்டணத்துக்கு இரண்டு சக்கர வாகனங்கள் வாடகைக்குக் கிடைக்கின்றன. போக்குவரத்து நெரிசல் இல்லாத நேரத்தில் பெண்கள் கூட இந்த வண்டிகளை வாடகைக்கு எடுத்துச் சென்று தங்கள் வேலைகளை முடித்துக் கொள்கிறார்கள்.''

''யார் வேண்டுமானாலும் பொருள்களை வாடகைக்குப் பெற முடியுமா?''

''தனி நபர்கள், எழுபத்தைந்து ரூபாய் ஆண்டுக் கட்டணம் செலுத்தி, யூ ரெண்ட் உறுப்பினராக வேண்டும். அவர்களுக்கு அடையாள அட்டை (போட்டோவுடன் கூடியது) தருவோம். அட்டையின் ஒரு பிரதி எங்களிடம் இருக்கும். ஒரு குடும்பம் முழுதும் உறுப்பினராக ரூ. 150 கட்டணம். நிறுவனங்கள் ரூ 250 செலுத்தினால், அவர்களுடைய ஊழியர்கள் எல்லோரும் எங்களிடம் பொருட்களை வாடகைக்குப் பெறலாம்... புதிய உறுப்பினர் சேரும் போது, 'இரண்டு வருடங்களுக்கு மேலாக அவரைத் தெரியும்' என்று குறிப்பிட்ட அறிமுகக் கடிதத்தை வேறு இரண்டு நபர்கள் வழங்க வேண்டும்... தவிர, அவர் கொடுக்கும் விண்ணப்பத்தில், தமக்குத் தெரிந்த மேலும் இரு நபர்களின் பெயர், விலாசம் குறிப்பிடப்பட வேண்டும்...''

''ஏமாற்று வேலைகளைத் தவிர்க்கத் தானே இந்த முன்னெச்சரிக்கை...?''

''பெரும்பாலானவர்களுக்கு ஏமாற்றும் நோக்கம் இருப்பதில்லை. அபூர்வமாய் ஒரு சம்பவம்: ஒரு வாடிக்கையாளர் எடுத்துச் சென்ற வண்டி. விபத்தில் சிக்கி போலீஸ் கேஸ் ஆனது. அந்த நபர் எங்களுக்கு அளித்திருந்த விண்ணப்பப் படிவத்தில் தமக்குத் தெரிந்த நபர் என ஒரு போலீஸ் அதிகாரியின் பெயரைக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் போலீஸுக்கு அவர் பேரில் சந்தேகம் ஏற்பட்டு விசாரித்த போது அவர் நீண்ட நாட்களாகக் காவல் துறையால் தேடப்பட்டு வரும் குற்றவாளி என்பது உறுதியாயிற்று! தம் மீது சந்தேகமே எழக் கூடாது என்பதற்காக விண்ணப்பத்தில் போலீஸ் அதிகாரியின் பெயரைக் கொடுத்திருக்கிறார்!.. வேறொரு நபர் குடித்து விட்டு எங்கள் வண்டியை எடுத்துப் போய் விபத்துக்குள்ளாகி இறந்ததும் மறக்க முடியாத அதிர்ச்சி....''

''பொருள்கள் திருப்பித் தரப்படாத பொழுதும், விபத்துகள் நிகழும் போதும் நஷ்டம் ஏற்படாதா?''

''இதுவரை திருப்பித் தரப்படாத அனுபவம் ஏற்படவில்லை. நாங்கள் எல்லாப் பொருள்களையும் இன்ஷுர் செய்திருக்கிறோம். விபத்தோ பழுதோ ஏற்பட்டால் ரூ 250 வரை, அங்கத்தினரிடம் ரிப்பேர் சார்ஜ் வாங்குகிறோம்.''

யூ - ரெண்டுக்கு மூவாயிரம் அங்கத்தினர்கள். சென்னையில் ஐந்து கிளைகள். தவிர, மதுரை, பெங்களூர், ஈரோடு, கோவை, திருச்சி, சேலம், ஊட்டி ஆகிய ஊர்களிலும் கிளைகள் உண்டு. உறுப்பினர்கள் எந்தக் கிளையிலும் வாடகைக்குப் பொருட்கள் பெற்றுக் கொண்டு, எந்தக் கிளையிலும் திருப்பிக் கொடுக்கலாம்!

புகார்களையும் புது யுக்திகளையும் எவரிடமிருந்தும் வரவேற்கும் வரதராஜன், கற்பனா சக்தி மிகுந்தவராகவும் இருக்கிறார். உதாரணமாக, 'வேலையில்லாத நபர்கள் தங்களிடம் வாக்குவம் க்ளீனர், வாஷிங் மெஷின் போன்றவற்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, ஒரு அடுக்கு மாடிக் கட்டடத்தில் உள்ள பல வீடுகளின் சலவை மற்றும் சுத்திகரிப்புப் பணிகளைச் செய்து லாபம் சம்பாதிக்கலாமே' என்று ஒரு யோசனை தெரிவித்தார்!

- நமது நிருபர்

நேற்றுவரை நந்தவனம்

15

காத்திருப்பதே கொடுமை. அதிலும் முன்பின் தெரியாதவர்கள் வீட்டில் மணிக் கணக்காகக் காத்திருப்பது மகா கொடுமை.

மீரா - எதிர் சுவரில் மாட்டியிருந்த கடியாரத்தைப் பார்த்தாள். அது மௌனமாய் நாலு என்று கை காட்டியது.

கடியாரத்துக்குச் சற்றுத் தள்ளி - தெய்வநாயகியின் புகைப்படம் பெரிதாய் என்லார்ஜ் செய்யப்பட்டு, நெற்றியில் அளவுக்குச் சற்று அதிகமாகவே குங்குமப் பொட்டு இடப்பட்டு, மாலை சூடி - பார்க்கிறவர் வயிற்றைக் கலக்குகிறாற் போல மாட்டப்பட்டிருந்தது.

தெய்வநாயகியின் தந்தை - மீராவைப் பார்த்தபடியே ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தாரே தவிர - ஒரு வார்த்தை பேசவில்லை. அவர் பேசியதெல்லாம் தம் மனைவியிடம்தான்.

''யாராம்?''

''நம்ம தெய்வா கூட ஸ்கூல்லே ஒண்ணா படிச்ச பொண்ணாம்...''

மீரா இடைமறித்தாள்.

''நான் அவங்க செட் இல்லீங்க. ஜூனியர். எங்க அக்காதான் அவங்களோட கிளாஸ்மேட். இந்த ஆக்ஸிடண்ட் நடக்கறதுக்குப் பத்து நாள் முன்னாலே எங்க அக்கா இங்கே பிரார்த்தனைக்காக வந்த இடத்துல பழைய சினேகிதியைச் சந்திச்சிருக்கா. அப்ப, என்னோட வேலை விஷயம் பத்திப் பேசியிருக்கா. நர்ஸிங்ஹோமை - நல்ல முறையில பராமரிக்கப் பொறுப்பான லேடி வேணும்னு உங்க மக சொல்லியிருக்காங்க. அப்புறம்தான் எத்தனையோ கோளாறெல்லாம் நிகழ்ந்து போச்சே.. இப்ப ஆஸ்பத்திரிய யார் கவனிச்சுக்கறாங்க. அந்த வேலை கிடைச்சா...''

''பொறுப்பெல்லாம் என் பிள்ளைகிட்டத்தான் இருக்கு. அவன் வெளியில போயிருக்கான்.''

''எப்ப வருவாரு?''

''யாருக்குத் தெரியும்? ஏற்கெனவே - அவனுக்கு இருக்கிற பிஸினஸ்ஸை எல்லாம் பார்த்துக்கவே நேரம் பத்தலை. இதுல ஆஸ்பத்திரி வேற.. யாருக்காவது வித்துடலாம்னா - ராசியில்லே. கட்டின ஒரு வருஷத்துக்குள்ளே டாக்டரே போயிட்டாங்கன்னு பேரு வேற!''

அந்த அம்மாள் நாசூக்காய்ப் புடவைத் தலைப்பில் கண்களை ஒற்றிக் கொள்ள - பெரியவர், இருந்த இடத்திலிருந்தபடியே குரல் கொடுத்தார்.

''ஏய்!''

''என்னங்க...''

''மணி ரெண்டாகுது. போய்ச் சாப்பிடு!''

''சாப்பிடறேன். சாப்பிடறதுக்காகத்தானே இந்த ஜென்மமே எடுத்திருக்கேன்.. ஏம்மா, உன் பேரென்ன?''

''மீரா...''

''போயிட்டு அப்புறமா வாயேன். போன் பண்ணிட்டு வந்தா - உனக்கும் வசதியாயிருக்கும்.''

''நான் இந்த ஒரு விஷயத்துக்காகத்தான் மெட்ராஸ்லேயிருந்து புறப்பட்டு இங்கே வந்தேன். உங்க வீட்டைத் தேடிக் கண்டுபிடிக்கவே இவ்வளவு நேரமாச்சு. ஊரை விட்டு ரொம்பவும் தள்ளி இருக்கே. திருப்பிப் போயிட்டு வர்றதுன்னா முடியாதுங்க. மேலும், இன்னிக்கு ராத்திரியே மெட்ராஸ் திரும்பறேன்.''

''வேலை தேடி வந்தா - அத்தனை 'நறுக்'காக் கிளம்ப முடியுமா? ஒரு நாள் - ரெண்டு நாள் தங்கத்தான் வேண்டியிருக்கும். ஏதோ செத்துப் போன என் மகளோட சினேகிதிக்குத் தங்கைன்னு சொல்றே.. அதனாலதான்..''

ஊஞ்சல் கிழவர் மறுபடி குரல் கொடுத்தார்.

''ஏய், என்ன பேச்சு! உள்ளே போ, சாப்பிடு..''

தெய்வாவின் தாய், மீராவைப் பார்த்து,

அனுராதா ரமணன்

விரக்தியுடன் புன்னகைத்தாள்.

''இவரும், தெய்வாவும் ஒரே மாதிரி. எல்லாம் காலாகாலத்துல நடக்கணும். வேளைக்குச் சாப்பாடு; மருந்து; ராத்திரி எட்டரைக்கெல்லாம் படுக்கை... சொன்னா சொன்ன நேரத்துல ஒரு காரியத்தைச் செஞ்சு முடிக்கணும்.. போறச்சே ரெண்டே நாளுல திரும்பி வர்றேம்மான்னு சொல்லிட்டுப் போனாளே.. வரலையே... இதை நான், யார்கிட்டப் போய்ச் சொல்லுவேன்...''

மீரா சங்கடத்துடன் நெளிந்தாள்.


''நீங்க வேணா போய்ச் சாப்பிட்டுட்டு வாங்களேன்...''

அந்த அம்மாள் அரை மனசுடன் நகர, மீரா, டீபாயின் மீது கிடந்த ஒரு பத்திரிகையை எடுத்துப் புரட்டினாள். மனமோ தான் பார்த்த அந்த வீடியோ காட்சியையே சுற்றி வந்தது. மனசுக்குள் கிளர்ந்தெழும் சந்தேகங்கள்...

''எம். எல். ஏ. தருமராஜனைக் கொல்லத்தான் யாரோ அவரது உடைமைக்குள் டைம்பாம்மை வைத்திருக்கிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம். நாகு மாமாவின் மீதுள்ள சந்தேகத்தை - தற்காலிகத்துக்கு ஒதுக்கி வைப்போம். தருமராஜனைக் கொல்லத் திட்டமிட்டது யாராக இருக்கும்?''

''குமரன்...?''

''இருக்க முடியாது. என்னதான் பகை



இருந்தாலும் தன் குழந்தையைத் தாயில்லாமல் தவிக்க விட - அவன் முயற்சி செய்ய மாட்டான். மேலும், ராஜேஸ்வரி அம்மாள் சொல்வது போல, குமரன் அம்மா பிள்ளை! தன் அம்மாவுக்கு இஷ்டமில்லாதது எதையும் அவன் செய்ய மாட்டான்.''

''ரவி...?''

''தெரியலை. எத்தனை சதவிகித சான்ஸ் இருந்திருக்குன்னு புலப்படலை.''

''நிர்மலா...?''

''அவளுக்கு ஏற்கெனவே தருமராஜன் பேரில் கோபம் இருக்கு. ஆனா, ஒரு பொண்ணுக்கு அத்தனை துணிச்சல் வருமா?''

நிர்மலாவுக்குத் தாம்பூலத் தட்டில், புடைவை வைத்துத் தரவில்லை என்பதினால் தருமராஜன் வெகுண்டு நாலு பேர் சுற்றியிருப்பதைக் கூட மறந்து, மனைவியின் கன்னத்தில் பளீரென அறைந்த வீடியோ காட்சியை அடுத்து, வேறு சில காட்சிகள் : தருமராஜனை ஒருசிலர் சுற்றி வளைத்துச் சமாதானப்படுத்தும் காட்சிகள்..

தொடர்ந்து ராஜேஸ்வரி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் ஒரு தட்டில் பட்டுப் புடைவை ஒன்றை வைத்து நிர்மலாவிடம் நீட்ட, காட்சி அத்துடன் முடிந்தது. அதே கூடத்தில் திட்டுத் திட்டாய்ப் பளீரிடும் பட்டுப் புடைவைகளில் ஜொலிக்கும் பெண்கள் கூட்டத்தைக் காமிரா படம் பிடித்தது.

இதோ நிர்மலா அனைவரிடமும் விடைபெறுகிறாள். சினேகிதர்களுடன் பேசிக் கொண்டிருந்த ரவி - தெய்வநாயகியின் தம்பியான ரவி - நிர்மலாவை வழியனுப்ப ஓடி வருகிறான்.

முன்னாலும் பின்னாலும் பக்கவாத்தியங்கள் மூட்டையைக் கட்டிக் கொண்டு நகர, தர்மராஜன் நெஞ்சை நிமிர்த்தியபடி நிர்மலாவை ஓட்டினாற்போல நடக்க - அவளுக்கு இன்னொரு புறத்தில் இருந்த ரவி ஏதோ சொல்ல - அவள் பளிச்செனச் சிரிக்கிறாள்.

அத்துடன் முடிந்திருந்தால் கூட - மீரா, இத்தனை அவசரமாய்க் கிளம்பி இங்கே வந்திருக்க மாட்டாள் - ரவியைக் காணும் நோக்கில்.

ரவி - யாருமே தங்களைக் கவனிக்கவில்லை என்கிற தைரியத்தில் 'சட்'டென நிர்மலாவின் பின் கழுத்தைத் தடவி - 'நறுக்'கெனக் கிள்ள - அவள் மெலிதாய்த் துள்ளி அவன் பக்கம் திரும்பி, போலிச் சிணுங்கலுடன் உதட்டைக் குவிக்க -

அவன் விஷமச் சிரிப்புடன் வேறு புறம் முகத்தைத் திருப்பிக் கொள்கிறான்.

இத்தனையும் கண்ணிமைக்கும்

பொழுதே வீடியோவில் பதிந்திருந்தாலும் - மீராவின் மனசுக்குள் பலப்பல கற்பனைகளைத் தோற்றுவித்து விட்டது.

ஆக, ரவிக்கும் நிர்மலாவுக்கும் பழக்கம் உண்டா? அவளின் பின் கழுத்தைக் கிள்ளும் அளவுக்கு அந்தப் பழக்கத்தில் நெருக்கம் உண்டா?

அப்படியானால் தர்மராஜனுக்கு இந்த விஷயம் தெரியாதா? இந்தக் காட்சியை அவர் கவனிக்காமல் இருந்திருப்பாரா? அப்படி கவனித்திருந்தால் - இருவருக்கிடையே மனஸ்தாபங்கள் வளர்ந்திருக்காதா?

அந்த மனஸ்தாபமே ஒருவரையொருவர் சாய்க்கும் அளவுக்குப் போயிருக்காதா?

ரவி வீட்டுக்கு வந்த போது மணி நாலு. ஹாலில் அமர்ந்திருந்தவளை ஓரக் கண்ணால் பார்த்தபடியே மாடிப்படி ஏறினான்.

"சாப்பிடலையா?"

ஊஞ்சல் கிழவர், இதை விசாரிக்கவே தான் இந்த வீட்டில் உயிரோடு இருக்கிற மாதிரி கேட்டார்.

"ஆச்சு..."

இதற்குள் அவன் தாய் வேகமாய் ஓடி வந்தாள்.

"இந்தாடா.. அந்தப் பொண்ணு உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கா. பேசிட்டுப் போ."

ரவி, மீராவை முழுசாய் ஒரு பார்வை பார்த்தான்.

"என்ன விஷயமானாலும் நாளைக்கு வாங்க..."

"நான் இன்னிக்கே ஊருக்குப் போகணும்.."

"போங்க. யார் வேண்டாம்கறாங்க?"

அவன் பேச்சில் தொனிந்த அலட்சியத்தைப் புரிந்து கொண்டும், மீரா அவனைப் பார்த்துச் சின்னதாய் - சினேகமாய்ச் சிரித்தாள்.

"போயிடலாம். இங்கே நான் வந்த விஷயம் நல்லபடியா முடிஞ்சிடுத்துன்னா... போற போக்குல இங்கே ஆபிரஹாம் பண்டிதர் தெருவுல ஒருத்தரைப் பார்த்துட்டுப் போகணும்... வழி தெரியாது."

ரவி மெள்ள ஒரு படி இறங்கி வந்தான்.

"ஆபிரஹாம் பண்டிதர் தெருவா?"

"உம். எப்படி எங்க அக்காவுக்கு உங்க அக்கா சினேகிதியோ, அது மாதிரி எனக்கு ஒரு சினேகிதி அந்தத் தெருவுல இருக்கா. நானும், அவளும் ஒண்ணா கொஞ்ச நாள் டான்ஸ் கத்துண்டோம். நான் விட்டுட்



> ''என் மனைவி என்னைப் பணம் கேட்டு நச்சரிக்கிறாள்! போன வாரம் நூறு ரூபாய் கேட்டாள். நேற்று ஐம்பது கேட்டாள். இன்று காலை ஐந்நூறு!''
> ''இவ்வளவு பணத்தை என்ன செய்கிறாள்?''
> ''எனக்கென்ன தெரியும்? நான்தான் கொடுப்பதில்லையே!''
> -பி. வி. சீனிவாசன்.

டேன். அவ இன்னமும்..''

ரவி, கலைந்து கிடந்த கிராப்பை ஒரு கையால் அழுத்தி விட்டபடி இறங்கி வந்தான்.

ஊஞ்சல் கிழவர் - தலையைச் சாய்த்து இவனையே கருடப் பார்வை பார்த்துக் கொண்டு உட்கார்ந்தார்.

''அம்மா, நான் இவங்களைக் கொண்டு போய்க் கமலா தியேட்டர் பக்கம் விட்டுட்டு வர்றேன். பை த பை... மிஸ்.. மிஸ்.. உங்க பேரு?''

''மீரா...''

''மிஸ் மீரா! நீங்க என்னை என்ன விஷயமாப் பார்க்க வந்தீங்க?''

''நான் கொஞ்சம் வித்தியாசமான 'ஜாப்' கிடைச்சா செய்யலாம்னு இருக்கேன் மிஸ்டர் ரவி. அதான் உங்க அக்காகிட்ட எங்க அக்கா பேசியிருக்கா. ஊருக்கு வந்து என்கிட்ட விஷயத்தைச் சொல்லி, நான் கிளம்பறதுக்குள்ளத்தான் இத்தனை அசம்பாவிதமாயிடுச்சு...''

''எஸ்... எஸ்... இப்ப நினைச்சாக் கூட ராத்திரி தூக்கம் வராது...''

அவள் ரவியுடன் நடந்து வந்து, வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் ஏறினாள்.

காரைக் கிளப்பியபடியே அவன் கேட்டான்.

''இங்கே கமலா தியேட்டர் கிட்ட...''

''என் ஃபிரண்டு நிர்மலான்னு. அவளுக்குக் கூட இந்த வேலை பத்தி எழுதிக் கேட்டேன். அவ எழுதியிருந்தா. 'டாக்டர் தெய்வநாயகிய மட்டும் எனக்கு நல்லாத் தெரியும். ஆனா எங்களுக்குள்ளே அத்தனை நல்ல முறையில நட்பு கிடையாது. அவங்க அப்பா, அம்மாவுக்கு என்னைக் கண்டாலே ஆகாது. இந்த லட்சணத்துல நான் எப்படி உனக்காக சிபாரிசு செய்வேன்னு வருத்தப்பட்டு எழுதியிருந்தா பாவம். அவளுக்கு என்ன பிரச்னையோ?''

ரவி, பாதையிலிருந்து பார்வையை அகற்றாமல் கூறினான் :

''பெரியவங்களோட பிடிவாத குணத்தாலேதான் பிராப்ளமே வருது. நிர்மலா இதுவரைக்கும் உங்களைப் பத்தி என்கிட்ட சொன்னதே இல்லையே.''

''அட, நிம்மிய உங்களுக்குத் தெரியுமா சார்?''

அவன் சற்றுத் தயங்கி, அவளைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தான்.

''உங்க சிநேகிதிய நான்தான் கல்யாணம் செஞ்சுக்கப் போறேன்.''

''அவளுக்கு ஏற்கெனவே...''

''கல்யாணமாகல்லே. இந்த ஊர் எக்ஸ் எம். எல். ஏ. என் அக்கா மாமனார் - அவளை, சீதையை ராவணன் சிறை வைக்கிற மாதிரி வச்சிருந்தார். இனிமே அந்தக் கவலை இல்லை. அந்த ஆளோட சரித்திரம் முடிஞ்சிடுத்து...''

மீரா பொய்யாய் வியப்பைக் காட்டினாள்.

''ஏற்கெனவே குழந்தை இருக்கற பொண்ணைக் கட்டிக்க முன்வந்தது பெரிய சாதனை மிஸ்டர் ரவி. ஆமா.. கேட்க மறந்துட்டேன். ஆஸ்பத்திரி தவிர உங்க பிஸினஸ் என்ன?''

''வெளிநாடுகளுக்கு கிரானைட் கல் - பாலீஷ் பண்ணி ஏற்றுமதி செய்யறது..''

''கிரானைட்டா?''

''ஒருவிதமான கறுப்பு கல்லு... இங்கே எனக்குச் சொந்தமான இடத்துல நிறைய இருக்கு. பாறை மாதிரி இருக்கும். அதை உடைச்சு, பாலீஷ் பண்ணி அனுப்புவோம்..''

''உடைச்சா..? எப்படி உடைப்பீங்க?''

''ஸிம்பிள். பாம் வச்சுத்தான் தகர்ப்போம்!''

கார் ஒரு சின்னக் குலுக்கலுடன் நின்றது.

''நிம்மி வீடு வரைக்கும் நான் வர்றதில்லே. நீ போய்ப் பார்த்து, அவ இருந்தா, கார்லே நான் வெயிட் பண்ணறதாச் சொல்லி அழைச்சிட்டு வாயேன்...''

மீரா - அவனையே இமைக்காமல் பார்த்தபடி இறங்கியவள் - நிர்மலா வீடிருக்கும் சந்தில் நுழைந்து வேகமாய் வேறு தெருவுக்குள் திரும்ப -

அவன் மீது மோதி விடுவது போல வந்த மோட்டார் சைக்கிளில் குமரன்.

(தொடரும்)

நிழலுக்குப் பின் நிஜங்கள் - 8

வாழ்க்கை உதிர்க்கும் வசனங்கள்!

நண்டும் சிண்டுமாக, பலப்பல தம்பி, தங்கைகளின் எதிர்கால வாழ்க்கையைத் தலையில் சுமந்து கொண்ட ஒரு மூத்த அண்ணன், முதல் தங்கையின் கல்யாணத்துக்கு உதவி கேட்டு என் முன் வந்து நின்றான்.

''ஏண்டா, வாழ்க்கைலே பண்ணப் போற முதல் காரியம். இதுவே உன்னாலே முடியலையே. கடன் வாங்கினாத்தான் முடியும் அப்படிங்கற கட்டாயம் இருக்கே. எப்படிடா மத்த எல்லாரையும் கரையேத்தப் போறே? மலைப்பா இல்லையா?''

''என்ன சார் பண்றது? நான் வண்டிலே பூட்டப்பட்ட மாடு. எத்தனை பாரத்தை என் முதுகிலே எங்கப்பா ஏத்தினார்ன்னு எனக்கே கணக்குத் தெரியாது. இழுக்க முடியலை. வாய்லே நுரைக்குது. 'பொருளாதாரச் சீர்குலைவு'ங்கற ரோடு, என் முன்னாடி மேடு பள்ளமா இருக்கு. ஆனா எங்கப்பா மாட்டுக்காரனா வண்டியிலே உட்கார்ந்துக்கிட்டு ஓடு ஓடுன்னு சாட்டையாலே அடிக்கறாரு.''

நடைமுறை வாழ்க்கையில் சாதாரணமாகப் பேசப்பட்ட இதுபோன்ற வசனங்கள், சினிமா வசனங்களை 'டெபாசிட்' இழக்கச் செய்திருக்கின்றன.

நாடக நாட்களில் ரயில் வண்டியில் குழுவோடு பிரயாணம் செய்து கொண்டிருந்தோம். கூடவே ஒரு வடக்கத்திய கல்யாண கோஷ்டி. அந்தக் கல்யாண கோஷ்டியில் எல்லாருக்கும் மூத்தவரை, பேரன், பேத்தி, மகன், மருமகள், மகள், மாப்பிள்ளை, மனைவி அத்தனை பேரும் மிரட்டிக் கொண்டிருந்தார்கள். அவருக்கு வாய்க்குப் பிடித்ததைச் சாப்பிடக் கொடுக்காமல் அவரது 'வயதை'க் காரணம் காட்டினார்கள். எல்லாரும் அரட்டை அடித்துக் கொண்டிருந்த போது, அவருக்கு மட்டும் படுக்கையை விரித்து, கட்டாயமாகப் படுக்க வைத்து, அகோரமாக ஆளாளுக்குத் தாலாட்டுப் பாடித் தூங்கச் செய்து விட்டார்கள். எனக்கு என்னவோ போல ஆகிவிட்டது. மனிதரை அவர் இஷ்டத்துக்கு விட்டால் என்ன என்று நினைத்தேன்.



மறுநாள் காலை. பாத்ரூம் அருகே மனிதரை மறுபடியும் பார்த்தேன்.

''என்ன சார் உங்க வீட்டிலே உங்களை ஆனாலும் ரொம்பத்தான் படுத்தறாங்க?''

மூன்றாவது மனிதரிடம் பேசுகிறோம் என்பது கூட புரியாமல் மனிதர் பொலபொலவென்று கொட்டி விட்டார்:

''தம்பி! முன்னாடியெல்லாம் மனுஷன், மாடு, நாய், கொக்கு எல்லாத்துக்குமே வாழ்க்கை அதிகபட்சம் நாற்பது வருஷம்தான். அப்ப மாடு, நாய், கொக்கு மூணும் கடவுள்கிட்டே போச்சாம். ''ஆண்டவா! எங்களுக்கு நாற்பது வருஷ வாழ்க்கை அதிகம். அதை இருபதா குறைக்கக் கூடாதா? அப்படின்னு கேட்டுச்சாம். ஆண்டவனும் அதுக்குச் சம்மதிச்சு அதுங்களோட வாழ்க்கையை இருபது வருஷமாக் குறைச்சாராம்.

''உடனே மனுஷனும் ஆண்டவன் கிட்டே ஓடினானாம். என்னப்பா உன் வாழ்க்கையையும் குறைக்கணுமான்னு ஆண்டவன் கேட்டாராம். ஆனா மனுஷ புத்திதான் தெரியுமே. எனக்கு நாற்பது வருஷ வாழ்க்கையே குறைச்சல். அதனாலே மாடு, நாய், கொக்கு மூணும் வாபஸ் பண்ணின அந்த மூணு x இருபது =

அறுபது வருஷ வாழ்க்கையையும் என் நாப்பதோட கூட்டி ரவுண்டா நூறுன்னு ஆக்கக் கூடாதான்னு கேட்டானாம். ஆண்டவனும் சிரிச்சுக்கிட்டே சம்மதிச்சிட்டாராம்.

''அதான் தம்பி! முதல் நாப்பது வருஷ வாழ்க்கை மனுஷ வாழ்க்கை. அதிலேதான் போட்டி, பொறாமை, எல்லாம்.

''அடுத்த இருபது வருஷ வாழ்க்கை மாட்டோட வாழ்க்கை எதையும் காதிலே போட்டுக்காம பாரத்தை இழுக்கறோம்.

''அடுத்த இருபது வருஷ வாழ்க்கை நாய் வாழ்க்கை. சில பேருக்கு வீட்டு நாய் வாழ்க்கை அமையுது. சில பேருக்குத் தெரு நாய் வாழ்க்கை அமையுது. எனக்கு அமைஞ்சது வீட்டு நாய் வாழ்க்கை. எப்ப வேணுன்னாலும் சுதந்திரம் கிடைக்கும். எப்ப வேணுன்னாலும் கட்டிப் போட்டுடுவாங்க.''

என்னால் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ''அதென்ன சார் 'கொக்கு' வாழ்க்கை?'' என்று கேட்டேன்.

''ஒத்தக் கால்லே அந்த 'மரணம்'ங்கற மீனுக்காகத் தவம் இருக்கறதுதான் கொக்கு வாழ்க்கை'' என்று முடித்தவர் என் கண்களில் க்ஷணப் பொழுதில் கண்ணீர் வரவழைத்து விட்டார்.

சிறு வயதில் துடுக்குத்தனமாகவும், வீராப்புடனும், அடங்காத காளையாகவும் இருந்த ஒரு பையனுக்குக் கல்யாணம் ஆகியது. கல்யாணம் ஆனவுடன் 'அவன்' மொத்தமாக மாறி விட்டான் என்று பலர் சொல்லிக் கேள்விப்பட்டேன். அவனைப் பார்க்க முடியவில்லை. ஏழெட்டு வருடங்கள் கழித்து அவன் மட்டும் வீட்டுக்கு வந்திருந்தான். எனக்கே அவனைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. வேட்டி, சொக்காய், விபூதி, குங்குமம், பதவிசு, பவ்யம். எதுவுமே அவனுக்கு ஒட்டவில்லை. என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. ''என்னடா இது? ஆளே மாறிட்டே?'' என்றேன்.



அவன் கண்களில் நீர்முத்திட்டு நின்றது. ''மாமா! வண்டி, தண்டவாளம் இரண்டும் ஓட ஆசைப்பட்டா முடியுமா? வண்டி ஓடணும். தண்டவாளம் அங்கேயே இருக்கணும். என் வீட்டிலே தண்டவாளம் ஓட ஆசைப்பட்டது. வேறே வழி! வண்டி நின்னுடுச்சு. இப்ப எதுவும் தடம் புரளாது இல்லையா! ஆனா தண்டவாளம் மட்டும் ஓடினா போக வேண்டிய ஊருக்குப் போய்ச் சேர முடியாதுன்னு அந்த தண்டவாளத்துக்கு இப்பப் புரியலை. அதைத் தண்டவாளம் புரிஞ்சுக்கப் போற போது இந்த வண்டியாலே ஓட முடியுமான்னு தெரியலை.''

புது மனைவிகள் தெரிந்து கொள்ள வேண்டிய வேதம்!

என் நண்பன் ஒருவன், பணக்காரத் தகப்பனாரின் ஒரே மகன். 'ஊதாரி' என்று அவனது தாயார் தகப்பனார் அவனைச் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த வயதில் என்னால் அதை ஒப்புக் கொள்ள முடியவில்லை. ஏனெனில் என் வீட்டில் என்னையும் 'ஊதாரி' என்று சொல்லிக் கொண்டிருந்த வயது எனக்கு!

அந்த நண்பனின் தகப்பனார் மூலதனமாகப் போட்ட பணத்தில் பையன் வியாபாரம் நடத்திக் கொண்டிருந்தான். கணக்கு வழக்கு எல்லாம் ஒரே குளறுபடி. அந்தச் சமயம் பார்த்து வீட்டுக்கு வந்த பெரியவர் ஒருவர் வத்தி வைத்து விட்டார், அந்தப் பையன் ரேஸுக்குப் போகிறான் என்று. எனக்குக் கைகால் ஓடவில்லை. தகப்பனார் ஆகாயத்துக்கும் பூமிக்குமாகக் குதித்தார். ''ரேஸா என்னடா ரேஸு. எதுக்குடா ரேஸு. ஏண்டா போனே?'' என்று கத்தினார். பையன் மென்று விழுங்கி, ''அது இல்லைப்பா. அஞ்சு ரூபா கட்டினா அம்பதாயிரம் வரும்னு யாரோ சொன்னாங்க'' என்று இழுத்தான். ''அம்பதாயிரம் முதலைப் போட்டு ஆரம்பிச்சிருக்கற வியாபாரத்திலே அஞ்சு ரூபா லாபம் பாக்கத் துப்பில்லை. அஞ்சு ரூபா கட்டினா உனக்கு ஐம்பதாயிரம் வந்துடுமா?'' என்று தகப்பனார் கத்த, நான் சிரிப்பைக் கஷ்டப்பட்டு அடக்கினேன்.

அது சமயம் பார்த்து அந்தப் பையன்

நடத்தும் கம்பெனியின் கணக்கு வழக்கு களைச் சோதனை போட ஒரு வணிக வரி அலுவலக குமாஸ்தா உள்ளே நுழைந்து விட்டார், நாவில் நீருடன்.

தாம் யாரென்று அவர் கம்பீரமாய் அறிமுகப்படுத்திக் கொண்டதுதான் தாமதம், அந்தப் பையனின் தகப்பனார் விடுவிடு என்று உள்ளே போய் அத்தனை கணக்குப் புத்தகங்களையும் எடுத்து வந்து அவர் முன்னால் போட்டு, ''சார் ஐம்பதாயிரம் பணம் போட்டேன். எங்கே போச்சுன்னே தெரியலை. பாவிப்பய தொலைச்சிட்டான். அவன் அதை எப்படித் தொலைச்சான், எங்கே தொலைச்சான் அப்படின்னு இந்த நோட்டுப் புத்தகங்கள்லே கணக்குப் பார்த்துச் சாயந்தரத்துக்குள்ளே சொல்லுங்க. உங்களுக்குப் புண்ணியமா போகும்'' என்று சொன்னதுதான் தாமதம்....

எனக்கு நினைவு தெரிந்தவரை ஒரு வணிக வரி அலுவலக குமாஸ்தா, 'துண்டைக் காணோம் துணியைக் காணோம்' என்று ஓடியதை அதற்கு முன்னும் கண்டதில்லை. அதற்குப் பின்னும் கண்டதில்லை. ஆக, சில மனிதர்கள் சீரியஸ் விஷயத்தையும் நகைச்சுவை வரும்படி அணுகுகிறார்கள் என்பதைப் புரிந்த கொண்டிருப்பீர்களே!



மொத்தத்தில் சினிமாவில் நான் எழுதும் வசனங்கள் 'நிழல்'தான். ஆனால் அதற்குக் கிடைக்கும் மரியாதைக்குக் காரணம் - அந்த நிழலுக்கு முன்னே அரங்கேறும் நிஜங்களை நான் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பதுதான்.

(நிழல்கள் தொடரும்)



- சீர்காழி. வி. ரேவதி.

பயம்

பயத்தில் அவள் கண்கள் பெரிதாகிப் பளபளத்தன.

ஜன நெரிசலில் நிரம்பி வழிந்த பஸ் வட்டமடித்துத் திரும்பிய சமயம், கடைசிப் படி ரோட்டில் உரசியது. சரவணனின் கைப்பிடி வழுக்கி இருதயம் தொண்டை வரை அடித்தது. விழப் போகிறேனா? விழுந்து, பின்டயர் மேலே ஏறி...

கை பிசுபிசுத்தது. ஸ்டீல் கைப்பிடி வழுக்க ஆரம்பிக்க, அடுத்த கையில் வைத்திருந்த புத்தகங்கள் இடுப்பின் மீது நழுவின.

''கொஞ்சம் உள்ளே போங்களேன்.''

அந்த விடலைப் பையன் முறைத்தான். ''இங்கே எங்க இடம் இருக்கு?''

உண்மைதான். அடுத்த பஸ் வரும் வரை நின்றிருக்கலாம். சரியாய் ஆறு மணிக்குக் கௌரியைப் பெண் பார்க்க வருகிறார்கள். இந்த பஸ்ஸைப் பிடித்தால் தான் ஐந்தரைக்குப் போக முடியும். அடுத்த பஸ் என்றால் ஆறே கால் ஆகி விடும். மாப்பிள்ளை வீட்டார் ''பொண்ணுக்கு அண்ணன் எங்கே?'' என்று கேட்பார்கள்.

அம்மா திகைத்து நிற்பாள். அப்பா போன வருஷம் மணலி பஸ் ஆக்ஸிடெண்டில் போன பிறகு இப்போதெல்லாம் அடிக்கடி அம்மா திகைத்து நிற்கிறாள். ''நீதான் சரவணா கௌரிக்கு எல்லாம். அண்ணா, அம்மா... அப்பா எல்லாமே'' கடைசி வார்த்தையைச் சொல்லும் போது அழுவாள்.

அவளால் எதுவும் தனியாகச் செய்ய முடியாது. சீக்கிரம் போனால்தான் சரியாயிருக்கும். அவர்களை வரவேற்க, உட்கார வைக்க, பேச... நல்ல வேளை, காலையிலேயே பலகாரம் வாங்கியாகி விட்டது. பூ அம்மா வாங்கியிருப்பாள். ஆபீஸுக்கும் லீவ் போட முடியாமல் போய் விட்டது. லோன் சாங்ஷன் ஆகிற நாள்.

சரவணன் பஸ்ஸினுள் பார்வையால் துழாவினான். முதல் சீட்டில் அந்தப் பெண் உட்கார்ந்திருந்தாள். தலை நிறைய மல்லிகைப் பூவும், புதுத் தாலியுமாய்க் கல்யாணக் களை முகத்தில் தெரிந்தது. பஸ் நேர் ரோட்டில் போனதால் அதிக அசைவில்லை. அவள் கண்ணாடி ஜன்னல் வழியாய்த் தூரத்தில் பார்த்தாள். ரோட்டில் போகும் மனிதர்களைப் பார்த்தாள். திடும் திடுமென்று பின்னால் திரும்பிக் கூட்டத்துக்குள் பார்த்தாள்.

கௌரியும் கல்யாணமானால் இட்டத் தட்ட இப்படித்தான் இருப்பாள். கௌரிக்குக் கல்யாணமானால் சியாமளா நிறையச் சந்தோஷப்படுவாள்.

''அப்பா...! நம்ம லைன் கிளியர்'' என்பாள்.''

நிமிஷத்தில் கல்யாணமாகி, குழந்தை பெற்று, ஸ்கூலுக்குக் கொண்டு போய் விடும் கனவுகள் அவளுக்கு.

பஸ் பிரேக் அடித்து நின்றது. குறுக்கே மாடு மெதுவாக அசைந்து கடந்தது. இந்தப் புத்தகங்களை யாராவது வைத்துக் கொள்வார்களா? இந்தப் பெண் வைத்துக் கொள்வாளா?

சரவணன் அவளை யோசனையோடு பார்த்தான். அவள் முகத்தில் வெயிலடிக்காமல் இருக்க, கையை நெற்றியில் குடை மாதிரி வைத்துக் கொண்டாள். ம்ஹூம். வாங்க மாட்டாள்.

கௌரி கல்யாணத்தை எங்கே நடத்த? எப்படியும் ஒரு மாசம் லீவ் போட வேண்டும். மண்டபம் தேடி, பத்திரிகை அடித்து, எல்லோருக்கும் கொடுத்து... நல்லவேளை லோன் சாங்ஷன் ஆகி விட்டது. இந்த இடம் நிச்சயம் முடிந்து விடும். அப்பா இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இப்படித்தான் ஒரு சாயங்காலம் அந்தச் செய்தி வந்தது. ''பஸ் பாலத்துக்குள்ள விழுந்திடுச்சாம். ஆட்களுக்கெல்லாம் அடி எக்கச்சக்கம் போல.'' ''ஐயையோ'' என்று அம்மா பரிதாபப்பட்டு உள்ளே வரும் போதுதான் பக்கத்து வீட்டுக்கு ஃபோன் வந்தது.

''திரு சண்முகநாதன் என்பவர் ஜி.ஹெச்.சில் இருக்கிறார்.''

ஆஸ்பத்திரியில் அப்பா போராடிக் கொண்டிருந்தார். முக்கால்வாசி உடல்

தமயந்தி

நசுங்கிப் போய் மீதி கால் பாகமும் மெஷின் களோடு இணைக்கப்பட்டிருந்தது. 'கர்..கர்' என்று சிரமமாய் மூச்சு வெளியேறிற்று

''ப்...பா...''

ம்ஹூம்.. அப்பா பேச மாட்டார்... அழ மாட்டார். சிரிக்க மாட்டார்.

கோமா...

உயிர் எத்தனை முக்கியம் என்று தெரிந்தது. அது மட்டும் போதும் ஸ்வாமி. அப்பாவுக்குக் கொடு என்று வேண்டிக் கொள்ள வைத்தது. ஆனால் முடிய வில்லை. அப்பா நடுராத்திரி கோமாவி லேயே இறந்து போனார். ஆக்ஸிடெண்ட் கேஸ் என்று நார் நாராய் அப்பாவைக் கிழித்து போஸ்ட்மார்ட்டம் செய்து கொடுத் தார்கள்.

பஸ் மறுபடியும் வலது பக்கமாய்ச் சரிந்து திரும்பியது. அந்த விடலைப் பையனும் வெளிப்புறமாய்ச் சாய, சரவணன் பாரம் தாங்காமல் வளைந்தான். புத்தகங்களில் ஒன்று தொப்பென்று ரோட் டில் விழ, சரவணன் சரிந்தான். பஸ் முழுக்க ஸ்தம்பித்தது. 'என்னாச்சு என்னாச்சு' என்று பின்பக்கம் கேள்வி எழுந்தது.

அந்தப் பெண் சட்டென்று எம்பி அவன் கையைப் பிடித்தாள். இலேசாய் அழுத்தி உள்பக்கமாய் இழுத்தாள். எல்லாப் புத்த கமும் கீழே விழ, சரவணன் மட்டும் மேலே வந்தான். அந்த விடலைப் பையன் பயத் தில் அலற பஸ் நின்றது.

சரவணன் இறங்கிப் புத்தகங்களைப் பொறுக்கினான். கண்டக்டர், ''படியில் நிற் காதீர்கள்'' என்று கத்த, பஸ் மறுபடி புறப்பட்டது. பக்கவாட்டில் உட்கார்ந்திருந் தவர் புத்தகங்களை வாங்கிக் கொண்டார். சரவணன் அந்தப் பெண்ணிடம் நன்றி



சொல்லத் திரும்பினான். அவள் அவனைக் கண்டுகொள்ளாத தினுசில் மறுபடியும் வெளியே பார்த்தாள். கையை வைத்து வெயிலையும் முகத்தையும் மறைத்தாள்.

''நல்லவேளை அந்தப் பொண்ணு பிடிச்சது. உங்க நல்ல யோகம் தம்பி.'' பஸ் முழுக்க அந்த நிமிஷம் பற்றிப் பேசினார்கள். சரவணனுக்குக் கை விரல் நுனி வரை சிலிர்த்தது. கடவுளே! நன்றி. இந்தப் பெண்ணுக்கு நன்றி.

கண்ணில் நீர் பரவிற்று. அவள் அவனைப் பார்க்காமல், பக்கத்தில் இருந்தவள் கையில் அடிக்கடி மணி பார்த்தாள். அடுத்த ஸ்டாப்பில் அவசரமாக இறங்கி நின்றாள்.

பின்னாலிருந்து அவன் இறங்கினான். புது மல்வேஷ்டியும் சட்டையும் முரட்டுத்தனமாய்த் தெரிந்தன.

''என்ன கூட்டம் செண்பகம்..ப்பா...''

''ம்...''

''எங்க உட்கார்ந்திருந்தே?''

''முன்னால.''

அவன் சட்டென்று நிமிர்ந்து பார்த்தான்.

''அப்ப நீதான் எவனோ ஒருத்தன் கையைப் பிடிச்சு ஏத்தி விட்டியா?''

அவள் திணறினாள். ''நான் இல்லை... பக்கத்து சீட் பொண்ணு.''

பஸ்ஸிலிருந்து இன்னும் ஆட்கள் இறங்கிக் கொண்டிருந்தார்கள். சரவணன் அந்தப் பெண்ணைப் பார்த்தான்.

பயத்தில் அவள் கண்கள் பெரிதாகிப் படபடத்தன!

மார்டினாவுக்கு முதுமை இல்லை!



டென்னிஸ் வீராங்கனை மார்டினா நவ்ராடிலோவா கம்ப்யூட்டரால் உருவாக்கப்பட்ட உணவுத் திட்டப்படிதான் சாப்பிடுகிறார். டாக்டர் ராபர்ட் ஹாஸ், மார்டினாவுக்கு வேண்டிய உணவுத் திட்டத்தைக் கம்ப்யூட்டர் மூலம் அமைத்தார்.

கம்ப்யூட்டர் புரோகிராமில் மார்டினாவின் இரத்தப் பரிசோதனை பற்றிய விவரங்கள் அவருடைய பயிற்சியின் தன்மை முதலிய எல்லாமே அடங்கியுள்ளன. அவர் எந்த இடத்தில் விளையாடினாலும் சீதோஷ்ண நிலை பற்றிய விவரங்கள் கம்ப்யூட்டரில் செலுத்தப்பட்டு மற்ற விவரங்களுடன் ஒப்புநோக்கி அலசப்படுகிறது. அடுத்த சில நாட்களுக்கான அவரது உணவுத் திட்டத்தைக் கம்ப்யூட்டர் அளித்து விடுகிறது. இதை அவர் ஒழுங்காகப் பின்பற்றுவதால் அவருடைய சக்தி, திறமை, ஆகியவை அதிகரித்துள்ளன. மேலும், அவர் முதுமை அடையும் வேகமும் குறைந்து கொண்டே வருவதாகக் கருதப்படுகிறது.

ஆதாரம் :
''அண்டர்ஸ்டான்டிங் கம்ப்யூட்டர்''

தகவல் : வி. நந்தகுமார்.

சிவகாமியின் சபதம்

நாற்பத்தைந்தாம் அத்தியாயம்
பிக்ஷுவின் மனமாற்றம்

பாறைகளைப் பார்வையிடுவதற்காக மகேந்திர பல்லவர், ஆயனர், சத்ருக்னன் ஆகிய மூவரும் மடத்திலிருந்து புறப்பட்ட போது, வாசலில் சிவகாமி வந்து நின்றாள்.

மகேந்திர பல்லவர் தற்செயலாக அவளைப் பார்ப்பதுபோலப் பார்த்து, ''சிவகாமி, நீ கூட எங்களுடன் வருகிறாயா?'' என்று கேட்டார்.

சிவகாமி மறுமொழி சொல்லத் தயங்கினாள். ஆயனர் அப்போது, ''வா, சிவகாமி! போய் விட்டு வரலாம். இங்கே நீ தனியாக என்ன செய்யப் போகிறாய்?'' என்றார்.

எனவே, சிவகாமியும் புறப்பட்டாள். அவளைத் தொடர்ந்து ரதியும் சுகரும் கிளம்பினார்கள்.

சிவகாமி பின் தங்கியதற்குக் காரணம் இருந்தது.

பெட்டிக்குள் சிங்க இலச்சினையை வைத்துவிட்டுச் சிவகாமி நிமிர்ந்தபோது தூண் மறைவில் காவித்துணி தெரிந்தது. தூணில் மறைந்திருப்பது புத்த பிக்ஷுதான் என்பதையும் உணர்ந்தாள்.

அன்று அதிகாலையில் வந்து அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த புத்த பிக்ஷு வாசலில் வேற்று மனிதர் குரல் கேட்டதும், ''பின்புறமாகப் போய்விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனார். 'போனவர், எப்படித் திரும்பி வந்தார், ஏன் மறைந்து நிற்கிறார்?' என்று சிவகாமிக்குச் சற்று வியப்பாயிருந்தது.

நேற்று வரைக்கும் இம்மாதிரி சந்தர்ப்பம் நேரிட்டிருந்தால் அவள் உடனே கூச்சல் போட்டிருப்பாள்.

ஆனால், காலையில் புத்த பிக்ஷுவுடன் பேசிக் கொண்டிருந்ததிலிருந்து அவளுடைய மனம் அவர் விஷயத்தில் அடியோடு மாறிப் போயிருந்தது. அவர்மேல் முன்னம் அவளுக்கு ஏற்பட்டிருந்த சந்தேகங்கள் எல்லாம் நீங்கி நல்ல எண்ணமே உண்டாகியிருந்தது.

இந்த மனமாறுதலுக்குக் காரணமாயிருந்தது என்னவென்றால் குமார சக்கரவர்த்தி மாமல்லரைப் பற்றிப் பிக்ஷுவின் அபிப்பிராயம் அடியோடு மாறிவிட்டதாக அவர் கூறியதுதான்.

''மூட ஜனங்கள் கூறியதைக் கேட்டு, மாமல்லரைப் பயங்கொள்ளி என்றும், கோழை என்றும் சொன்னேன். அப்படிச் சொன்ன நாவை அறுத்துக் கொள்ளலாம் என்று இப்போது தோன்றுகிறது. போர்க்களத்தில் நானே நேரில் பார்த்தேன். அடடா! 'வீரத்துக்கு அர்ச்சுனன்' என்ற பேச்சை இனிமேல் விட்டு விட்டு, 'வீரத்துக்கு மாமல்லன்' என்று வழங்க வேண்டியதுதான். ஆயிரம் பேருக்கு மத்தியில் தன்னந்தனியாக நின்று வாளைச் சுழற்றி எப்படி வீரப்போர் புரிந்தான்! அசகாயசூரன் என்றால் மாமல்லன்தான்.''

இவ்விதம் புத்த பிக்ஷு மாமல்லருடைய வீரத்தை வர்ணித்ததுடன், அவரு

அமரர் கல்கி

டைய குணத்தையும் பாராட்டினார். மாமல்லனை 'ஸ்திரீலோலன்' என்று தாம் கூறியதும் பெருந்தவறு என்று அறிந்து கொண்டதாகவும், பெண்களைக் கண்ணெடுத்தே பார்க்காத பரிசுத்தன் என்றும், அப்பேர்ப்பட்ட உத்தம வீர புருஷனைக் காதலனாகப் பெறுவதற்கு எந்த இராஜகுமாரி பாக்கியம் செய்திருக்கிறாளோ என்றும் சொல்லச் சொல்ல, சிவகாமி தன்னுடைய மகத்தான பாக்கியத்தை எண்ணி இறும்பூது அடைந்ததுடன், புத்த பிக்ஷுவின் மீது முன்னெப்போதுமில்லாத நல்ல எண்ணமும் விசுவாசமும் கொண்டாள்.

அசோகபுரத்தில் திடீரென்று புத்த பிக்ஷு மறைந்த காரணத்தை ஆயனர் கேட்டதற்கு, நாகநந்தி கூறியதாவது: ''அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீர்கள்? கங்க நாட்டுத் துர்விநீதனை நான் அறிவேன். பௌத்த சங்கத்தைச் சேர்ந்தவன். என்னிடமும் அவனுக்குப் பக்தியுண்டு. குண்டோதரன் அன்று ஓர் ஓலை கொண்டு வந்து கொடுத்தானல்லவா? 'துர்விநீதன் காஞ்சி மேல் படை எடுத்து வருகிறான்' என்ற செய்தி அந்த ஓலையில் இருந்தது. அத்தகைய விபரீத முட்டாள்தனமான காரியத்தை அவன் செய்யாமல் தடுக்கலாம், திரும்பிப் போகச் சொல்லலாம் என்ற எண்ணத்துடன் தான் இரவுக்கிரவே ஓடினேன். குண்டோதரனுடைய குதிரையைக் கூட அதற்காகத் தான் எடுத்துக் கொண்டேன். என் முயற்சி பயன்படவில்லை. நான் போவதற்குள் போர் மூண்டு விட்டது. நான் எதிர்பார்த்தபடியே துர்விநீதன் வீரமாமல்லனால் முறியடிக்கப்பட்டு ஓட நேர்ந்தது. எங்கே ஓடினானோ, என்ன கதி அடைந்தானோ தெரியாது!''

இப்படியெல்லாம் மாமல்லருடைய புகழைக் கேட்கக் கேட்கச் சிவகாமிக்கு உள்ளம் குளிர்ந்ததுடன் புத்த பிக்ஷுவின் மீது அவளுடைய விசுவாசம் அதிகமாகிக் கொண்டே வந்தது.

''சுவாமி! தாங்களும் இந்தக் கிராமத்தில் எங்களுடனேயே தங்கியிருந்து விடுங்களேன்!'' என்று சொன்னாள்.

அதற்குப் பிக்ஷு; ''இல்லை அம்மா, இல்லை! ஓரிடத்தில் தங்கியிருப்பது என்னுடைய தர்மத்துக்கே விரோதம். தென்னாடு இப்போது என்னைப் போன்ற பிக்ஷு



யாத்திரிகர்களுக்குத் தகுந்த இடம் இல்லை. தெற்கேயிருந்து பாண்டியன் படையெடுத்து வருகிறான். வடக்கேயிருந்து சளுக்கன் படையெடுத்து வருகிறான். உங்கள் இருவரையும் பத்திரமான இடத்தில் விட வேண்டுமென்றுதான் கவலைப்பட்டேன். இந்தக் கிராமம் உங்களுக்குத் தகுந்த இடம் தான். புத்த மகாப் பிரபுவின் அருள் இருந்தால் யுத்தமெல்லாம் முடிந்த பிறகு, மறுபடியும் உங்களைப் பார்ப்பேன். ஆயனரே! அடுத்த தடவை உங்களைப் பார்க்க வரும்போது, அஜந்தா இரகசியத்தைக் கட்டாயம் அறிந்து கொண்டு வருகிறேன். சிவகாமி! இங்கேயே உங்களுடன் தங்கி; உன்னுடைய தெய்வீக நடனக் கலையைப் பார்த்துக் கொண்டிருக்க எவ்வளவோ இஷ்டம்தான். ஆனால் அதற்குக் கொடுத்து வைக்க வேண்டாமா?...'' என்று பிக்ஷு கூறிய போது, அவருடைய குரலில் தொனித்த கனிவு, சிவகாமியின் உள்ளத்தையும் உருக்கிவிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான், வாசலில் குண்டோதரன் கதவை இடிக்கும் சப்தம் கேட்டது. அப்போது பிக்ஷு, ''ஆயனரே! உங்களுடைய சிஷ்யன் குண்டோதரன் என் பேரில்



அநாவசியமான சந்தேகம் ஏதோ கொண்டிருக்கிறான். என்னை இங்கு பார்த்தானானால் வீணாக வலுச்சண்டைக்கு வருவான். இன்னும் யாரோ வேற்று மனிதர்கள் வாசலில் வந்திருப்பதாகக் கூடத் தோன்றுகிறது. நான் இப்படியே பின்புறமாகப் போய் விடுகிறேன். விடை கொடுங்கள்'' என்று கூறிப் புறப்பட்டார். போகும்போது, ''சிவகாமி! மறுபடியும் உங்களைப் பார்க்கிறேனோ என்னவோ? ஆனால், நான் எங்கே போனாலும், என்ன செய்தாலும் உன்னை மறக்க முடியாது. உன்னை மறந்தாலும் உன் நடனத்தை மறக்க முடியாது'' என்று கனிந்த குரலில் சொல்லி விட்டுப் போனார்.

அப்படிப் போனவரைத் திடீரென்று உள் அறையில் தூண் மறைவில் பார்த்ததும் சிவகாமிக்குச் சிறிது வியப்பாய்த்தானிருந்தது. ஆயினும் மறுபடியும் தன்னிடம் ஏதோ சொல்வதற்காக ஒரு வேளை காத்திருக்கிறாரோ என்னவோ, சக்கரவர்த்தி போன பிறகு விசாரித்துக் கொள்ளலாம் என்று வெளி அறைக்கு வந்து விட்டாள். உண்மையில் பிக்ஷு போகாமல் தங்கியிருந்தது சிவகாமிக்குச் சிறிது மகிழ்ச்சியை அளித்தது என்றே சொல்ல வேண்டும்.

இப்போது மடத்து வாசலில் சக்கரவர்த்தி ''நீயும் எங்களுடன் வருகிறாயா?'' என்று கேட்டதும், தூண் மறைவிலிருந்த புத்த பிக்ஷுவை நினைத்துக் கொண்டு சிவகாமி ஒருகணம் தயங்கினாள். ஆனால் ஆயனரும் சேர்ந்து அழைத்ததும், தடுத்துச் சொல்ல முடியாமல், ''ஆகட்டும், அப்பா!'' என்று சொல்லிப் புறப்பட்டாள்.

நாகநந்தி பிக்ஷு தான் திரும்பி வரும் வரையில் ஒரு வேளை அங்கேயே இருக்கலாம் என்ற எண்ணமும் அவள் மனத்தில் இருந்தது.

நாற்பத்தாறாம் அத்தியாயம்

திரிமூர்த்தி கோயில்

பாறைகளை நோக்கி நடந்து போய்க் கொண்டிருக்கும் போது, மாமல்லரைப் பற்றியோ அவருக்கு நேர்ந்த ஆபத்தைப் பற்றியோ சக்கரவர்த்தி ஒன்றும் பேசவில்லை. ஆயனரிடம் சிற்பக் கலையைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார். இரண்டு பேரும் இந்த உலகத்தையே மறந்து பேசிக் கொண்டு போனார்கள்.

பாறைப் பிரதேசத்தை அடைந்த பிறகும் அப்படித்தான். இந்தப் பாறையை யானையாகச் செய்யலாம், இதைச் சிங்கமாகச் செய்யலாம். இதைத் தேராக அமைக்கலாம், இதை வஸந்த மண்டபமாக்கலாம் என்றெல்லாம் திட்டம் போட்டுக் கொண்டிருந்தார்கள். கடைசியாக ஒரு பெரிய பாறையைக் குடைந்து கோயிலாக அமைப்பது என்றும் கோயில் வேலையையே முதன் முதலில் தொடங்க வேண்டும் என்றும் தீர்மானித்தார்கள்.

''இந்த ஒரே கோயிலில் மூன்று மூர்த்திகளையும் பிரதிஷ்டை செய்யலாம், ஆயனரே! மூன்று கர்ப்பக்கிருஹங்களை அமைத்து விடுங்கள்!'' என்றார் மகேந்திர பல்லவர்.

''சுவாமி, மூன்று மதத்தினருக்கும் தனித்தனியாக மூன்று கோயில்கள் அமைத்துவிட்டால் நல்லதல்லவா? சச்சரவுக்கு இடமில்லாமல் போகுமல்லவா?'' என்று ஆயனர் கேட்டார்.

''மூன்று மதத்தினருக்கா? நான் அப்படிச் சொல்லவில்லையே? மும்மூர்த்திகள் என்று யாரைச் சொன்னதாக எண்ணினீர்கள்?''

''சிவபெருமான், புத்ததேவர், ரிஷப தேவர் இவர்களைத்தானே?''

''இல்லை, ஆயனரே! பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய திரிமூர்த்திகளைச் சொன்னேன்.''

''அப்படியா?''

''ஆம். இன்னும் கொஞ்ச காலத்துக்குப் பௌத்தர், சமணர் என்று என்னிடம் சொல்லாதீர்! ஆயனரே! அவர்கள் விஷயத்தில் அப்படி என் மனம் கசந்து போயிருக்கிறது!''

''ஐயோ! அருள் நிறைந்த தங்கள் உள்ளம் கசந்து போகும்படி அவர்கள் என்ன செய்துவிட்டார்கள்?''

''ஆஹா! சமணர்களுக்கும் பௌத்தர்களுக்கும் நான் எவ்வளவு கௌரவம் கொடுத்திருந்தேன்! அவர்களைத் திருப்திப் படுத்த என்னவெல்லாம் செய்தேன்! ஒன்றும் பயன்படவில்லை. பாடலிபுத்திரத்துச்

சமணப் பள்ளியில் துர்விநீதன் ஒளிந்து கொள்ள அவர்கள் இடங் கொடுத்தார்கள். பல்லவ சைனியம் அந்தச் சமணப் பள்ளியை இடித்துத் தரைமட்டமாக்கிப் பாதாள குகையில் ஒளிந்திருந்த துர்விநீதனைப் பிடிக்கவேண்டியிருந்தது. இப்போது அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள், தெரியுமா? தேச தேசமெல்லாம் போய்க் 'காஞ்சி மகேந்திர பல்லவன் சமணப் பள்ளியை இடித்துத் தள்ளினான்' என்ற பழியைப் பரப்பப் போகிறார்கள்! அது போகட்டும், ஆயனரே, எனக்கு அதிகமாகத் தாமதிக்க நேரமில்லை. போய் வருகிறேன். யுத்தம் முடிந்து நான் திரும்பி வந்து பார்க்கும் போது கோயில் வேலை முடிந்திருக்க வேண்டும். சத்ருக்னா! நம்முடைய தெப்பத்தை எங்கே விட்டுவிட்டு வந்தோம்? சீக்கிரம் போய்ப் பார்த்துக் கொண்டு வா!'' என்று கூறிவிட்டு, ''ஆயனரே! நீங்களும் கொஞ்சம் பார்க்கிறீர்களா? இந்த நதிக் கரையில் எங்கேயோ தெப்பத்தை விட்டிருக்கிறோம். இரண்டு பேருமாய்ச் சென்று பார்த்தால் சீக்கிரம் கண்டு பிடிக்கலாம்!'' என்றார்.

அவ்விதமே ஆயனரும் ஒற்றர் படைத் தலைவரும் தெப்பத்தைத் தேடிக்கொண்டு சென்றார்கள்.

இத்தனை நேரமும் சிவகாமி ஒரு பக்கத்தில் நின்று ரதியைத் தடவிக் கொடுத்துக் கொண்டும், மெல்லிய குரலில் ஏதோ ஒவ்வொரு வார்த்தை சொல்லிக் கொண்டும் இருந்தாள்.

ஆயனர், சத்ருக்னர் இருவரும் அங்கிருந்து சென்றதும், சக்கரவர்த்தி அவளருகில் வந்து, ஒரு பாறைமேல் உட்கார்ந்து கொண்டு, ''சிவகாமி! உன்னிடம் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். சற்று இந்தப் பாறைமேல் உட்காருகிறாயா!'' என்றார்.


ஏதோ சந்தோஷமற்ற விஷயந்தான் சக்கரவர்த்தி பேசப் போகிறார் என்று சிவகாமியின் உள்ளுணர்ச்சி கூறியது. எனவே, தலைகுனிந்தபடி நின்று கொண்டேயிருந்தாள்.

''சிவகாமி! சற்று தலை நிமிர்ந்து இதோ இந்தக் கத்தியைப் பார்!'' என்றார் மகேந்திர பல்லவர்.

சிவகாமி பார்த்தாள்.

''சற்று முன்னால் இந்தக் கத்தியைப் பற்றி ஒரு விஷயம் சொன்னேனே, அது ஞாபகம் இருக்கிறதா சிவகாமி!''

''இருக்கிறது, பிரபு'' என்று சிவகாமியின் உதடுகள் முணு முணுத்தன. அந்தக் கத்தியானது மாமல்லரின் முதுகிலே பாய்வ



''அந்த கிரிக்கெட் காப்டன்தான் டாஸ்ல ஜெயிச்சுட்டாரே, மறுபடியும் எதுக்கு ஒரு டாஸ் போட்டுப் பார்க்கிறார்?''

''முதல்ல பேட் பண்ணனுமா, பௌல் பண்ணனுமான்னு முடிவு பண்ணத்தான்!''

- சீர்காழி. வி. ரேவதி.

தற்கு இருந்தது என்ற எண்ணம் அவளைத் துன்புறுத்தியது.

''நான் சொன்னது பொய், சிவகாமி!''

சிவகாமிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவளுடைய உள்ளம் குழம்பிற்று. அந்தக் குழப்பத்தில் ஆறுதலும் மகிழ்ச்சியும் ஒரு வகை ஏமாற்றமும் கலந்திருந்தன. சக்கரவர்த்தி முதலில் எதற்காக அம்மாதிரி பொய்யைச் சொன்னார்; இப்போது எதற்காகத் தாம் பொய் சொன்னதாக ஒப்புக் கொள்கிறார் என்பதொன்றும் புரியாமல் சிவகாமி திகைத்தாள்.

''ஆம்! சிவகாமி! உனக்குத் திகைப்பாகத்தான் இருக்கும். உண்மை விவரத்தை உன் தந்தையிடம் சொல்வதற்குக்கூட நான் இஷ்டப்படவில்லை. அதற்காகத்தான் அவரைத் தெப்பத்தைத் தேடுவதற்கென்று அனுப்பினேன். ஆனால், உண்மையான விவரம் உனக்கு மட்டும் அவசியம் தெரிந்திருக்க வேண்டும்....''

சிவகாமியின் மனக்குழப்பம் இன்னும் அதிகமாயிற்று. என்ன உண்மையைச் சொல்லப்போகிறார்? அது எதற்காகத் தனக்கு மட்டும் தெரிந்திருக்கவேண்டும் என்கிறார்!

''சிவகாமி! எஃகிலேயே நஞ்சைக் கலந்து செய்த இந்தக் கத்தி, என் ஒரே மகன், மாமல்லனுடைய முதுகிலே பாய்வதற்கு இருந்தது. இந்த அபாயம் யாரால் ஏற்பட்டது தெரியுமா?''

''பிரபு! அது பொய் என்று சொன்னீர்களே!'' என்று சிவகாமி நாக்குழறக் கேட்டாள்.

''எது பொய் என்றேன்? மாமல்லன் முதுகில் கத்திபாய்வதற்கு இருந்தது பொய் இல்லை, சிவகாமி! பல்லவ சாம்ராஜ்யத்துக்கு அந்தப் பெரும் விபத்து நிச்சயமாக வருவதற்கிருந்தது. அந்த விபத்து உன்னால் தடைப்பட்டது என்றேனே, அதுதான் பொய்! சிவகாமி! நீ கேவலம் சாதாரணப் பெண்களைப் போன்ற கோழை அல்ல! நெஞ்சுத்துணிவு உள்ளவள். ஆகையால் தான் உன்னிடம் உண்மையைச் சொல்லுகிறேன்; மாமல்ல பல்லவன் நேற்று இந்த மண்டபப்பட்டுக் கிராமத்திலே இந்த விஷக் கத்தியினால் பின்னாலிருந்து குத்தப் பட்டுச் செத்துப்போயிருக்க வேண்டும். இந்தப் பாறையடியில் இந்த மகிழ மரத்தினடியிலேயே அவனுடைய உடல் அநாதைப் பிரேதமாக விழுந்து கிடந்திருக்க வேண்டும். அவ்விதம் நேராமல், அன்றொரு நாள் ஆலகால விஷத்தை உண்டு சகல உலகங்களையும் காத்த பரமசிவன் தான் நேற்றைக்கு மாமல்லனையும் பல்லவ குலத்தையும் காத்து அருளினார்...''

நேற்று மாலை அதே பாறையடியில் மாமல்லர் உட்கார்ந்து தன் செவிகளில் இணையற்ற காதல் மொழிகளைப் பொழிந்து கொண்டிருந்தார் என்பதைச் சிவகாமி நினைவு கூர்ந்தபோது, அவளுடைய தலை சுழல்வதற்கு ஆரம்பித்தது.

''சிவகாமி, கேள்! வாழையடி வாழையாக வந்த பல்லவ குலத்தில் மாமல்லனைப் போன்ற ஒரு வீரமகன் இதுவரையில் தோன்றியதில்லை. இந்தப் பரந்த பல்லவ சாம்ராஜ்யம் இன்றைக்கு மாமல்லனை நம்பியிருப்பதுபோல் யாரையும் நம்பியிருந்ததும் இல்லை. அப்படிப்பட்டவன் நேற்றைக்கு இந்தப் பாறையடியில் வஞ்சகமாக நஞ்சு தோய்ந்த கத்தியினால் பின்னாலிருந்து குத்தப்பட்டுச் செத்து விழுந்திருப்பான். தவம் செய்து பெற்ற என் ஏக புதல்வனை நான் இழந்துவிட்டிருப்பேன். பல்லவ சாம்ராஜ்யமே நாதியற்ற இராஜ்யமாகப் போயிருக்கும். கவிகளிலும் காவியங்களிலும் புகழ் பெற்ற காஞ்சி சுந்தரி வைதவ்யம் அடைந்திருப்பாள். இந்த விபத்துக்கள் எல்லாம் நேர்வதற்குக் காரணமாயிருந்தது யார் தெரியுமா?....'' என்று சக்கரவர்த்தி நிறுத்தி ஒரு பெருமூச்சு விட்டார். பிறகு கூறினார்; ''நான் என் பிராணனுக்கு மேலாகக் கருதி யாரிடம் விசுவாசம் வைத்திருக்கிறேனோ, அந்த ஆயனமகா சிற்பியின் அருமை மகள் சிவகாமிதான்!''

இதைக் கேட்டவுடனே சிவகாமியின் உச்சந் தலையில் பளீரென ஒரு மின்னல் பாய்ந்தது. அந்த மின்னலிலிருந்து ஆயிரம் ஆயிரம் ஒளிக் கிரணங்கள் கிளம்பி நாற்புறமும் பாய்ந்தன!

(தொடரும்)

பரிசு

ரூ. 40,000


கல்கி பொன்விழா நாவல் போட்டி

சரித்திர நாவலுக்குப் பரிசு (சுமார் 52 இதழ்கள்)	ரூ. 20,000/—
சமூக நாவலுக்குப் பரிசு (சுமார் 26 இதழ்கள்)	ரூ. 10,000/—
மர்ம நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/—
விஞ்ஞான நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/—

முடிவு தேதி: ஆகஸ்டு 31, 1991

- இதற்கடுத்த பத்து மாதங்களில் நாவல்களின் பரிசீலனை முடிந்து கல்கி பொன்விழாச் சிறப்பிதழில் முடிவு வெளியாகும். பரிசு பெற்ற நாவல்களுள் ஒன்று அதே சிறப்பிதழில் ஆரம்பமாகும். அதாவது 1992 ஆகஸ்டு முதல் வார இதழ்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படும் இதர நாவல்களுக்கு வழக்கமான சன்மானம் அளிக்கப்படும்.
- நடுவர் குழு நாவல்களைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய நாவல்களைத் தேர்ந்தெடுக்கும்.
- கல்கி பொன் விழா நாவல் போட்டிக்கு அனுப்பப்படுவதாகத் தெளிவாகக் குறிப்பிடுதல் அவசியம்.
- பிரதி வாரமும் படத்துடன் சேர்த்துக் கல்கியில் 4 — 5 பக்கங்களுக்கு மேற்படாதபடி அத்தியாயங்களின் அளவை நிர்ணயிப்பது நல்லது.
- கடிதப் போக்குவரத்து கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத நாவல்களைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலைகள் இணைக்க வேண்டும்.
- அப்படித் திருப்பி அனுப்பவே அவசியம் நேராதபடி அற்புதமான நாவல்களை எழுதி அனுப்பிக் கல்கி பொன்விழா ஆண்டினைச் சிறப்பிக்குமாறு எழுத்தாளர் பெருமக்களை வேண்டுகிறோம்.

— ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.



இன்னொரு

கையில் லெட்டரை வைத்துக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தார் நடேசன்.

''லெட்டரா...? யார் கிட்டே இருந்துங்க?'' என்றபடி எதிரே இருந்த கூடை நாற்காலியில் உட்கார்ந்தாள் அவர் மனைவி பங்கஜம்.

பதில் பேசாது கடிதத்தை அவளிடமே நீட்டினார் நடேசன். சுருக்கமாய் நாலே வரியில் இருந்தது கடிதம். தலைக்காட்டில் இருந்து நடேசனின் அப்பா சுந்தரம் எழுதியிருந்தார்.

அன்புள்ள நடேசனுக்கு,

உன் அப்பாவின் ஆசீர்வாதங்கள். வரவர உடம்பு முடியலே. என்னால சமைத்துச் சாப்பிடக் கூட முடியலே. நீ வந்து என்னை உன்னோடு தஞ்சாவூருக்கு அழைச்சுட்டுப் போயிடு. அங்கே மெடிக்கல் காலேஜ் ஆஸ்பத்திரியில் காண்பித்து உடம்பு சரியாயிட்டா... தேவலாம். இனிமேல் உன்னுடன்தான் இருக்கணும்...

உன் அப்பா,

சுந்தரம்.

''கெழத்துக்கு இன்னும் வாழணும் போல இருக்கு'' கடிதத்தைப் படித்து விட்டு முகத்தில் வெறுப்பு மண்டிட முணுமுணுப்புடன் திரும்ப நீட்டினாள் பங்கஜம். அதிலேயே அவள் மறுப்பும் வெறுப்பும் புரிந்தன.

அம்மா செத்துப் போன இந்த பத்து வருஷங்களில் அப்பா இது மாதிரி எழுதியதில்லை. கிராமத்து வீடு.. மூணு மாநிலம்.. ஒரு பசு மாடு.. இப்படி ஒரு வட்டத்திற்குள்ளேயே வாழ்ந்து விட்டவர்.

பங்கஜம்...



எவ்வளவு நாளைக்குத்தான் வண்டி ஓடும்?

இப்போது எழுபத்தெட்டு வயசு... போன மாசம் போய்ப் பார்த்து வந்தபோதே புரிந்தது. அப்பாவின் திடம் இனி அதிக காலம் நீடிக்காது என்று.

''என்ன செய்வது?'' நடேசன் மனத்தில் குழப்பம்.

கடைசி காலத்துல அப்பா அனாதையாச் செத்துக் கிடந்தா ஊர் என்ன சொல்லும்?

ஆனால் பங்கஜம் சம்மதிக்க மாட்டாள். அப்படியே சம்மதித்தால் கூட....

''அவர் போட்டிருந்த திட்டம் என்ன ஆவது?'' என்ற குழப்பம் வேறு.

நடேசன் ரிட்டயர் ஆவதற்கு இன்னும் ஒரு மாதமே இருந்தது.

இன்சூரன்ஸ்... பி.எப்... கிராஜுவிடி.. போட்டிருந்த ஆர்டி... எல்லாம் சேர்ந்து லட்சத்தைத் தாண்டி வரும். பேசாமல் பணத்தோட மெட்ராஸ் போய் பையனுடன் செட்டில் ஆயிடலாம்... என்று தீர்மானித்திருந்தார்.

அவரின் ஒரே மகன் அர்ஜுன் சென்னையில் சொந்தமாய்ப் பிரைவேட் கன்ஸ்ட்ரக்ஷன் தொழிலில் நிறையச் சம்பாதிக்கிறான்.

அப்பா... உங்க ரிட்டயர்மெண்ட் பணத்தை எனக்கு அனுப்பினா கேப்பிடலுக்கு வசதியா இருக்கும். மாசா மாசம் வட்டி மாதிரி அனுப்பி வச்சிடறேன்'' - அர்ஜுன் கேட்டது நினைவுக்கு வந்தது.

அவன் கேட்ட பணத்தை அவனிடம் கொடுத்து விடலாம். கூடவே இருந்து ஹெல்ப் செய்யலாம் என்ற யோசனையுடன் அர்ஜுனை வரச் சொல்லி எழுதியிருந்தார்.

இந்த நிலையில் அப்பாவிடமிருந்து வந்த கடிதம் மனத்தைக் கலக்கியது.

ஒரு பக்கம் மனைவியின் எதிர்ப்பு.. .மறுபக்கம் வளர்த்து ஆளாக்கிய அப்பாவின் நினைவு...

முடிவு எடுக்க முடியாமல் இரண்டு நாட்கள் ஓடி விட்டன.

''அப்பா...! எப்படியிருக்கீங்க...?''

அர்ஜுன் குரல் கேட்டதும் ஆச்சரியத்துடன்...

''அடடே அர்ஜுனா... எப்படா வந்தே... எங்கே குழந்தை ...? நிர்மலா எல்லாம் வரலையா...?'' பேரனையும் மருமகளையும் எதிர்பார்த்த நடேசன் தனியாய் அர்ஜுன் மட்டும் வந்திருப்பது கண்டு விசாரித்தார்.

அர்ஜுன் மௌனமானான். சொல்லத் தயங்கினான்.

''என்ன அர்ஜுன் பதில் சொல்ல மாட்டேங்கறே? உடம்பு

கமலா கந்தசாமி

சரியில்லையா?'' பங்கஜம் கேட்டாள்.

''இல்லே...'' மெல்ல சமாளிக்கப் பார்த்தான் அர்ஜுன்.

''சும்மா சொல்லுப்பா...'' நடேசன் மறுபடியும் கேட்க...

''ஒண்ணுமில்லேப்பா... நிர்மலாவுக்கு நம்ம தஞ்சாவூர் டவுன் கூட கிராமமாப் படுது. ச்சே... அங்கெல்லாம் யார் வருவான்னு எடுத்தெறிஞ்சு பேசிட்டா.. நானும் கோபமாக் கூப்பிடாம வந்துட்டேன்.''

நடேசனுக்குப் புரிந்தது. நிர்மலாவும்... பங்கஜமாய் மாறியிருக்கிறாள். அர்ஜுன் தன்னைப் போலவே இருக்கிறான் என்பது புரிந்தது.

''சரி விடு... சின்ன வயசிலே இருந்து மெட்ராசிலேயே வளர்ந்துட்டவ... இங்கே என்ன இருக்கு... இந்தப் பெரிய கோவிலை விட்டா வேறு என்ன இருக்கு...'' மகனுக்கு ஆறுதலாய் இருக்கட்டுமே என்று சமாளித்தார் நடேசன்.

குளித்து, சாப்பிட்டு விட்டு வந்த அர்ஜுன் மொட்டை மாடியில் உட்கார்ந்து வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த நடேசனிடம் வந்து....

''அப்புறம் என்னப்பா முடிவு செய்தீங்க... உங்களுக்கும் அம்மாவுக்கும் பென்ஷன் பணமே போதும்... உங்க பணம் முழுதும் கொடுத்துடுங்க... இப்போ பிசினஸ் வளர்ந்துட்டு இருக்கு... ஹெல்ப்பா இருக்கும்...''

அர்ஜுன் கேட்டது காதில் விழாத மாதிரி வானத்தில் தெரிந்த ஒற்றை நட்சத்திரத்தையே பார்த்துக் கொண்டு மௌனமாய் இருந்தார் நடேசன்.

''என்னப்பா...?'' அர்ஜுன் மறுபடியும் கேட்க...

''இல்லே அர்ஜுன்... எனக்கு டவுன் வாழ்க்கையே அலுத்துப் போச்சு... ஊரோட கிராமத்துக்குப் போய்க் கொஞ்சம் நிலம் வாங்கிட்டு இருக்கலாம்னு இருக்கேன். அப்பாவுக்கும் இப்போ ரொம்ப முடியலே...'' நடேசன் தன் புதிய முடிவைச் சொன்ன போது, அதில் திடமான உறுதியும் திருப்தியும் கலந்திருந்தன.

அருள்வாக்கு



முந்நாட்களில் ஒரு கோயிலை ஜீர்ணோத்தாரணம் பண்ணினால் ஒரு பாடசாலை ஏற்படுத்துவது என்று வைத்துக் கொண்டிருந்தார்கள்.

'பாடசாலையில் கற்றதனால் ஆய பயன் இதுதான்' என்று வாலறிவன் நற்றாளைக் காட்டிக் கொடுக்கும்படியாக ஆலயங்களை எழுப்புவது பூர்விகர் வழக்கமாயிருந்தது.

கல்வி கற்பதைச் சொல்லும் இடத்தில் ஈச்வரனுக்கு 'வாலறிவன்' என்ற பெயரைத் திருவள்ளுவர் கொடுத்திருப்பது அர்த்தபுஷ்டி வாய்ந்தது. எல்லாம் அறிந்த ஸர்வஜ்ஞனே ''வாலறிவன்.'' எத்தனை கற்றாலும் அதனால் அஹங்கரிக்காமல் அவனுடைய ஸர்வஜ்ஞத்வத்தில் அது துளி மாத்திரமே என்ற அடக்கத்தோடு அவனுடைய நற்றாள் தொழ வேண்டுமென்றுதான் இந்த வார்த்தையைப் போட்டிருக்கிறார்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

500 உஜாலா ரொக்கப் பரிசுகள்

உஜாலா

பொது மக்களின் வேண்டுகோளின்படி இந்த பரிசுத் திட்டம் செப்டம்பர் 30, 1991 வரை நீடிக்கப் பட்டுள்ளது.



உஜாலாவின் விஞ்ஞானத் தன்மை

மனோதத்துவம்

குழந்தைகள் இளமனதில் வெள்ளை ஆடைகள் எந்த அளவிற்கு சுகாதாரம் ஒழுக்கம், இலட்சியம் மற்றும் இதரப் பண்புகளை வளர்க்க உதவுகின்றன என மனோதத்துவ நிபுணர்கள் உங்களுக்கு கூறுவார்கள்

பௌதீகம்

வெள்ளை ஆடைகள் எவ்வாறு சூரிய ஒளியிலிருந்து பெருமளவு உஷ்ணத்தை வெளியேற்றி சருமத்தைக் காக்கின்றன என்றும் உஷ்ணத்தினால் சருமம் கருமையாகாமல் எவ்வாறு காக்கின்றன என்றும் பௌதீக நிபுணர்கள் உங்களுக்கு கூறுவார்கள்

இரசாயனம்

ஒப்பற்ற, நுட்பமான இரசாயனம் மட்டுமே பளிச்சென்ற, மாசற்ற ஒளி வீசும் வெண்மையை வெள்ளை ஆடைகளுக்கு தர முடியும். இவை அனைத்தும் அடங்கிய தயாரிப்பே உஜாலா. இது ஒரு சாதாரண சொட்டு நீலம் அல்ல. நீரில் விரைவாக கரைய வேண்டும் — உடைகளின் இழைகளில் ஆழ ஊடுருவி வேகமாக உதிர்ந்துவிட வேண்டும் — விஞ்ஞான முறை அற்ற தயாரிப்புகளில் இருப்பது போன்ற இரசாயனம் இருத்தல் கூடாது. அவற்றை தொடர்ந்து உபயோகித்தால் துணிகளுக்கு சேதமுண்டாகும் அல்லது குழந்தைகளின் சருமத்திற்கு தீங்கு உண்டாக்கும். தவிர துணிகளில் படிந்திடும் கறை போன்றவையினால் சோபையிழந்து காணப்படும் இவை அனைத்து விஷயங்களையும் மனதில் கொண்டே, அங்கக இரசாயனத்தில் டாக்டர் பட்டம் பெற்றுள்ள விஞ்ஞானி ஒருவரால் பல்வேறு ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை செய்யப்பட்டு உருவாகி உள்ளது உஜாலா

உஜாலா பாதுகாப்பின் சின்னம்

வாய்வழி நச்சு மூலம் (ORAL TOXICITY TEST) நடத்திய ஆராய்ச்சியின், உஜாலா நச்சுத் தன்மை அற்றது என நிரூபித்து உள்ளன. சரும அரிப்பு பரிசோதனை (SKIN IRITATION TEST) நடத்தியதில் சருமத்திற்கு அரிப்பு ஏற்படுத்துவது இல்லை என்றும் கண்டு அறியப்பட்டுள்ளது

உஜாலாவில் ஆடைகளுக்கு சேதமுண்டாக்கும் எந்த இரசாயனமும் கிடையாது. எனவேதான் உஜாலாவை மீண்டும், மீண்டும் வாங்குகிறார்கள்

500 உஜாலா ரொக்கப் பரிசுகள் :

இன்றைய நுகர்வோர்கள் இலவசமாய் கிடைக்கும் மற்ற பொருள்களுக்காக இன்றி உஜாலா போன்ற நல்லதொரு பொருளை வாங்குவதன் காரணம் என்ன ? நுகர்வோர்கள் உஜாலாவை எப்படி கவனித்து வாங்குகிறார்கள் என்றும் ? எப்படி உஜாலாவைப் போல் தோற்றமளிக்கும் விஞ்ஞான முறையற்ற சொட்டு நீலங்களை வாங்குவதை தவிர்க்கிறார்கள் என்பதையும் உஜாலா பாட்டிலில் உள்ள விலாசத்திற்கு செப்டம்பர் 30ந் 1991. முன்பு அனுப்பவும். தகுந்த விமர்சனங்களுக்கு ரூ. 50 வீதம் 500 நபர்களுக்கு ரொக்கப் பரிசாக வழங்கப்படும்

JYOTHY LABORATORIES

Marketing Office:
44, Shivshakthi Ind. Estate, Marol,
Bombay-400 059.

Regd. Office:
Sreekrishna Nagar
Bombay-400 066.

கடவுளையே பதறவைத்த கண்ணப்பன்!

'உடம்பு வேறு நான் வேறு' என்பர் ஞானிகள். 'அதெப்படி?' என்கிறீர்களா? சொல்கிறேன் :

திருவண்ணாமலையில் உயிர் விளக்கேற்றிய ரமண முனிவர், உடல் பற்றிய சிந்தனையே இல்லாமல் பல காலம் தவம் செய்தவர். ஒரு சமயம் அவர் உடம்பில் ஒரு ரண சிகிச்சை. மயக்க மருந்து கொடுக்காமல் வைத்தியம் செய்ய மருத்துவர் தயங்கினர். ஆனால் ரமணரோ மயக்க மருந்து தேவையில்லை என்றார்.

வலியின் கொடுமை தெரியாதவராக ரமணர் விளங்கினார். ரணத்தைத் தொட்டு, அறுத்து, சிகிச்சை செய்த போது துடிக்கவும் இல்லை; வருந்தவும் இல்லை! வலிக்கவில்லையா என்று கேட்ட போது, ''வலி உடம்புக்குத்தான். எனக்கல்ல'' என்றார். மேலும் வினவியதும், ''நான் வேறு என் உடம்பு வேறு'' என்றார். உடம்பில் இருந்து தன்னை விலக்கிக் கொண்டு உணரும் தெளிவு ரமணரின் அநுபவம்.

எல்லோராலும் இது முடியும். முயற்சி செய்ய நாம் தயங்குகிறோம். எப்படி? பள்ளிக்குப் போகும் பையனுக்குத் திங்கட்கிழமை காலையில் அப்படி ஒரு வயிற்று வலி. புழுவாகத் துடிக்கிறான். 'ஐயோ அம்மா' என்று கூச்சல் வேறு. ரேடியோவில் அவனுக்குப் பிடித்த சினிமாப் பாடல் ஒலி பரப்பானது. அவன் மனம் பாட்டுக்குத் தாவியது. தலையை அசைத்துக் கேட்டுக் கொண்டிருக்கிறான். பாட்டு முடிந்து விளம்பரம் வந்ததும் வயிற்று வலி மறுபடி தெரிந்தது!

உடம்பிலிருந்து மனத்தை விலக்கி, வேறு ஒன்றின் மேல் வைத்து விட்டால் உடம்பின் உபாதைகள் தெரிவதில்லை. ஞானிகள் பிரம்மத்தில் லயித்து உடம்பில் இருந்து விலகுகிறார்கள்.

படிப்பு, பயிற்சி, குரு உபதேசம் இவற்றின் மூலம் இந்த ஞானம் பெறுவதுதான் முறையான வழி. ஆனால் இவற்றுள் எந்த ஒன்றின் தொடர்பும் இல்லாமல் ஞானம் பெற்ற உயிர்களும் உண்டு.

காட்டில் பிறந்து, இரக்கமற்ற வேடுவர்களோடு வளர்ந்து, வேடர் தலைவனாகி வேட்டைக்குப் போன திண்ணன். இவர்கள் விரித்த வலையில் சிக்கிய கொழுத்த காட்டுப் பன்றி திடீரென்று தப்பி ஓடியது. வேட்டை நாய்கள் அதைத் துரத்திக் கொண்டு ஓடின. காடன், நாணன் என்ற நண்பர்கள் உடன் வரத் திண்ணனும் ஓடிப் போய்ப் பன்றியைக் கொன்றான்.

காடன் தீ மூட்டி பன்றிக் கறி சமைத்தான். தண்ணீர் தாகத்தால் பக்கத்தில் இருந்த பொன்முகளி ஆற்றின் கரை சென்றான் திண்ணன். முகத்தைக் கழுவி நிமிர்ந்து பார்த்தால் எதிரில் காளத்தி மலை!

நல்ல காலம் பிறந்து விட்டது. 'மலைக்கு மேலே என்ன இருக்கும்?' என்று அறிவு ஆராய்ந்தது. உடன் வந்த நாணனைக் கேட்டான். ''மேலே உள்ளவர் சிவபெருமான். குடுமித் தேவர் அவர் பெயர். கும்பிடலாம்'' என்று நாணன் அழைக்க, மலைக்கு மேல் பாய்ந்தான் திண்ணன். மலையேறுதல் என்றால்...? பஞ்சபூதங்கள், ஐம்பொறிகள், புலன் உணர்ச்சி போன்ற படிகளைக் கடந்து இறைவனை நோக்கி ஆன்மா பயணப்படுகிறது என்று அர்த்தம்!

கோவிலுக்குள் இருந்த சிவலிங்க மூர்த்தியை ஆர்வத்துடன், ஆச்சர்யத்துடன் பார்த்தான் திண்ணன். ஓடிப் போய்க் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதான். முற்றிய நல்லன்பு வெளிப்பட்டது. 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்ற திருவாசக வரிகள் தெரியாமலேயே அழுதான்.. அழுதான்... அப்படி அழுதான்.

'காட்டில் இவர் தனியாக இருக்கிறாரே' என்ற அதிசயமான கவலை அவனுக்கு. 'இவருக்குப் பசிக்குமே' என்று தாய் மனம் கொண்டு தட்டழிந்தான். கீழே போய் உணவு கொண்டு வர முடிவெடுத்தான்.

காடன் சுட்டு வைத்திருந்த பன்றிக் கறியை ஒரு கையிலும் வில்லை மறு கையிலும் எடுத்துக் கொண்டு மீண்டும் மலை ஏறினான் திண்ணன். பூவும் தண்ணீரும் அவருக்கு இட்டு வழிபடும் வழக்கத்தை நண்பன் நாணன் சொல்லி இருந்தான். பூவும் தண்ணீரும் எப்படிச் சுமப்பது? சடை விழுந்த பிசுக்குத் தலையில்

சுகி சிவம்

பூக்களைச் செருகி, எச்சில் வாய்க்குள் தண்ணீர் சுமந்து வந்தான். சிவபெருமான் தலையில் இருந்த பழைய பூவை எப்படி எடுப்பது? செருப்புக் காலால் தள்ளியபடி, தன் தலையில் இருந்த பூக்களை உதிர்த்தான். இதற்கு நடுவில் எச்சில் நீரால் அபிஷேகம்!

பதம் பார்த்துச் சுட்ட பன்றிக் கறியை ருசி பார்த்து எடுத்து வைத்து, பிள்ளைக்குச் சோறூட்டும் தாயாக உணவூட்டி நின்றான் அவன். மாமிசத்தை மறைத்தார் சிவபெருமான். ரொம்பப் பசி என்று நினைத்து மறுபடி கொண்டு வரக் கீழே சென்றான்.

மறையாலும் முறையாலும் பூசிக்கும் பண்பாளர் சிவகோசாரியார் கோவில் பூசைக்கு வந்த போது செருப்படியும், நாயடியும் கோவிலுக்குள் தெரிந்தன. நெஞ்சு நொந்தார். மாமிசமும் தெரிந்தது. உயிரோடு வெந்தார்.

ஆறு நாட்கள் அவனுக்கும் இவருக்கும் இந்த ஞானக் கண்ணாமூச்சி நடந்து கொண்டிருந்தது. அழுது முறையிட்டார் சிவகோசாரியார். 'அடுக்குமா?' என்று அரற்றினார். ஆண்டவனோ அவனைக் 'கை கால் முளைத்த அன்பு' என்று கோடி காட்டினார்.

எச்சில், கடவுளுக்கு ஆகாது என்போம். அன்பு முற்றினால் எச்சில் பார்க்கும் வழக்கம் இல்லை என்பதும் உண்மை தானே! திண்ணன் காலையில் உணவு கொண்டு வரும்போதெல்லாம் உடம்பு இளைத்து மெலிதாகத் தெரிவார் சிவபெருமான். இளைத்தனர் நாயனார் என்று கட்டித் தழுவிக் கொண்டு கண்ணீர் விடுவான் திண்ணன்.

அன்புப் பரீட்சைக்கு அன்று முழுப் பரீட்சை. சிவகோசாரியார் சிலைக்குப் பின்னால். வந்தான் திண்ணன். சிவபெருமான் கண்ணில் இருந்து ரத்தம்! பாமர அறிவு படபடத்தது. 'யார் செய்தார்கள் இந்த அநியாயத்தை?' என்று சண்டை போட ஆள் தேடியது அந்த வேட்டுவ புத்தி!

அடுத்த விநாடி அன்பு விழித்தது. மருந்து தேடி, பச்சிலைகளைப் பறித்துப் பிழிந்து பார்த்தான். ரத்தம் நிற்கவில்லை. ஊனுக்கு ஊன் என்று தன் கண்ணை அம்பால் பெயர்த்து, அந்தக் கண்ணில் அப்பினான். ரத்தம் நின்றது. ஆனந்தக் கூத்தாடினான். தான் என்ற தன் முனைப்பு அழிந்தது. சரீரப் பிரக்ஞை செத்தது. ஆனந்தம்தானே மிச்சம்!

அடுத்த விநாடி அடுத்த கண்ணில் ரத்தம். கவலை இல்லை திண்ணனுக்கு. வைத்தியம்தான் தெரிந்து விட்டதே!



அடுத்த கண்ணைத் தோண்ட அம்பை எடுத்துக் கண்ணில் வைத்தான். பிறகு பார்வை தெரியாமல் போய் விடுமே என்பதால் அடையாளம் தெரிய, சிவபெருமான் முகத்திலேயே காலை வைத்துக் கொண்டான்.

''நில்லு கண்ணப்ப... நில்லு கண்ணப்ப'' என்று அலறினார் சிவபெருமான். முதல் கண்ணைத் தோண்டும் போது இதே பரபரப்பு - பதற்றம் - அல்லது இரக்கம் சிவனுக்கு இல்லையே! இப்போது மட்டும் எப்படி வந்தது?

முதல் கண்ணைத் திண்ணன் தோண்டும் போது பார்த்துக் கொண்டிருந்த கண், சிவனுடைய கண். இப்போது பார்ப்பது கண்ணப்பன் கண்ணல்லவா? பிறர் துயர் தெரிந்த கண்ணோட்டம் உள்ள கண்ணப்பன் கண், கடவுளையே பதற வைத்தது!

சிவஞான போதமும் சிவஞானசித்தியாரும் படிக்காமல் சிவஞானம் பெற்றான் கண்ணப்பன். எப்படி? தன்னை இழக்கத் தெரிந்தது. கடவுளை அடையத் தடையாக இருந்த 'தன் மீது தான் வைக்கும் பற்று' என்பதை அறவே இழந்திருந்தான்.

(இன்னும் சொல்வேன்)

'ஹிட்லிஸ்ட்'

ஞாயிற்றுக் கிழமை மதியம். உண்ட மயக்கத்தில், கையிலிருந்த அன்றைய நியூஸ் பேப்பரில் இண்டு இடுக்குகளை அலசிக்,கொண்டிருந்த போது அந்த ஹிட்லிஸ்ட் செய்தி என்னைச் சுறுசுறுப்பாக்கியது. தீவிரவாதிகளான 'தறுதலை எலிகளி'ன் தாக்குப்பட்டியலில் எவனெவன் அடிபடப் போகிறானென்று அறிய முற்பட்ட போது தூக்கிவாரிப் போட்டது. மிகவும் மூத்த முன்னாள் மத்திய அமைச்சர், சற்றே பருத்த இன்றைய ஆளும் கட்சித் தலைவர், நாளை ஆளப் போகும் கழகப் பொருளாளர் என ஊருக்குத் தெரிந்த நாலு மனிதர்கள் பெயர்களோடு என் பெயர் எப்படி வரச் சாத்யம்? வந்திருந்தது! 'இந்தத் தலைவர்களுடன் 'பக்கிரி பத்மநாபன்' பெயரும் போராளிகளின் பட்டியலில் இருப்பதாக வ. வா. வ. கழகச் (வதந்தி வாரி வழங்கும் கழகம்) செயலாளர் அறிவித்தார்' எனக் கண்டிருந்தது.

எனக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. பக்கிரி பத்மநாபன் என்ற பெயரில் நான் பத்திரிகையில் எழுதுவது உண்டு. அந்த ரகசியம் எனக்கும் அந்தப் பத்திரிகை ஆசிரியருக்கும் மட்டும்தானே தெரியும்! ஏதோ அடிக்கடி தொல்லை செய்கிறானே என்று, வருடம் ஒருமுறை நான் எழுதிய துணுக்கைப் பிரசுரம் செய்து இனாமாகப் பத்து ரூபாய் அனுப்புவார். அப்படிப் பிரசுரமான துணுக்கில் ஏதாவது எக்குதப்பாய்த் தறுதலை எலிகளைப் பற்றி எழுதி விட்டேனோ...? இருக்கலாம் அதற்காக ஹிட்லிஸ்ட் தண்டனையா!

''பத்மநாபன்! கொஞ்சம் பேப்பரைத் தரேளா'' - பக்கத்து வீட்டு வெங்கி கையிலிருந்த பேப்பரைப் பிடுங்காத குறையாக இழுத்து எடுத்துக் கொண்டு போனார். ஒரு வேளை இந்த வெங்கியால் வந்த வினையா? நானும் அவரும் அடிக்கடி அரசியல் அரட்டை அடிப்பது வழக்கம். வெங்கி எப்போதும் நாலு வீடு கேட்கும்படி கத்திதான் பேசித் தொலைப்பார். அப்படி எப்போதாவது பேசும் போது அந்த இயக்கத்தைப் பற்றி நான் உளறியிருப்பேனா? வெங்கியை நம்ப முடியாது. அவரே கூட நான் இப்படிப் பேசியதை நாலு பேரிடம் சொல்லி மாட்டி விட்டிருப்பார். ஆறு மாதம் முன்பு அவர் வாங்கிய ஐம்பது பைசாவைத் திருப்பிக் கேட்டதில் அவருக்கு என் மேல் கோபமாயிருக்கலாம்.

எது எப்படியோ...! இப்போது வசமாய் மாட்டிக் கொண்டோமே என நினைத்த போது உடல் இலேசாய் நடுங்க ஆரம்பித்தது. எப்படி என்னைக் காப்பாற்றிக் கொள்ளப் போகிறேன்.

பெரிய அரசியல் புள்ளிகள் மாதிரி கறுப்புப் பூனை படைக்குச் சொல்லித் தருவித்துக் கொள்ளலாமா?

''சே... வீட்டிலே கொசுப்படை... தொல்லை தாங்க முடியலே. நூறு ரூபாய் போட்டு ஒரு மிஷின் வாங்கத் துப்பில்லை இந்த மனுஷனுக்கு'' உள்ளே என் துப்பைத் துலக்கிக் கொண்டிருந்தாள் ஜானு. இந்த அழகில் பூனைப் படை ஒரு கோடா எனப் பானை உடைப்பது போல் ஜானு உணர்த்தி விட்டாள்.

ஜானுவிடம் இதைப் பற்றி கூறி விடலாமோ? வேண்டாம். 'ஐயோ உங்களுக்கு இப்படி ஒரு நிலையா?' என அவள் கலவரப்படும் நிலவரம் வர வாய்ப்பில்லை. மாறாக 'நான் அப்பவே சொன்னேன்... அசடாட்டம் பேசாதிங்க. அச்சுபிச்சாட்டம் எழுதாதிங்கன்னு... இப்ப மாட்டிட்டு முழிங்க' எனத் தன் பங்கிற்கு வேறு இடிப்பாள். சொல்ல வேண்டாம். அப்படி ஏதாவது அசம்பாவிதம் எனக்கு நேர்ந்து விட்டால்... ஜானு உன் நிலைமை என்ன ஆகும்? பாவம் நீயே சமைத்து, நீயே துணிகளைத் துவைத்து.. படு நன்றாகப் படு...

மறுநாள் படுக்கையை விட்டு எழும் போதே பீதியும் பயமும் என் கைகோத்து எழுந்து கொண்டன. ஆபீஸ் போயாக வேண்டும். போய் விட்டு உருப்படியாகத் திரும்புவோமா எந்த உருவில் எப்படி ஆபத்து வருமோ' எனப் பலவிதமாய்ப் பயந்தபடி பல் துலக்கினேன். கலங்கிய முகத்தோடு காப்பி குடித்தேன்.

''அம்மா... பூ...'' வாசலில் பூக்காரி! எனக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது! எப்போதும் வருபவளாய்த் தெரியவில்லை; புதியவள்!

''உங்களைத்தான்... கொஞ்சம் பூ வாங்குங்களேன்'' நான் உள்ளே வேலையாய் இருக்கேன்'' - ஜானு குரல் கொடுத்தாள். குரலில் எமனை ஏற்றி அனுப்புகிறாளே.. தயங்கியபடி அந்தப் பூக்காரியைப்

அகிலா கார்த்திகேயன்

பார்த்தேன்.

''பூ வேண்டாம் போயிட்டு வாம்மா'' என்றதும் முறைத்தாள்.

''ஏன் வேண்டாம்னு அனுப்பறேங்க... இரண்டு முழம் வாங்கறதுதானே? நான் பூஜை பண்ணனும்...'' ஜானு வேறு அவஸ்தைப்படுத்தினாள்.

''பூ ஒரே வாடிக் கிடக்கு'' என்று நான் சொன்னதும்,

''அட... காலில கந்த சாவுகிராக்கி'' எனக் கழுத்தை ஒடித்துக் கொண்டு விடுவிடுவென நகர்ந்தாள் பூக்காரி. எனக்குப் படபடவென அடித்துக் கொண்டது. காலையில் எழுந்தவுடன் 'சாவு கிராக்கி' என்று காதில் விழ வேண்டுமா.. துணிந்து ஒரு முழம் பூ வாங்கி அனுப்பியிருக்கலாமே? வேண்டாம். பூவில் பூகம்பம் அனுப்புவாங்களே அவர்கள்.

ஆபீஸ் கிளம்பும் போது ''ஜானு'' என ஆவலுடன் அழைத்தேன்.

''என்ன ஜானு வேண்டிக் கிடக்கு'' அலுப்புடன் வாசலுக்கு வந்து நின்றாள்.

'போகும் முன் ஒருமுறை உன்னை உற்றுப் பார்க்கிறேன் ஜானு' என்பதாய் அவளைப் பார்த்தேன்.

''இப்ப என்ன திடீர்னு பிரியாவிடை வேண்டிக் கிடக்கு...? நேரமாகலே...? போய்ச் சேருங்க!'' என்றாள்.

நாசமாய்ப் போக. அபசகுனமாய்ப் பேசுகிறாளே...! ஆபத்துக்கு அச்சாரமா? என்னுள் கிலி களிநடனம் புரிய, புறப்பட்டேன்.

வழிநெடுக எங்கே கண்ணி வெடியிருக்குமோ என எண்ணியபடி அடியெடுத்து வைத்து நடந்தேன். சாலையின் ஓரங்களான மண் பகுதியைத் தவிர்த்து, தார்ச் சாலையில் நடந்தேன். விர்ரென்று ஒரு பல்லவன் என்னை உரசாத குறையாக வந்து நின்றது.

''சார் வூட்டிலே சொல்லிட்டு வந்துட்டயா...!'' பஸ் டிரைவர் எரிச்சலாகக் கத்தி விட்டு பஸ்ஸை நகர்த்தினார். பூமி தரை நகர்வது போல என் உடல் சற்று ஆடி விட்டு, பிறகு பிரேக் போட்டு நின்றது.

'வூட்டிலே சொல்லிட்டு வந்துட்டேனா?' என்ன ஒரு வார்த்தையால் வாட்டி விட்டுப் போகிறான்.. என்ன வரப் போகிறதோ... என் மனம் திகிலால் திமிலோகப்பட்டது.

பஸ் டெர்மினஸ். காலியாய் இருந்த பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தேன். குடிதார் தரித்த, கரேலென்ற காரிகை ஒருத்தி உள்ளே ஏறினாள். பஸ்ஸை ஒரு முறை இங்குமங்குமாய்ப் பார்வையால் அலசி விட்டு, என்னை நோக்கி வந்தாள். உதறல் என்னைக் குதற என் கால்கள் இஞ்சின் பிஸ்டனாய்ப் படபடத்தன. அருகில்... நெருங்கியவள் குனிந்து என் காலைத் தொட்டு நிமிர்ந்து தன் கையிலிருந்த எதையோ பொத்தென்று மடியில் போட, நான் வியர்வையில் தொப்பலாய் நனைந்தேன்.



''ப்பே.. ப்பே...'' என்றாள் அந்த ஞுடி தார் பெண். மடியில் விழுந்திருந்த அட்டையைப் பார்த்தேன். 'ஊமைப் பெண் உதவி செய்யுங்கள்' என்பது போன்ற வாசகங்கள் இருந்தன... வெடவெடத்துப் போன நான் இப்போது வெட்கத்தால் கூசினேன். ஒரு ரூபாய் நோட்டைத் தாராளமாய்த் தந்து விரட்டினேன்.

ஆபீஸில் நுழைந்தவுடன் எல்லோரும் என்னை மொய்த்துக் கொண்டார்கள்.

''லிஸ்ட் வந்தாச்சு தெரியுமா பத்மநாபன்?'' வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார் வரதராஜன்.

''எப்ப பார்ட்டி வைச்சுக்கலாம்?'' ஜெயராமன் கூசாமல் கேட்டார். எல்லோருக்கும் தெரிந்திருக்கிறதே...! அது எப்படி? நான் பக்கிரி பத்மநாபன் என்ற புனை பெயரில் எழுதுவது இவர்களுக்குத் தெரிய நியாயமில்லையே... அப்படியிருக்க, பேப்பரில் வந்த பக்கிரி பத்மநாபன் என்பது நான்தான் என எப்படி இவர்களுக்குத் தெரிந்தது... அப்படியே தெரிந்திருக்கட்டுமே 'ஐயோ பாவம்' என நினைக்காமல் வாழ்த்துகிறார்களே பாவிகள்...! இது நியாயமா என எண்ணியபடி ஒரு விளக்கெண்ணெய் பார்வையை அவர்கள் மேல் வீசினேன்.

''என்ன சார் 'பிரமோஷன் பேனல்' அப்ரூவ் ஆயிடுச்சி... உங்க பேர் லிஸ்ட்டில் இருக்குன்னு சொல்றோம்... முகத்திலே ரியாக்ஷனே இல்லையே!'' என்று கனகசபை சொன்ன போது வலுக்கட்டாயமாக ஒரு அசட்டுப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு ''ஹி... ஹி... தேங்க்ஸ்!'' என்று வழிந்தேன்.

வெகு நாட்களாக எதிர்பார்த்த பிரமோஷன் லிஸ்ட் வெந்து போன சமயத்தில் வந்திருக்கிறது...

''பிரமோஷன் வந்துதே ஐயா 'உம்' முணுகிறாரே'' எனச் செல்வராஜ் ஏத்திவிட, ஏகாம்பரம் ''நம்ப பார்ட்டி கேட்டோமில்லே பயந்துட்டாரு போலகீது. என்னா எல்லாருக்கும் ஒரு டீ வாங்கித் தருவாருன்னு பார்த்தோம். அதுக்கே உசுரை வுட்டுடுவாரு போலகீதே!'' என இடக்காகப் பேசியதும் என் மனம் மடக்கென மறுபடியும் உடைந்தது. இது ஏதடா ஆளுக்கு ஆள் அபசகுனமாய்ப் பேசுகிறார்களே!

இன்னும் ஒரு வாரமா, ஒரு மாதமா ஒரு வருடமா தெரியவில்லை. லிஸ்ட்டில் உள்ளவர்களை சீனியாரிடி வரிசையில் வீழ்த்துவார்களா அல்லது அகப்பட்டவர்களை அவ்வப்போது வீழ்த்துவார்களா? எதற்கும் இந்த லிஸ்ட்டைப் பற்றி அறிவித்த வ.வா.வ. கழகச் செயலாளரைத் தொடர்பு கொண்டால் ஏதாவது செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு. விலாசத்தை ஆபீஸில் சிலரிடம் விசாரித்தேன். கே. கே. நகரில் இருந்த வ. வா. வ. கழகத்துக்குப் போக, பர்மிஷன் போட்டு விட்டுக் கிளம்பினேன்.

பஸ் ஸ்டாப்பில் தன்னந்தனியாக கே. கே. நகர் பஸ்ஸுக்காக நின்றிருந்தேன். இப்படி ஒரு துப்பாக்கி கலாசாரத்தில் மாட்டிக் கொண்டு துணை இல்லாமல் நிற்கும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டதை எண்ணி எரிச்சலடைந்தபோதே... பக்கத்தில் ஒரு பைஜாமா ஜிப்பா ஆசாமி மிகப் பெரிய ஜோல்னா பை சகிதம் வந்து நிற்கவே, வெடவெடத்தேன். ஆசாமி உற்றுப் பார்த்தபடி என்னை நெருங்கினான். ஜோல்னா பையில் கையை விட்டு எதையோ வெளியில் எடுத்தான்.

''சார் ஏ. கே. 47...'' என்று அவன் ஆரம்பிக்கவும் நான் ஆடிப் போனேன். சப்த நாடியும் ஒடுங்கிப் போயிற்று. ஆசாமி துப்பாக்கியை எடுத்து என்னை வீழ்த்தப் போவது நிச்சயம். ஆண்டவா ஒரு குண்டிலேயே என்னைக் கொண்டு போய் விடுவாயா இதை நான் எதிர்பார்க்கவே இல்லை. தெரிந்திருந்தால் இட்லி பானையையோ, 'டிரே'யையோ ஏழைக்கேற்ற புல்லட் புரூஃப்பாக அணிந்து வந்திருக்கலாம். இட்லி பானையில் ஓட்டை விழுந்தால் ஜானு ஒப்புக் கொள்வாளோ?

பயமும் யோசனைகளும் மனத்தில் சடுகுடு ஆட, பற்கள் தாமாக எதையோ தந்தியடிக்க, ஒரு தடுமாற்றத்தில் இருந்


''அம்மா! இன்னிக்கு நான் கொஞ்சம் சீக்கிரம் போகணும்!''

''சரி.. சரி.. பத்துப் பாத்திரங்களையெல்லாம் நானே தேய்ச்சுக்கிறேன். அக்கம் பக்கத்து வம்புகளை மட்டும் சொல்லிட்டு நீ கிளம்பு!''

- ஞா. ஞானமுத்து.



மன நிம்மதி அடையும் மகிழ்ச்சி



இந்த் மோத்தியில் முதலீடு செய்யுங்கள். மன நிம்மதி அடைவீர்கள். இந்த் மோத்தி, 5 வருடங்களுக்கு மேலும் ஒவ்வொரு வருடமும் டிவிடெண்ட் வழங்குகிறது. முழுத் தொகைக்கான டிவிடெண்ட் பெற்றுக் கொண்டு வந்தாலும், முதலீட்டின் 75 சதவீதத்தை பயன்படுத்தும் வசதியை நீங்கள் பெறுகிறீர்கள்.

IND MOTI
EQUITY GROWTH SCHEME

இந்த் மோத்தி

பங்கீட்டு வளர்ச்சித் திட்டம்

வழங்கீடு துவங்கிவிட்டது

அல்லது மூலதன லாபத்திட்டமான இந்த் ஸாகரில் முதலீடு செய்து உங்களுக்கு வந்து சேரும் லாபத் தொகைக்கு வரிச்சலுகை பெறலாம்.

மேலும் என்ன ! இரண்டு திட்டங்களும் உங்களுக்கு அளிப்பவை — நிச்சயமான அலாட்மெண்ட், எளிதான முறையில் மற்றவர் பெயருக்கு மாற்றும் வசதி, வரிச்சலுகை மற்றும் பங்கு மார்க்கெட்டில் விற்கும் வசதி. ஆகவே, தாமதிக்காமல், மன நிம்மதி அடையும் திட்டத்தில் உடனே முதலீடு செய்யுங்கள்.

இந்தியன் பாங்க்
பரஸ்பர நிதி
உங்கள் செல்வச் செழிப்பின் சிற்பி

07 : 1810 : TM

தேன்.

''சார் கேட்கிறேனே ஏ. கே. 47, கே. கே. நகருக்குப் போகுமா?'' என ஜிப்பா, ஜோல்னா பையிலிருந்து எடுத்து ஒரு வெள்ளைத் தாளைப் பார்த்தபடி கேட்டான். எனக்கு உயிர் வந்தது.

''ஏ. 47ன்னு கேட்டுத் தொலையேன்யா.... சாரி.. கேட்டுத் தொலைங்க சார்... அது கே. கே. நகர் போகாது. நானும் கே. கே. நகர்தான் போறேன்'' என்று பெருமூச்சு விட்டேன். ஆசாமி கே. கே. நகரையும் ஏ. 47 யும் கலந்து ஏ. கே. 47 ஆக்கி ஒரு நிமிடம் கலக்கி விட்டாரே என்று இருந்தது.

''சாரி, பழக்கதோஷம் அதான் ஏ. கே. 47ன்னு சொல்லிட்டேன்'' ஆசாமி திரும்பவும் குண்டைப் போட்டார்.

''பழக்கதோஷமா?'' பேய் முழி முழித்தேன்.

''ஆமாம் எப்பவும் ஏ. கே. 47னோட விளையாடறவன் நான். அதான் அப்படிக் கேட்டுட்டேன்.... யாரோ வதந்திநாதனாம் எங்க லிஸ்ட்டில் இல்லாதவங்க பேரையெல்லாம் சொல்லி எங்களையே அவமானப்படுத்திருக்கான். அவனைத் துப்பாக்கி முனையிலே விசாரிக்கலாம்னுதான்... இப்ப கே. கே. நகர் போறேன்!''

''அப்ப... ப... நீ... நீங்க...'' குழறினேன்.

''தறுதலை எலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன். எவனோ பக்கிரி பத்மநாபனாம் அவனும் எங்க லிஸ்ட்டில் இருக்கானாம். பேத்தலாய்ப் பேத்திருக்காரு வதந்திநாதன். உதவாக்கரைங்களையெல்லாம் ஹிட்லிஸ்ட்டில் சேர்க்க எங்களுக்கு என்ன பைத்தியமா?'' நீங்களே சொல்லுங்க... கோபமாக ஆசாமி பேசினார்.

''அப்ப பக்கிரி பத்மநாபன் பேரு உங்க லிஸ்ட்டில் இல்லையா?'' ஆவலோடு கேட்டேன்.

''கண்ட தறுதலைப் பசங்களை அந்த லிஸ்ட்டில் சேர்ப்போமாய்யா! சந்தேகமா, இருந்தா இதோ பாரு, எங்க தலைவர் தயாரித்த 'அப்ரூவ்ட் லிஸ்ட்' என்று, டைப் செய்த பேப்பரை சரசரவென்று என்முன் நீட்டினான்.

லிஸ்டை வாங்கிப் பார்த்தேன்.

அதில் நிஜமாகவே என் பெயர் இல்லை.

''பக்கிரி பத்மநாபனாம்! கண்ட பரதேசிப் பயல்களைப் பற்றி எங்களுக்கு என்ன கவலை...!'' குர்த்தா ஆசாமி! மீண்டும் குமுறினார்.

தலை தப்பியது தம்பிரான்.. இல்லை தறுதலை எலிகள் புண்ணியம்... என அங்கிருந்து விரைந்தேன்.

கல்யாணங்களில் தலைவர் பாலன்

சொற்பொழிவு நிகழ்த்தி கல்யாணத்தை நடத்தி வைப்பாராக்கும் என்று எண்ண வேண்டாம்! சென்னை 'நியூ உட்லண்ட்ஸ்' ஹோட்டலில் சர்வராகத் தமது வாழ்க்கையை ஆரம்பித்த பாலன், இன்று ''தென் இந்திய சமையல் கலைஞர்கள் முன்னேற்ற சங்கத்தின்'' தலைவர். 'தலைவர் பாலன்' என்றே சக தொழிலாளர்களால் அழைக்கப்படும் இவர் கலைஞர் கருணாநிதி உட்பட பல பெரிய மனிதர்கள் வீட்டுக் கல்யாணங்கள் களைகட்டச் செய்தவர். அவருடன் ஒரு பேட்டி....

கேள்வி : தனியாக காண்ட்ராக்ட் எடுத்துச் சமையல் தொழில் செய்வதை எப்போது ஆரம்பித்தீர்கள்?

பதில் : எனக்கு 22 வயதிலேயே திருமணம் ஆகிவிட்டது. என் மைத்துனியின் கணவர் (சகலை) சமையல் காண்ட்ராக்டராக இருந்து தொழில் செய்து வந்தார். அவருடன் கூடவே சென்று தொழில் கற்றுக் கொண்ட நான், ஏற்கனவே உட்லண்ட்ஸிலும் சமையலைக் கற்றுக் கொண்டிருந்த அனுபவத்தால் 26 வது வயதிலிருந்து இத்தொழிலைத் தனியாகச் செய்ய ஆரம்பித்தேன்.

கேள்வி : கல்யாணச் சமையலுக்குச் சாமான்கள், காய்கறிகள் வாங்க, எந்த அடிப்படையில் நீங்கள் லிஸ்ட் போடுவீர்கள்?

பதில் : 300, 500, 1000 பேர்களுக்கு ரெடிமேட் லிஸ்ட்கள் உள்ளன. அதன்படி சாமான் வாங்கிவிட்டாலும், கூட்டத்திற்குத் தகுந்தாற் போல சமையல் செய்ய அனுபவம் தேவை. சாதாரணமாகத் திருமண வீட்டில் பெண், பிள்ளை வீட்டார், முதல் நாள் இரவுதான் நன்றாகச் சாப்பிடுவார்கள். காலை முகூர்த்த நேரத்தில் இரு வீட்டாரும் சரியாகச் சாப்பிடாமல் கொறிப்பார்கள். காரணம் சாப்பாடு ருசியாக இருந்தாலும், எல்லாம் சரியாக நடந்தேற வேண்டுமே என்ற கவலையில் சாப்பிடப் பிடிக்காது. இது மனோ தத்துவம். இதையறிந்து முகூர்த்த நேரத்தில் வந்திருக்கும் கூட்டத்துக்கு மட்டுமே சமைக்க வேண்டும். அதற்கேற்ப சாமான்கள் வாங்க வேண்டும்.

கேள்வி : இதுபோல அனுபவமில்லாமல் ஆரம்பக் காலத்தில் தவறு நேர்ந்திருக்கிறதா உங்களுக்கு?

பதில் : ஆமாம். ஒரு நிகழ்ச்சி சொல்கிறேன். ''தொலைபேசி மகாநாடு'' ஒன்று நான்கு நாட்களுக்கு ஏற்பாடாகி இருந்தது. சமையல், டிபன், காப்பி போன்ற எல்லாவற்றுக்கும் நான்தான் முழுப் பொறுப்பு. ஒரு வேளைக்கு 5000 பேர் வந்தனர்! அனைவரும் இருபது வயது முதல் நாற்பது வயது வரை உள்ளவர்கள். முதல் முறையாக இது போன்ற மாநாட்டுக்கு வேலை செய்ய வந்த நான் கல்யாணத்திற்கு லிஸ்ட் கொடுப்பது போல கொடுத்துவிட்டேன். அதன்படி சமைத்து முடித்தேன். மூவாயிரம் பேர் சாப்பிட்டவுடன் சாப்பாடு தீர்ந்து விட்டது. மீதி இரண்டாயிரம் பேருக்கு என்ன செய்வது? கல்யாணக்காரியம் என்றால் பெண்கள், குழந்தைகள், வயோதிகர்கள்



அடுத்த இதழில்...



●● வளரும் பாலியஸ்டர் மோகம்
- கவர் ஸ்டோரி

எல்லோருமே கலந்திருப்பார்கள். இங்கு எல்லோருமே திடமான இளைஞர் பட்டாளம். நன்றாக ஒரு பிடி பிடித்தார்கள். யோசனை செய்தேன். எப்போதும் ஒரு அடுப்பில் வெந்நீர் கொதித்துக் கொண்டிருக்கும். சட்டென்று ரவையைக் கொட்டிக் கிளறி வெங்காயம், தக்காளியுடன் தாளித்து, கிச்சடி செய்தேன். சமாளித்தேன். முதல் நாள் அனுபவப்பட்டதால் மற்ற மூன்று நாட்களும் நன்றாகச் செய்து கூட்டத்தைத் திருப்திப்படுத்தினேன்!

கேள்வி : உங்கள் சாதனைகளாக எவற்றைக் குறிப்பிடுவீர்கள்....?

பதில் : *1967* ல் கடுமையான ரேஷன் காலம். அரிசியே கிடைக்காது. சில கல்யாணங்களில் சேமியாவைக் கொண்டே பல தினுசுகள் செய்தேன். சேமியா பாயசம், எலுமிச்சை சேமியா, சேமியா புலவு, தேங்காய் சேமியா, சேமியா பகாளாபாத் போன்றவைகளைச் செய்து பாராட்டுப் பெற்றது நல்ல அனுபவம். தென்னிந்திய சமையல் கலைஞர் சங்கம், என் தலைமையில் ஆரம்பித்ததும், யூனியன் நிறுவி, ஐம்பது பேர்தான் திருமணத்துக்கு வர வேண்டும் என்று ஏற்பட்டிருந்த புதிய சட்டத்தை எதிர்த்தோம். மேலும் கல்யாண வீடுகளில் இந்தச் சட்டம் மீறப்படாமல் இருக்கிறதா என பூட்ஸ் காலுடன் போலீஸார் கண்காணிக்க வரும் போது, பரிமாறியுள்ள பொருள்கள் வீணாகிச் சமையல் சுகாதாரமற்றுப் போவதையும் எடுத்துச் சொன்னோம். சாப்பாட்டில் சில வகைகளைக் (அயிட்டங்களைக்) குறைத்துக் கொண்டு இருநூறு பேரை அழைக்க அனுமதி தரவேண்டும் எனப் போராடி வெற்றியும் பெற்றோம். மேலும் இத் தொழிலில் ஒருவருக்கு அடிபட்டால் ரூ. 5000 மும் இறந்துவிட்டால் ரூ. 10,000 மும் நஷ்டஈடு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். 'கைவினைக் கலைஞர்கள்' பட்டியலில் எங்களையும் சேர்த்ததன் மூலம் இக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கேள்வி : இந்தத் தொழிலில் பல ஆட்களை, குறிப்பாகச் சுறுசுறுப்பான இளைஞர்களை வைத்து வேலை வாங்க வேண்டும். பல சமயம் பரிமாறுவோர் தவறாக நடந்து கொள்வதால் தலைமைச் சமையற்காரருக்குக் கெட்ட பெயர்... நீங்கள் எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

பதில் : ஆட்களை வேலைக்கு வைத்தால் மட்டும் போதாது. கணிசமான சம்பளம் கொடுக்க வேண்டும். தவிர, சரியான மேற்பார்வை வேண்டும். நான் மேற்பார்வையாளர் ஒருவரை அனுப்பி வைப்பேன். திருட்டு, தகராறு நடக்காமலும், பெண்கள் பக்கம் அடிக்கடி போய் அரட்டை அடிக்காமலும், பேசிப் பேசி பெயரைக் கெடுத்துக் கொள்ளாமலும் இவர் கவனித்துக் கொள்வார். யாருக்குமே தெரியாமல் எனக்கு மட்டுமே தெரிந்த இரண்டு ''சி. ஐ. டி''க் களையும் நடமாட விடுவேன். எந்த ஆள் சரியாக இல்லை என்று ரிப்போர்ட் செய்கிறார்களோ அவரை வேலையிலிருந்து எடுத்துவிடுவேன். நிறையச் சம்பளம் கொடுத்து, நல்ல ஒழுக்கமுள்ள ஆட்களைத் தேர்ந்தெடுத்து நம் கண்காணிப்பிலும் வைத்திருப்பதுதான் தொழில் வெற்றிக்குக் காரணம் என்று நினைக்கிறேன்.

கேள்வி : நீங்கள் செய்யும் வித்தியாசமான ஸ்பெஷல் ஐட்டம் எது.....?

பதில் : கருவேப்பிலை சாதம் என்ற புது தினுசு சாதம் பலருக்குப் பிடித்திருக்கிறது. செய்முறை கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். பொதுவாக எல்லா சமையல் வகைகளையும், இனிப்புகளையும் அதற்குள்ள வல்லுனர்களைக் கொண்டே தயாரிப்பது என் வேலைக்குப் பெருமை சேர்க்கிறது. வெறும் தயிர்சாதம், வற்றல் குழம்பு என்றால் கூட ருசியாய், கவனமாய்ச் செய்வோம். ஒரு திருமணத்தில் இரவு சாப்பாடு வேண்டாம் என்று மறுத்தார் குடும்பத்தலைவர். தயிர்சாதம், சிறிது வற்றல் குழம்பு தொட்டுக் கொண்டு சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினேன். அரை மனத்தோடு சாப்பிட ஆரம்பித்த அவர், மூன்று முறை தயிர்சாதம் வற்றல் குழம்புடன் சாப்பிட்டுவிட்டு, மீதியுள்ள குழம்பை வீட்டுக்கு அனுப்பும்படி சொன்னார்!

கேள்வி : எதிர்பாராமல் கூட்டம் அதிகமானால் என்ன செய்வீர்கள்?

பதில் : பந்தலில் சுற்றி வந்து கூட்டத்தைக் கணிக்கவே ஒரு ஏஜெண்ட் போடுவோம். இவர் சற்று அனுபவஸ்தராக இருப்

பார். எதிர்பார்த்ததற்கும் அதிகமாகக் கூட்டம் உள்ளதா என்று உடனுக்குடன் எங்களுக்குத் தகவல் தருவார். அதன் அடிப்படையில் சில யுக்திகளைக் கையாண்டு நாங்கள் சீக்கிரமாக அதிக உணவு தயாரித்துச் சமாளிப்போம்.

உதாரணமாக - சாதத்தைக் குழைய விட்டு, தேங்காய், வெல்லம் அரைத்துக் கலந்து இரண்டாவதாக ஒரு பாயசம் செய்வோம். இரண்டு பாயசங்கள் போடுவதால் மற்ற ஐட்டங்கள் செலவு குறைந்து கடைசிப் பந்தி வரை தாக்குப்பிடிக்கும்.

சில சமயம் துவரம் பருப்பை மிஷினில் உடைத்து வரச் செய்து ஓர் அலசு அலசி, கொதிக்கும் புளி நீரில் போட்டு அவசர சாம்பார் செய்வோம்.

ஒரு திருமணத்தில் சம்பந்திகள் அதிகம் பேர் வரமாட்டார்கள் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால் சமாளிக்க முடியாமல் கூட்டம் வந்துவிட்டது. மே மாத முகூர்த்தம். நிறைய ஐஸ் வாங்கி வரச் செய்து முகூர்த்தம் முடிந்த கையோடு எல்லோருக்கும் தாராளமாக சர்பத் கொடுத்து விட்டேன். அதனாலேயே பாதி வயிறு நிறைந்து சாப்பாடு அதிகம் செல்லவில்லை. வேறு வழியின்றி இப்படிச் செய்ய நேர்ந்தது. பரிமாறும் விதத்திலும் சாப்பாட்டை நிரவி, கூட்டத்தைச் சமாளிக்கலாம்.

கேள்வி : கல்யாணச் சாப்பாடு அளவாகச் சாப்பிட்டாலும் சில நேரங்களில் வயிற்றைச் சங்கடப்படுத்துகிறதே....?

பதில் : என் சமையலில் வெந்தயம், நல்லெண்ணெய், மஞ்சள் பொடி, இஞ்சி, தனியா போன்றவைகளை அளவோடு சேர்ப்பதால் இதுவரை வயிற்றுக் கோளாறுகள் வந்ததே இல்லை. தண்ணீரிலும் 'விளாமுச்சை வேரை'ப் போடாமல் தரமாட்டேன். பலவித நோய் எதிர்ப்பு சக்தி உள்ள வேர் அது. தொண்டையும் கட்டாது. எங்களைப் போன்ற அனுபவமுள்ளவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்தால் டாக்டரிடம் போக நேர்வதைத் தடுக்கலாம். என் தொழில் மேல் உள்ள பற்றினாலும், பக்தியாலும் என் இரண்டு பிள்ளைகளையும் இதே தொழிலில்தான் விட்டுள்ளேன்.

- பானுமதி இராமச்சந்திரன்



வாசகர் யோசனை :
என். ஆர். பாஸ்கரன்,
சிதம்பரம்.




''அந்த இஞ்சினியர் ரொம்ப மோசம்!''

''ஏன் அப்படிச் சொல்றே?''

''எப்பக் கேட்டாலும் 'சைட்'டுக்குப் போயிருக்கிறதாச் சொல்றாங்களே!''

- சீர்காழி. வி. ரேவதி.



பஸ் பிரயாணி : ''ஏன் ஐயா, இவ்வளவு வயசாகியும் பொம்பளைங்க பக்கமே முறைச்சு முறைச்சுப் பார்க்கிறேயே, அறிவிருக்கா?''

வயதானவர் : சும்மா இருய்யா. 'சுபா' எங்காவது கிடைப்பாளோன்னு பார்த்துட்டிருக்கேன்!

- எஸ். டி. ரங்கராஜன்.

''உனக்கு முன்னே இருந்த ராமுவைப் பார்த்துத்தானே பரீட்சையில காப்பி அடிச்சே? அவன் பாஸாயிட்டான். பின் நீ எப்படிடா ஃபெயில் ஆனே?''

''அவன் மேத்ஸ் மெயின். நான் சயின்ஸ்டா.. இப்பத்தான் தெரியுது...''

- திருத்துறைப்பூண்டி.
எஸ். கந்தசாமி.



50

கல்லூரி மாணவர் கட்டுரைப் போட்டி

தமிழகத்தில் தேர்தல்

ரூ. 50 பரிசு பெறும் கட்டுரை

''பெரியார், ராஜாஜி, காமராஜர் ஆகியோர்களுடன் அரசியல் நடத்திய நான் இன்று யாருடன் அரசியல் நடத்த வேண்டி யிருக்கின்றது பார்த்தீர்களா?'' என்று விதியை நொந்து கொண்ட பகுத்தறிவுச் சிங்கம் கருணாநிதி; தி. மு. க.வைத் 'தேசத் துரோகக் கட்சி' என்று பகிரங்கமாக விமரி சனங்கள் பண்ணி, மேடையில் யாரையும் அமர விடாமல் மரபுகளைக் 'கிலோ என்ன விலை?' என்று கேட்ட புரட்சித் தலைவி; எதையும் தாங்கும் இதயத்துடன் வலம் வந்த நாவலர்; வோட்டுக் கேட்க வந்த முன்னாள் பிரதமரை வேட்டு வைத்துக் கொன்ற சதிகாரக் கும்பல்; எரிகின்ற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்று கருதிய தமிழக காங்கிரஸின் தலைமை; வதந்தியைப் பரப்புவதில் வல்லவரான வாழப்பாடி இராமமூர்த்தி; 'தேர்தல் எல்லாம் எதற்கு?' அதற்கு முன் நாங்களே முடிவு தருகின்றோம்' என்ற ரீதியில் அமைந்த கட்சிச் சார்புப் பத்திரிகைகளின் அரைகுறைக் கணிப்புக்கள். ஆள் உயரக் கட்அவுட்டுகள், பட்டொளி வீசிப் பறந்த



கொடிகள், உயர்ரக கார்களின் அணி வகுப்பு, நீதி கேட்கும் திரௌபதி என்ற ரீதியில் அமைந்த வண்ணப் போஸ் டர்கள்.... - தமிழகத்தில் தேர்தல் பரபரப் பானதாக இருந்தது. ஆனால் ஆரோக்ய மானதாக இல்லை.

எல்லாக் காலத்திலும் கோஷ்டிப் பூசல் களில் முதலிடம் பெற்ற சத்தியமூர்த்தி பவ னில் இந்தத் தேர்தலில் கோஷ்டிப் பூசல் இல்லை. ஏனெனில் இவர்களுக்கு வதந் தியைப் பரப்புவதற்கே நேரம் போத வில்லை! வதந்தியைப் பரப்புவதற்கு நோபல் பரிசு வழங்கப்பட்டால் சத்ய மூர்த்தி பவன் போட்டியின்றித் தேர்ந் தெடுக்கப்பட்டு விடும்.

தங்கள் ஆட்சியின் சாதனைகளைப் பேச மேடை ஏறிய தி. மு. க.வினர், நாவலர் உள்ளிட்ட அ. தி. மு. க. தலை வர்களை, செல்வி மேடையில் நிற்க வைத்ததையே பேசி, காலத்தை ஓட்டினர். ஒருவேளை இவர்களின் சாதனையே மற்றவர்களைக் குறை கூறுவது தானோ என்று திருவாளர் பொது மக்கள் திகைத்து நின்றனர்.

ஒன்று மட்டும் நிச்சயம். அண்ணல் தேர்தலில் தமிழகத்தில் நின்றிருந்தால் கவர்ச்சி அரசியலில் தாக்குப்பிடிக்கத் திணறி வேட்பு மனுவை வாபஸ் பெற்றி ருப்பார். மீறி நின்றிருந்தால் டெபாசிட்டை இழந்திருப்பார்!

''கட்சியை விட வேட்பாளர் முக்கி யம்; வேட்பாளரின் கொள்கையை விட அவரது நடத்தை முக்கியம்; நடத்தை சரி யில்லாத ஒருவரால் நாட்டுப் பணி ஆற்று வது இயலாத காரியம்'' என்று அண்ணல் அன்று சொன்னது தமிழகத்தைத் தீர்க்க தரி சனத்தால் கண்டுதானோ?

- ஆர். நடராசன்,
மூன்றாமாண்டு வேதியியல்,
எண் : 480,
சரசுவதி நாராயணன் கல்லூரி,
மதுரை - 22.

மாணவரிடையே மோதல்!

மாற்றுக் கட்சிகள் மீது சேற்றை வாரி வீசும் குற்றச்சாட்டுக்கள், தலைவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை அப்பட்டமாக

அலகும் மூன்றாந்தரப் பேச்சுக்கள் என்று இப்படி ஒரு தரம் குறைந்த பிரசாரத்திற்காக எவ்வளவு பணச் செலவு? எவ்வளவு ஆர்ப்பாட்டங்கள்? ஒருமுறை எங்கள் கல்லூரி விடுதியில் இரு மாணவர்களிடையே கைகலப்பே உண்டாகி விட்டது. சாதி, மத உணர்வுகளைத் தூண்டிவிடக்கூடிய தேர்தல் பிரசாரங்களினால் வந்த வினை! இளம் உள்ளங்களில் இந்தப் பேச்சுக்கள் விஷச் செடிகளையல்லவா பதித்து விடுகின்றன. மஞ்சள் பத்திரிகையையும் விஞ்சும் சுவரொட்டிகள்! அவற்றில் படிக்கக் கூசும் வாசகங்கள். என் மனம் வேதனையுற்றது. இப்படி ஒரு தேர்தல் அவசியமா என்று கூட நினைத்தேன்!


- ஜி. நிரஞ்சன்,
இரண்டாம் ஆண்டு,
பெட்ரோ கெமிக்கல்ஸ்,
ஈரோடு இன்ஸ்டிடியூட் ஆப் கெமிக்கல்ஸ்
டெக்னாலஜி,
ஈரோடு - 11.

அஸ்தி ரயிலில் சிறப்பு விருந்து!

மக்களின் அறியாமையைச் சாதகமாக்கிக் கொண்டு வாழப்பாடி ராமமூர்த்தி அள்ளி வீசிய பொய்கள் ஒரு நாலாந்தர அரசியல்வாதியின் பேச்சை விட மோசம். உதாரணமாகத் தேர்தலுக்குச் சில நாள் முன்பு 'தி. மு. க. வினர் 100 தொகுதிகளைக் கைப்பற்றத் திட்டம்' என்ற தலைப்பில் தனது சொந்தக் கற்பனையில் ஒரு பெரிய அறிக்கை விட்டிருந்தார். ஒருவேளை எங்காவது கலவரங்கள் நடந்தால் ''நான் முன்பே கூறினேன்'' என்று சொல்லலாம். கலவரங்கள் நடக்கவில்லை என்றால், 'போலீசாராலும், பொது மக்களின் உதவியாலும் கலவரங்கள் முறியடிக்கப்பட்டன' என அறிக்கை விடலாம். 110 வயதான காங்கிரஸ் கட்சி கொள்கைகளை விட்டு விட்டு சாவை முன்னிறுத்தி வோட்டு கேட்டவிதம் இதை விட வேதனையாய் அமைந்தது. அஸ்தி கலசம் கொண்டு செல்லப்பட்ட ரயில் வண்டியில் இருந்த காங்கிரஸ் தலைவர்கள் பலர் சிறப்பு விருந்து தருவித்து உண்டதும் அஸ்தியைப் பார்க்கக் கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்துக் கையசைத்து மகிழ்ந்ததும் படு கேவலம்.

ஜெயலலிதாவின் ஒரே குறி கருணாநிதி என்ற தனிமனிதர்தான். கொள்கை, திட்டம் முதலியன ஓரம் கட்டப்பட்டு ''கருணாநிதி, ஒரு தீய சக்தி'' என்று பேசப்பட்ட பேச்சுக்கள்தான் அதிகம்.

கருணாநிதியும் கொள்கை அளவில் தாக்கத் தைரியமற்று மிகவும் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசிய பேச்சுக்கள் கண்டிக்கத்தக்கவை. திரு. ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலையைக் காங்கிரஸ்



மீதே திருப்பியது மிகவும் அபத்தம்.

தி. க. வினர் ''நம்மை ஆளப் போகிறவர் தமிழராகிய கருணாநிதியா? பார்ப்பனராகிய ஜெயலலிதாவா?'' என்பது போன்ற தேர்தல் பிரசார சுவரொட்டிகளைப் பயன்படுத்தியது கண்டிக்கத்தக்கது மட்டுமல்ல தண்டிக்கத்தக்கது.

- எஸ். அருள்சாமி,
பி. எட். பட்டப் படிப்பு,
சென்னை பல்கலைக் கழகம்.

ஒப்பாரியும் ஒப்பற்ற பொய்யும்!

''ஆட்சியைக் கலைத்தது நியாயமா? ஆட்சியைக் கலைத்தது நியாயமா'' என்று தி.மு.க. வைத்த ஒப்பாரி எல்லோரையும் சிரிக்க வைத்தது. நல்ல பல திட்டங்களை இவர்கள் சொல்லாமல் அழுது வடிவது ஏன் என்று பலரும் குழம்பினார்கள்.

மிருகத்தனமான முறையில் திரு. ராஜீவ் கொல்லப்பட்டார். அ. தி. மு. க. கூட்டணியினரின் படுகேவலமான பிரசாரம் தொடங்கியது. ''அன்று மதுரையில் தாயைக் கொல்ல முயன்றவர்கள்; இன்று ஸ்ரீபெரும்புதூரில் மகனைக் கொன்று விட்டனர். படுகொலை புரிந்திட்ட பாவிகளை இறைவன் தண்டிப்பதற்கு முன் தமிழக மக்களே! நீங்களே தண்டியுங்கள்!'' என்று சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.



''மாமா! ஒரு நூறு ரூபாய் இருந்தாக் கடனாக் கொடுங்க!''

''கையில் 'சுத்தமா'ப் பணமே யில்லை மாப்பிள்ளை!''

''பரவாயில்லை மாமா! 'அழுக்கு' நோட்டாக இருந்தாலும் கொடுங்க!''

- சுந்தர் சாதிக்.

தி.மு.க. தலைவர்களை நேரடியாகக் குற்றம் சுமத்திப் பிரசாரம் செய்தார்கள். சிறு பிள்ளைத்தனத்தை விடக் கேவலமாக அறிக்கைகள் விட்டனர்.

எல்லாத் தேர்தலும் போல இத் தேர்தலிலும் காக தண்ணீராகச் செலவழிக்கப் பட்டது. பெட்ரோல், டீசல் பற்றாக்குறை என்று சொல்லிக் கொண்டே பல நூறு கார்கள் புடைசூழ, தலைவர்கள் ''ஜாலியாக'' பவனி வந்தனர்.

- எம். கிருபேஷ் ராஜ்,
வணிகவியல் முதுநிலை இரண்டாமாண்டு,
மதுரை காமராஜர் அஞ்சல் வழிக் கல்வி,
மதுரை - 25.

அலங்கோல விளம்பரம்!

ராஜீவ் மண் மாதாவை முத்தமிட்டு மடிந்த மறு நிமிடம் அலங்கோலமாக அவர் உடல் கிடந்த நிலையில் எடுக்கப்பட்டது ஒரு புகைப்படம்! அவரை அடையாளம் கண்ட மூப்பனார் தமது மேல் துண்டால் ராஜீவின் உடலை மூடி மறைத்த புகைப் படமும் எடுக்கப்பட்டது. ஆனால் பிறகு அந்தக் கட்சியினர் மிகக் கேவலமான முறையில் தம் தலைவனின் அலங்கோல மான மறைவுத் தோற்றத்தைத்தான் 'விளம் பரமாக்கி' பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டனர். கொடுமை! 'ராஜீவின் அழகிய புகைப்படத்தைப் போஸ்டராக்கி, அவருக்கு நேர்ந்த பயங்கரப் படுகொலையை மக்களுக்கு உணர்த்த அரசியல்வாதிகளால் முடியாதா? எவ்வளவு கௌரவமான மனிதரை எப்படி கேவலமாகப் பயன்படுத்தி விட்டனர்!' என்ற வேதனை குமுறலாக எழுந்தது உள்ளத்தில்.

- ஆர். ஷியாமா,
மூன்றாமாண்டு பி. ஏ. (ஆங்கில இலக்கியம்)
பாரதிதாசன் மகளிர் கல்லூரி,
புதுவை - 605 003.

சிந்தித்து வோட்டளிப்பது எப்போது?

உணர்ச்சியைப் புறந்தள்ளி அறிவுபூர்வமாகத் தமிழர்கள் சிந்தித்தும், வேட்பாளர் தரம் பற்றி யோசித்தும் இருந்தால் ஓரளவு பலமான எதிர்க்கட்சி இங்கு உருவாகி இருக்கும். ஆனால், அது நடக்காதது வேதனையைத்தான் தருகிறது.

அண்டைக் கேரளாவில் அனுதாபப் புயல் வீசினாலும் அறிவுடைமையோடு வேட்பாளர் தரம் பற்றியும் சிந்தித்து (உதாரணம் திரு. உன்னி கிருஷ்ணன் வெற்றி போன்றவை) வோட்டளித்ததால் பலமான எதிர்க்கட்சி அங்கே உருவாகியுள்ளது.

- பி. கௌரி சங்கர்,
வணிகவியல் முதலாமாண்டு,
ஊரீசு கல்லூரி (மாலை வகுப்பு),
வேலூர் - 632 001.

படங்கள் : யோகா

ஃபிரிஜ் பரிசு : கூப்பன் நெ. 14

''நேற்று வரை நந்தவனம்'' தொடர் கதையில் ஒவ்வொரு வாரமும் வேண்டுமென்றே ஒரு தவறு செய்து வருகிறோம். இந்த வாரம் என்ன? கவனமாகப் படித்து, அதைக் கண்டுபிடித்து, இந்தக் கூப்பனைப் பூர்த்தி செய்து வைத்துக் கொள்ளவும். இப்படியே ஒவ்வொரு வாரமும் கூப்பன் சேகரிக்கவும். தொடர் முடிகின்ற வாரம் எல்லாக் கூப்பன்களையும் சேர்த்து அனுப்பி வைக்கவும். அத்துடன் கதை பற்றிய 5 - 10 வரி விமர்சனம். மிக அதிகமான தவறுகளைச் சரியாகச் சுட்டிக்காட்டியவருக்கு ஃபிரிஜ் பரிசு. அதிகபட்ச சரியான விடைகளைப் பலர் எழுதியிருந்தால், குலுக்கலில் ஒருவர் தேர்வு. ஆறுதல் பரிசுகள் உண்டு. இந்த இதழில் வேண்டுமென்றே செய்யப்பட்ட....

தவறு : ____________________

திருத்தம் : ____________________

சிரிக்க வையுங்கள் ;
சிங்கப்பூர் செல்லுங்கள்!

முதுகில் தட்டியது எதற்காக?



''நான் 'கழுதை'ச் சின்னத்தில் நின்னு ஜெயிச்சது தப்பாப் போச்சு...''

''ஏன்...?''

'' 'கழுதை' மேலே ஊர்வலமா நான் சட்டசபைக்குப் போகணுங்கறாங்களே...!''

- சங்கமங்கலம், பாலகிருஷ்ணன்ஜி.


O O O O O



O எங்கள் ஆசிரியர் சில வாரங்களாகத் தெலுங்கு கற்று வருகிறார். தெலுங்கில் பேச வேண்டும் என்று ஆர்வம் எழ, ஒரு மாணவனைப் பார்த்துக் கேள்வியைக் கேட்டு விட்டு, ''செப்புலு, செப்புலு'' என்றார். மாணவன் பதில் கூறி விட்டு, ''ஸார்! நான் பதில் சொல்லி விட்டேன். ஆனால் நீங்கதான் தெலுங்கைக் கொலை பண்ணிட்டீங்க. 'செப்புலு' இல்லை! 'செப்பு' ஸார். செப்புலு என்றால் செருப்பு!'' என்றானே பார்க்கலாம். வகுப்பு முழுவதும் செருப்புக் கால்களால் தரை யைத் தட்டும் ஓசைதான்!

- சென்னை - 82, மணிமேகலை.

O O O O O



'' 'எந்தக் காரியமும் நடைபெற வில்லை; சகஜ வாழ்க்கையே ஸ்தம்பித்து விட்டது' என்கிறாயே, ஏதாவது 'பந்தா'?''

''இல்லே, லஞ்ச ஒழிப்பு நடவடிக்கை தீவிரமாக்கப்பட்டிருக்கிறதாம்!''

- சென்னை - 64, பா. கணேசன்.

O O O O O



O எதிர்க்கட்சி உறுப்பினர் : ''சபாநாயகர் அவர்களே! நான் என் கட்சியின் ஒரே உறுப்பினன் என்பதற்காக ஆளும் கட்சிக்காரர் என்னைப் பார்த்து, 'எதிர்க்கட்சியின் தலைவர், உபதலைவர், கொ.ப.செ., பொருளாளர், செயலாளர், கட்சிக் கொறடா என யாதும் ஆகி நின்றவரே!' என விளிப்பதைக் கடுமையாக ஆட்சேபிக்கின்றேன்!''

- வால்குடி,
குமாரி. சுகந்தி முத்துமன்னார்.





சபாநாயகர் : "ஆளும் கட்சி எம். எல். ஏ. எதிர்க்கட்சி எம். எல். ஏ. முதுகில் தட்டியது தாக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் அல்லவென்றும் முதுகில் அமர்ந்திருந்த கொசுவை அடிப்பதற்கு அவ்வாறு செய்தார் என்றும் விளக்கம் அளித்தி ருப்பதால், நடவடிக்கை சபைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது!"

- பாளையங்கோட்டை,
எஸ். சுந்தரராஜ்.

OOOOO

O என் மகளும், அவள் தோழியும், நானும் ஒரு தியேட்டருக்குச் சென்றிருந்தோம். கௌண்ட்டரில் 'கரண்ட் புக்கிங்' என்று எழுதியிருந்தது. என் மகள், "அப்பா, அது கரண்ட்டிலேயே வேலை செய்யுமா?" என்று கேட்டாள். அவள் தோழி, "அது ஒண்ணும் கரண்ட்ல வேலை செய்யாது. இப்போதைய காட்சிக்கு டிக்கெட் கொடுக்கப்படும் இடத்திலே 'கரண்ட்-புக்கிங்' என்று போடு வார்கள்," என்றாள்.

பக்கத்திலிருந்த பெரியவர் என் மகளிடம், "ஏம்மா பார்த்தா இரண்டு பேரும் ஒரே வகுப்புப் படிக்கிறவங்க போல இருக்கு. ஆனா அந்தப் பாப்பாவுக்குத் தெரிஞ்சிருக்கு. உனக்குத் தெரியலையே?" என்றார்.

உடனே என் மகள், "அவள் படிப்பது கான்வென்ட்டில், நான் படிப்பது கவர்ன்மெண்ட்டில். அதுதான் காரணம்," என்றாள். அதைக் கேட்டுக் கியூ மொத்தமும் கலகல!

சென்னை - 17, பா. விஜயலட்சுமி.

OOOOO

O ஒரு விஞ்ஞானி தாம் கண்டுபிடித்த தியரியை எல்லா ஊர்களுக்கும் சென்று கூறி வந்தார். கேட்டுக் கேட்டு அலுத்துப் போன அவரது கார் டிரைவர், "உங்கள் தியரி எனக்கே மனப்பாடம் ஆகி விட்டது. அதனால் நானே உங்களுக்குப் பதில் ஒரு கூட்டத்தில் இதைக் கூறுகிறேன். நீங்கள் என்னைப் போல் வேடமிட்டுக் கொள்ளுங்கள்" என்றான். அவரும் அதற்கு ஒப்புக் கொண்டார்.

மறுநாள் ஒரு கூட்டத்தில் விஞ்ஞானியாக நடித்த கார் டிரைவர், அந்தத் தியரியைக் கூறினான். அப்பொழுது கூட்டத்திலிருந்து ஒருவர் ஒரு கடினமான வினாவை எழுப்பினார். டிரைவர் சற்றும் சளைக்காமல் "இந்த எளிமையான வினாவிற்கு நான் என்ன, என் கார் டிரைவரே கூட விடையளிப்பார்! அவரை அழைக்கிறேன்!" என்றார்.

திருச்சி, குருவாயூரப்பன்.

O நான்காம் வகுப்பு படிக்கும் தம்பியிடம் தாத்தா கேட்டார் : "நீ சம்பாரிச்சு யாருக்குக் கொடுப்பே?"

அதற்குத் தம்பி, "நானே வைச்சுப்பேன்" என்றான்.

"அப்பா அம்மாவுக்குக் கொடுக்க மாட்டியா?"

உடனே தம்பி, "தாத்தா! மாடு, கன்னுக்குட்டிக்குப் பால் கொடுக்குது. கன்னுக்குட்டி மாட்டுக்கு என்ன கொடுக்குது?" என்று திருப்பிக் கேட்க, தாத்தா கப்சிப்!-

தஞ்சாவூர் - 6,
எஸ்.கல்யாணகுமாரி.



நெய் தோசை

ஆர். எம். ரமேஷ்

அவிழ்ந்த ட்ரவுசரை இறுகக்கட்டிக் கொண்டு எழுந்தான் சின்னான். போன திருவிழா ட்ரவுசரில் பொத்தான்கள் யாவும் விழுந்துவிட்டன; பின்புறத்தில் இரு பொத்தல்கள். போன ,வருடத்தில் வகுப்பின் முதல் தபால் பெட்டி இவன்தான். ஆனால் தொடர்ந்த பஞ்சத்தால் வகுப்பில் தபால் பெட்டிகள் பெருகி விட்டனர்!

பொத்தல் கூரையிலிருந்து வெயில் நாணயங்கள் தரை முழுதும் சிதறிக் கிடந்தன. உட்கார்ந்திருந்த போது அவ்வளவாகத் தெரியாத பசி, சின்னானுக்கு இப்போது அதிகம் உறைத்தது.

அக்காவுக்கு உடல்நிலை சரியில்லை. காலையில் அப்பா தூரத்து ஓட்டலில் இருந்து நெய்தோசை வாங்கி வந்திருக்கிறார்.

'அக்காளுக்கு ரொம்பத்தான் முடியல போல. நெய் தோசையையே வேணாம்னுருச்சே!' - சின்னான் சொல்லிக் கொண்டான். அவன் ஒரு முறை காய்ச்சல் வந்தபோது நெய்தோசை சாப்பிட்டிருக்கிறான். அதற்குப் பின் இப்போதுதான் தோசையைப் பார்க்கிறான். அம்மா எப்போதாவது கம்பு தோசை செய்வாள். ஆனால் அது தோசையில் சேர்த்தியில்லை.

தொடர்ந்து பஞ்சம் நீடிப்பதால் நிறையப்பேர் பிழைப்புத்தேடி கல்லுடைக்கவோ, ரோடு போடவோ இடம் பெயர்ந்து விட்டார்கள். கிராமத்தின் கோடைக் காலங்கள் மிகவும் கடினமானவை. வீட்டின் சேமிப்புகள் குறைந்து வருகின்றன. பழைய கம்பு விளைச்சலின் மிச்சம், இதுவரை உயிர் பிழைக்க உதவியுள்ளது. தினமும் மதியம் மட்டுமே சமையல். சின்னானுக்குப் பள்ளியில் மதியம் சத்துணவு. இரவில் அவனுக்கு மட்டும் ஒரே ஒரு கட்டி கூழ். வெஞ்சனம் கண்டு நாளாகிறது. எப்போதாவது, யாராவது காட்டுக்குப் போனால் அணில் அல்லது முயலின் சுட்ட தோல் கிடைக்கும். வீட்டிலிருந்து யாராவது போனால்தான் மாமிசத்தில் பங்குண்டு.

அப்பா எப்போதாவதுதான் செல்வார். அப்பாவுக்குத் தெம்பு குறைந்து வருகிறது. சின்னான் வேட்டைக்குச் செல்ல எப்போதும் ரெடி. ஆனால் வேட்டைக்குக் குறைந்த பட்சத் தகுதி வேட்டி கட்டியிருக்க வேண்டும்! அவனுக்கு அதற்கு இன்னும் பத்துப் பன்னிரண்டு வருடங்கள் இருக்கின்றன.

சின்னானுக்கு வெகுவாகப் பசித்தது. அக்காவுக்கு உடம்பு சரியில்லாததால் நேற்று வீட்டில் அடுப்பு பற்ற வைக்கவில்லை. இன்று காலைதான் அக்காவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கிறார்கள். வீட்டில் சின்னான் மட்டும்தான். அக்காவுக்கு வாங்கி வந்த தோசை இலையில் கட்டி, மஞ்சள் வெங்கடாசலபதி பையில் போடப்பட்டு ஆணியில் மாட்டப்பட்டுள்ளது. சின்னான் 'தோசையைச் சாப்பிடலாமா?' என்று யோசித்தான். ஆனால் ஒன்பது வயது சின்னான் ஓரளவு பொறுப்புணர்ந்தவன். அப்பாவிடம் காசு கிடையாது என்று தெரியும். 'ஒடம்பு சொகமானதும் அக்காளுக்கு வேணும்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

மூங்கில் கதவை மூடிவிட்டு மெதுவாக வெளியே நடந்தான். வெயில் முகத்தில் அடித்தது. கண்களைச் சுருக்கிக் கொண்டான். இப்போதெல்லாம் காலை வெயிலே தீவிர வெப்பமாயுள்ளது.

''எலேய் சின்னா; எங்கிட்டுப் போறே?''

திரும்பினான். சாமியாடிக் கிழவர் முத்துப்பாண்டி.

பசி மற்றும் வெயில் தந்த எரிச்சலில் அவன் மௌனமாக நடந்தான்.

கிழவர் முத்துப்பாண்டிக்கு வருத்தமாக இருந்தது. ஊரில் அவருக்கு மரியாதை குறைந்து வருகிறது. போன வாரப் பஞ்சாயத்தில் கோயில் பணத்துக்கு இளைஞர்கள் கணக்குக் கேட்டிருக்கிறார்கள். வயதுப் பெண்கள் ஆண்களைத் தொட்டுப் பேசுகிறார்கள். செடி மறைவுகளில் சிரிப்பு மற்றும் வளையல் சப்தங்கள். காசுக்காக வேட்பாளர்களுக்குத் தேர்தல் ஆரத்திகள். திருவிழாக் கூத்தில் ஆபாசப் பாடல்கள். ஊர்க் கோடியில் அடுக்குப் பானைகளில் கள்ளச்சாராயம். கிராமம் இனி உருப்பட வழியில்லை. தொடர்ந்து பஞ்சம் நீடிப்பதும் நல்லதற்கே. சீக்கிரத்திலேயே கிராமம் காலியாகிவிடும்.

கண்மாய்க்கரை. சின்னானுக்கு நடப்பது சிரமமாக இருந்தது. உட்கார்ந்தால் பசி



குறையும் என்று தோன்றியது. இரண்டு புளியங்காய்களைப் பறித்துக் கொண்டு, மரத்தில் சாய்ந்து உட்கார்ந்தான். புளியங் காய்களைக் கல்லில் உரசி, அப்பளம் போல் தட்டி, வெயிலில் காயவைத்துச் சாப்பிட்டால் நன்றாக இருக்கும். எப்போ தும் அப்படித்தான் செய்வது வழக்கம். ஆனால் இன்று பசி அதிகம். ஒரு காயை மண்ணைத் தட்டி விட்டுக் கடித்தான். புளிப்பு, மார்கழிப் பனி போல உடலைக் குலுக்கியது. எதிர் மரத்தில் இரண்டு மூன்று அணில்கள். முத்துப்பயல் - குறிபார்த்து அடிப்பதில் சூரன். இருந்தால் ஒன்றை யாவது அடித்து விடுவான்.

புளியங்காய்கள் தீ ர் ந் து வி ட் ட ன. அவன் சுற்றிலும் ஒரு முறை பார்த்துக் கொண்டான். மரத்தில் இலைகள் நிறைய உதிர்ந்திருந்தாலும், வெயில் அவ்வளவாக உடலில் படவில்லை. புளிப்பு நாக்கில் உறைந்திருக்க, அவன் அப்படியே தூங்கிப் போனான்.

''ஏலேய் சின்னா, எந்திரி!''

சின்னான் தூக்கிவாரிப் போட எழுந் தான். கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த் தான். சூரியன் உச்சிக்கு வந்திருந்தது. எதிரில் முத்துப்பயல் ''எங்கிட்டெல்லாம் ஒன்னைத் தேடறது? நொக்கா செத்துப் போச்சு. சீக்கிரம் ஓடியா.'' பதில் எதிர் பாராமல் முத்து ஓடினான். சின்னானும் அவனைப் பின்தொடர்ந்து ஓடினான்.

வீட்டின் முன் மூங்கில் நட்டு பச்சைத் தென்னை ஓலையைக் கொண்டு பந்தல் போட்டிருந்தார்கள். அக்கா தரையில் கிடத் தப்பட்டிருந்தாள். மூக்கில் பஞ்சு. வாய் இலேசாகப் பிளந்திருக்க, பற்களும், நாக் கும் இலேசாகத் தெரிந்தன. உதடு வெடித் திருந்தது. கன்னங்கள் ஒட்டிப் போயி ருந்தன. கால் கட்டை விரல்கள் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன.

அம்மா ரொம்பவும் அழுது கொண்டி ருந்தாள். அப்பா வாயில் துணியைப் பொத் திக் கொண்டு, திண்ணையில் உட்கார்ந் திருந்தார். இறப்புகளில் ஆண்கள் அழுவது மரபல்ல. பிணத்தைச் சுற்றி நிறையப்பேர். எல்லோரும் அழுது கொண்டிருந்தார்கள். தத்தம் துயரங்கள், சோகங்கள் ஆகிய வற்றைப் புதுப்பித்துக் கொண்டிருந்தனர். அம்மாவின் ஒப்பாரி அழுகையூட்டியது.

பத்து மாசஞ் சுமந்து பெத்தேன்;
நீ பாதி வழி நிக்கலையே.
பாழும் வயிறு துடிக்கவிட்டு;
பாவி மக போனியேம்மா.



• ''இன்டர்வியூவில் கேட்ட எல்லாப் பொது அறிவுக் கேள்விகளுக்கும் கரெக்டா பதில் சொன்னேன். ஒரே கேள்வில என்னை மடக்கிட்டாங்க!''
''அப்படி என்ன கேட்டாங்க?''
''கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் இனிஷியலோட முழு அர்த்தம் என்னன்னு கேட்டாங்க!''
- வி. ஜி. மகேஷ்.



- சீர்காழி. வி. ரேவதி.

பூவுனால பொம்ம செஞ்சு,
'புதல்வி' யின்னு சொன்னாலும்
பூவுமது பேசலையே,
புதல்வி ஆசை போகலையே.

ஒழுக்கு மல்லியப்பூ,
ஒதறி வச்ச தாழம்பூ
ஒங்கி வளர்ந்த மக;
மறக்க முடியலயே.

தென்னை யொன்னு வளர்ந்து
வந்தேன்;
பொதிய மலை ஓரத்திலே,
மலையுமது சரிஞ்சிடுச்சு,
மரமுமது கருகிருச்சே.

சின்னானுக்கு இறப்பின் அனைத்துப் பரிமாணங்களும் புரிகிற வயதில்லை. இருப்பினும் மனத்தில் ஒரு துயரமொட்டு விட்டிருந்தது. 'அக்காள இனிமேட்டுக்குப் பாக்க முடியாது' என்று துயரத்துடன் நினைத்துக் கொண்டான். இரண்டு, மூன்று கிழவிகள் அவனைக் கட்டிக் கொண்டு ஒப்பாரி வைக்க, விலக்கி விட்டு வெளியே வந்தான்.

வெளியே சன்னாசிக் கிழவர் குத்துக் காலிட்டு உட்கார்ந்து பாடை செய்து கொண்டிருந்தார். இரண்டு பக்கமும் மூங்கில் வைத்து, குறுக்கில் சிறு குச்சிகளைப் பொருத்தி, மேலே தென்னந் தட்டியைப் போட்டு, வேலை ஏறக்குறைய முடிந்துவிட்டது.

''எலேய் சின்னா, இங்கிட்டு வா'' என்றார் சன்னாசிக் கிழவர். சின்னான் அருகில் வந்தான்.

''நொப்பன் பறையடிக்கிறவனுங்களுக்குச் சொல்லலியா?''

''தெரியலை.''

சின்னானின் அப்பா கேட்டுக் கொண்டுதான் இருந்தார். பறையடிப்பவர்களுக்குப் பணம் தரவேண்டும். குறைந்தது இருநூறாவது தரவேண்டும். ஆனால் கையில் தம்பிடி இல்லை. கவர்மெண்டு ஆஸ்பத்திரியில் நிறையப் பிடுங்கிவிட்டார்கள். மச்சவீட்டு அருணாசலத்திடம் கடன் வாங்கிய நூற்றைம்பது ரூபாயும் செலவாகி விட்டது. வெள்ளை உடை வைத்தியர்களை வரச் செய்வதற்காக, காக்கிக் கால் சட்டை போட்டவனுக்கும், ஐஸ்ரூமுக்குப் பிணத்தைக் கொண்டு போகாமல் தடுப்பதற்காகவும், ஊதாப்புடைவைக் கிழவிகளுக்கும், கொடுத்ததில் அனைத்துப் பணமும் செலவாகிவிட்டது. வரும்படி எதுவும் இல்லை. தொடர்ந்து வரும் பஞ்சங்களில் இருந்து தப்பிப்பிழைப்பதற்காக, கணவ

னும், மனைவியும் முறையே இரண்டு, மூன்று முறைகள் ஆபரேஷன் செய்து கொண்டுள்ளார்கள். சந்ததி இனிமேல் சின்னானின் மூலமே பெருகவேண்டும்.

சிறிது நேரங்கழித்து பறையடிப்பவர்கள் வந்தனர். மச்சுவீட்டு அருணாசலம் தன் செலவில் 'அரை நாள் சம்பளம்தான்' என்று பேசி பறையடிப்பவர்களை அனுப்பி வைத்திருக்கிறார். கள்ளிகள் பொறுக்கி வர, சிறுவர்கள் அனுப்பப்பட்டனர். பறையடிப்பவர்கள் ஒரு முறை வீட்டிற்குள் வந்து, பிணத்தைப் பார்த்து விட்டுப் போனார்கள். பின், கலயத்தில் வெள்ளைத்திரவம் வர, ஆளுக்கு ஒரு மடக்கு குடித்தனர். இதற்குள் கள்ளிகளும், நெருப்புப் பெட்டியும் வந்திருக்க, சிறிது நேரம் நெருப்பில் காய்ச்சியபின் பறையடிக்க ஆரம்பித்தனர்.

''இருட்டிக்கிட்டு வருது. சீக்கிரம் தூக்குங்க'', என்று யாரோ குரல் கொடுக்க, பறையடிப்போர் முன் செல்ல, அக்கா பாடையில் வைத்துத் தூக்கிச் செல்லப் பட்டாள்.

சின்னான் பயந்துவிடப் போகிறான் என்று அவனை வீட்டிலேயே இருக்கச் சொல்லிவிட்டார்கள்.

காரியங்களையெல்லாம் மு டி த் து விட்டு, அப்பா வரும்போது நன்றாக இருட்டிவிட்டது. அப்பா இலேசாகத் தள்ளாடிக் கொண்டிருந்தார். மகளின் இறப்புக்காக இன்று ஓசியில் சாராயம் கிடைத்திருக்கிறது. குடும்பத்துக்கு இன்று மிகப் பெரிய அவமானம் ஏற்பட்டு விட்டது. சாவுக்கு வந்தவர்களுக்கு ஒரு வாய்க்கஞ்சி கூட ஊற்ற முடியவில்லை. இப்போது யாரும் இதைப் பெரிதுபடுத்தா விட்டாலும், பிற்பாடு ஒருநாள் ஏதேனும் சண்டையில் இது குத்திக்காட்டப்படலாம்.

வீட்டினுள் இருள் கவிழ்ந்திருந்தது. அக்காவைக் கிடத்தியிருந்த இடத்தில் விளக்கேற்றப்பட்டிருந்தது. விளக்குக்கான எண்ணெய் பக்கத்து வீட்டில் இருந்து வரவழைக்கப்பட்டிருந்தது.

சின்னான் சுவரோரமாகச் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். எதிர்ச் சுவரில் மஞ்சள் வெங்கடாசலபதி பையில் தோசை இன்னும் இருக்கிறது. மெதுவாக எழுந்தான். அம்மா கவிழ்ந்து படுத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தாள். தோளைத் தொட்டான்.

''ஆத்தோவ்!''

அம்மா திரும்பினாள்.

''அக்கா தான் செத்துப் போச்சில்ல. அந்தத் தோசைய நான் எடுத்துக்கவா?'' என்றான்.



பிடிவாதம்



அரசியல் வாழ்வு?



அமரம் கண்டோ?

கலைஞரின் அரசியல் வாழ்வு அஸ்தமித்து விட்டதா?

O **மீ. தமிழ் ஷாஜஹான், கம்பம்.**

? **கலைஞர் சட்டமன்றம் சென்றிருப்பின் இன்று பண்ருட்டியாருக்கு நேர்ந்த கொடுமை நாளை கலைஞருக்கும் ஏற்படலாமல்லவா? அதன் மூலம் தமிழகம் முழுவதும் தி. மு. க. தொண்டர்களால் பயங்கரங்கள் நிகழாது என்பது என்ன நிச்சயம்?**

! முன்பு ஜெயலலிதா தமக்குச் சட்டமன்றத்தில் கொடுமை இழைக்கப்பட்டதாகக் கூறித்தான் சட்டசபைக்குச் செல்லாமலே இருந்தார். அதை அன்று கிண்டல் செய்தவர்கள் இப்போது அதே போல் தங்களுக்குக் கொடுமை நேரலாம் அல்லது நேர்ந்தது என்று காரணம் கூறி சட்டமன்றம் செல்லாமல் இருப்பதை எப்படி நியாயப் படுத்த முடியும்? கல்கிக்கு அளித்த பேட்டியில் கலைஞரே கூறியிருக்கிறார் : ''நாங்கள் ஒருவேளை தோற்றாலும் சட்டமன்றத்துக்குப் போக மாட்டோம் என்று கூறிக் கொண்டிருக்க மாட்டோம்; சிறந்த எதிர்க்கட்சியாக விளங்கி ஜனநாயகப் பணியாற்றுவோம்'' என்று. தொண்டர்களால் பயங்கரங்கள் நிகழ்ந்தது அல்லது நிகழலாம் என்றால் அதற்குத் தலைவர்களே பொறுப்பு. தலைவர்கள் சரியான முறையில் அறிக்கைகள் விட்டால் அதை மீறித் தொண்டர்கள் ஏதும் செய்து விட மாட்டார்கள். தொண்டர்கள் நடந்து கொள்வதெல்லாம் தலைவர்கள் விருப்பத்தையொட்டித்தான்.

O **தங்க நாகேந்திரன், செம்போடை**

? **'இரண்டாயிரமாவது வருஷத்துக்குள் இரண்டாயிரமாவது நாவலை எழுதி விட வேண்டும்' என்கிறாரே ராஜேஷ்குமார்?**

! அவர் ஒரு நாவல் மிஷின். சாதித்து விடுவார். அவற்றுள் இரண்டாவது இரண்டாயிரமாவது ஆண்டுக்குப் பிறகும் பேசப் படுவது போல நிலைத்திருக்கும் விதமாக எழுத வேண்டும்.

O **ஆர். விஜயராஜ், பெரியகுளம்.**

? **கலைஞரின் அரசியல் வாழ்வு அஸ்தமித்து விட்டதா?**

! என்றுமே உதயசூரியன்தானே. மேகங்கள் மறைத்திருப்பதால் அது அஸ்தமன சூரியனாகி விடாது.

O **குமரி. தா. சிந்துகுமார், திருவட்டார்.**

? **சாரே, பரதன்றே 'அமரம்' கண்டோ? அதிலே சூப்பர் ஸ்டார் மம்மூட்டியுடெ ஆக்ட் எங்ஙனயுண்டு?**

! கண்டு. அஸ்ஸலாயிட்டுண்ட.

O **ரேவதி சுந்தரராஜன், சென்னை.**

? **முன்னாள் மத்திய மந்திரி சிவசங்கர் போர்க்கொடி தூக்கி விட்டாரே?**

! மந்திரிகளைத் தேர்ந்தெடுப்பதும் இலாகா ஒதுக்குவதும் பிரதமரின் உரிமை; யாரும் அவரை நிர்ப்பந்திக்க முடியாது என்பதை அனுபவஸ்தரான சிவசங்கரே உணராமல் ஆட்டம் போடும் போது, புதுசுகள் சிலர், 'காபினெட் அந்தஸ்த்து, அது இது' என்று முணுமுணுப்பதில் வியப்பில்லை.

O **எஸ். இஸ்மாயீல், சிவகெங்கை.**

? **'இனி எல்லாத் தேர்தல்களிலும் இயந்திரம் மூலம் வோட்டுப் பதிவு நடைபெறும்' என்று சேஷன் கூறியுள்ளாரே?**

! 'சேஷனுக்குப் பதில் ஒரு ரோபோவைத் தலைமைத் தேர்தல் அதிகாரியாக்கினாலும் தேவலாம்' என்று இனி எதிர்க் கட்சிகள் கோரலாம்!

O **ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.**

? **'பாடும் பாட்டுக்கு பாவம் அல்லவா முக்கியம்? சங்கதிகளைப் போட்டு பாட்டைத் துவைத்து எடுப்பது ஏன்? இது**

என்று ஒழியுமோ?' என்று சுப்புடு மனம் வருந்துகிறாரே?

! டிசம்பர் சீசனில் மட்டும் தம் ஞாபகம் வந்து மற்ற நேரங்களில் மறந்து விடக் கூடாது என்பதற்காக அவ்வப்போது இப்படி ஏதாவது சங்கதிகளை சுப்புடு உதிர்த்து விட்டுக் கொண்டிருப்பார். அவருடைய கருத்துக்களை மற்றவர்கள் துவைத்து எடுத்துக் கொண்டிருப்பார்கள். சங்கதி, பாவம், நிரவல், ஸ்வரப்பிரஸ்தாரம் முதலிய எல்லாம் சேர்ந்ததுதான் நமது சங்கீதம். அது அது அதற்குரிய அளவோடு இருந்தால் சுப்புடு குறை கூற மாட்டார். ஆனால் என்ன செய்ய, சுப்புடுவின் டேஸ்ட்டே எல்லாருக்கும் இருக்குமா? ஒவ்வொருவர் ஒவ்வொரு பாடகரிடம் ஒவ்வொன்றை எதிர்பார்க்கிறார்கள். அது கிட்டாமல் போனால் ஏமாற்றமடைகிறார்கள். அதான் சிக்கல்! காப்பியில் ஒருவருக்கு டிகாக்ஷன் தூக்கலாக இருக்கணும், இன்னொருவருக்குச் சர்க்கரை குறைவாகப் போடணும் என்பது போல்தான்.

O சாந்தன், கடலூர்.

? சமீபத்தில் உங்களை எரிச்சல் அடைய வைத்த செய்தி?

! தேர்தல்களிலும் தோற்று மக்களாலும் முழுதாக நிராகரிக்கப்பட்ட தாவு, அரசின் பங்களாவையும் காரையும் திருப்பிக் கொடுக்க மாட்டேன் என்று காட்டும் பிடிவாதம்.

O எச். மோகன், மன்னார்குடி. ★

? பண்ருட்டியார், அறந்தாங்கியார் - இருவரில் புத்திசாலி யார்?

! சந்தேகமின்றி பண்ருட்டியார்தான். தயாராக இருந்த கட்சி அமைப்பு அப்படியே அவருக்குக் கிடைத்து விட்டதே! அறந்தாங்கியாருக்கு அந்த அனுகூலம் இல்லையே!

O ரேவதி ப்ரியன், ஈரோடு.

? அண்மையில் யாருடைய பேச்சு உங்களுக்குச் சிரிப்பை வரவழைத்தது?

! அ. இ. அ. தி. மு. க. எம். எல். ஏ. ஜி. விசுவநாதன், ''மந்திரிகள், எம். எல். ஏக்கள் ஆகியோரின் சொத்துக்களுக்குக் கணக்குத் தரும் திட்டத்தைத் தளர்த்தாமல் கண்டிப்புடன் நிறைவேற்ற வேண்டும்; இது லஞ்ச ஊழலற்ற நிர்வாகத்துக்கு வழி வகுக்கும்'' என்று சட்டமன்றத்தில் பேசியதுதான். 'பல ஆண்டுகளாகப் பலரும் கூறி நிறைவேறாமல் இருந்து வரும் திட்டத்தை இன்னமும் விடாப்பிடியாகத் திரும்பக் கூறுகிறாரே, எந்த நம்பிக்கையில்?' என்று எண்ணிய போது சிரிக்காமலிருக்க முடியவில்லை.

O கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

? அரசியலில் நெறிமுறை பிறழாத ஒரு தலைவரைக் குறிப்பிடுங்கள்?

! ஒரு நிர்ப்பந்தத்தின் பேரில்தான் என்றாலும் நாடாளுமன்றத் துணை சபாநாயகர் பதவிக்கு எதிர்க் கட்சியான பி. ஜே. பி. யைச் சேர்ந்தவரை ஏற்றுக் கொள்ளச் சம்மதித்துப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்த பிரதமர், அந்த அளவில் இன்று பாராட்டுக்குரியவர். அடிப்படையான அம்சங்கள் தவிர இதர விஷயங்களில் பிடிவாதங்களைத் தளர்த்தி இதே போன்ற பரந்த மனப்பான்மையை அவர் காண்பித்தால் பல பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டு நாட்டுக்கு நன்மை செய்ய முடியும்.

★ ரூ. 20 பரிசு பெறுபவர்:
எச். மோகன்,
28, மேல இரண்டாம் தெரு,
மன்னார்குடி - 614 001.

◆ பார்க்கொடி


◆ சங்கதிகள்


◆ ரோபோவே தேவலாம்!


◆ புத்திசாலி...


◆ ...யார்?


இவர்களுக்கு 21ம் நூற்றாண்டு! அவர்களுக்கு 18ம் நூற்றாண்டு!

"இருபத்தோராம் நூற்றாண்டுக்குத் தயாராவோம்" என்று சொன்னவர், கொடியவர்களுடைய சதிக்கும் குண்டுகளுக்கும் பலியாகி விட்டார். ஆனால் அவர் சொன்னது நம் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அதே நேரத்தில், 'நமது மக்களில் பெரும்பாலோர், இன்னும் 18 ம் நூற்றாண்டில்தான் இருக்கிறார்கள் என்பதும் நம் நினைவில் இருந்து கொண்டே இருக்கிறது.

உங்களுக்குத் தெரியுமா? இந்தியாவின் புறநகர்ப் பகுதிகளில் இரண்டு சதவீதம் பேர்தான் பொழுது விடிந்தால் கழிவறைகளைக் காண்கிறார்கள். மற்ற 98 சதவீதம் பேர் திறந்த வெளிகளில்தான் மறைவிடங்களை நாடுகிறார்கள். அதே நேரத்தில் பட்டணத்தில் பங்களாக்களில் பாத்ரூம்களுக்காக எத்தனை நவீன சாதனங்கள்! தரையும் சுவர்களும் வழவழ வென்று வண்ண ஜாலம் காட்டி பளபளக்கின்றன! இது பொறாமையை வளர்க்கக் கூறப்படுவதல்ல. மொத்தமுள்ள இந்தியர்களில் 41 சதவீதம் பேருக்குத்தான் பாதுகாப்பான குடிநீர் வசதியே கிடைக்கிறது என்னும் போது வாஷ்பேஸி னுக்கும் குளியல் தொட்டிக்கும் அவசரமில்லை. ஆனால் குறைந்தபட்சம் ஒரு கழிப்பறையும் அதைச் சுத்தமாக்கத் தண்ணீர் வசதியும் செப்டிக் டாங்கும் வேண்டாமா? இல்லையெனில் வியாதிகள் பரவுவதை எப்படி கட்டுப்படுத்துவது?

ஜனத் தொகையில் 48 சதவீதம் பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறார்கள் என்னும் போது எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவாகப் போவது 200,000 கோடியா அதற்கும் அதிகமா என்பது முக்கியமல்ல. 21 ம் நூற்றாண்டிலாவது இந்த மக்களுக்கு அடிப்படைத் தேவைகளேனும் பூர்த்தி செய்யப்படுமா என்பதே கேள்வி.

நாற்பத்து நாலு பட்ஜெட்களும் ஏழு ஐந்தாண்டுத் திட்டங்களும் மக்களின் வாழ்வை மேலும் மேலும் கடினமாக்குவதிலேயே முடிந்திருக்கின்றன. வருவாய் கூடுகிறது; கூடவே விலைவாசியும் உயர்கிறது. ஒரு விஷ வட்டம் வளைய வருகிறதே தவிர துயரம் தீரவில்லை. சமீபத்தில்தான் ஒரு மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. சோஷலிஸத்துக்கு குட்பை சொல்லி, பெர்மிட் லைசென்ஸ் - கோட்டா முறை யைத் தளர்த்தி, தனியார் துறைக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என உணரப்பட்டிருக்கிறது. இதுவும் தன்னால் ஏற்பட்ட ஞானோதயம் அல்ல. நமது நிதி நிலைமை படு மோசமாகிவிட, நமக்குக் கடன் தந்தவர்கள் கலவரம் அடைந்து ஆட்சியில் உள்ளவர்களை முடுக்குகிறார்கள். உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் போன்றவை மறைமுகமாக நிர்ப்பந்திக்கின்றன.

ரேடியோ பிரசங்கத்தில் பிரதமர் கூறுகிறார் : அரசின் பொருளாதாரக் கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் பெருமளவு நீங்கும்; அரசின் செலவினங்கள் குறைக்கப்படும்; சலுகைகளும் மான்யங்களும் இனி மெய்யாலும் ஏழைகளாக உள்ளவர்களுக்கே வழங்கப்படும்; பொருளாதாரம், உற்பத்தி நோக்கிலும் திறமை நோக்கிலும் மேம் படுத்தப்படும். விலை வாசிகள் (குறையாவிட் டாலும்) ஸ்திரப்படும்.

நல்ல ஆரம்பம் தான். சொல்லளவில் முடிந்து போகாமல் செயலிலும் காட்டினால் பிரதமரைப் பாராட்டலாம். இனியேனும் அரசு செய்ய வேண்டியவை எவை ; மக்கள் தாங்களாகவே தங்களை உயர்த்திக் கொள்ளச் செய்ய வேண்டியவை எவை என்பதில் தெளிவு வேண்டும். எதற்கு முதலிடம், எதைப் பிறகு கவனிப்பது என்பதில் சரியான கணிப்பு வேண்டும். பட்ஜெட்டில் பற்றாக்குறையைக் குறைந்தபட்சமாக்கி, வரிகளைக் கணிசமாகக் குறைத்து, பல்வேறு அரசு இலாகாக்களில் சிக்கனத்தைக் கட்டாயமாக்கினால், மக்களும் சேமிப்புச் செய்து மூலதனம் பெருக உதவு வார்கள். மாறாக, 'சிக்கனம் எப்படி செய்யலாம்' என்று ஆலோசனை வழங்க கமிட்டி அமைத்து, அதன் வீண் செலவு களும் சேர்ந்து மக்களை வதைக்க அனுமதித்து விடக் கூடாது!

தேர்தலுக்குப் பிறகு எத்தனை தமிழக மத்திய மந்திரிகள், எம்.பிக்கள் தமிழ் நாட்டுக்கு எத்தனை முறை பறந்து 'வந்து போனார்கள்; அவர்களுக்குப் போஸ்டர் ஒட்ட செலவான தொகை எவ்வளவு; சாரி சாரியாக ஸ்ரீபெரும்புதூர் போய் வந்த கார்கள் குடித்த பெட்ரோல் எவ்வளவு என்றெல்லாம் கணக்குப் பார்த்தால் தமது சிக்கன முயற்சி சுலப சாத்தியமானது அல்ல என்று பிரதமர் புரிந்து கொள்வார்.

தலைவர்கள் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொண்டால் போதாது. நாட்டை உயர்த்துவதுதான் ராஜீவுக்கோ, எம். ஜி. ஆருக்கோ அவர்கள் செலுத்தக்கூடிய அஞ்சலி.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: பி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்க்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/-; விமானத் தபால்: ரூ. 350/-.

செரிலாக்


நாள் முழுவதும் அருந்திட சமநிலைச் சத்துணவு

மெனு

உங்கள் குழந்தைக்கு எப்போதும் செரிலாக் வீட் உணவின் நற்பலன்களை அளித்து வருகிறீர்கள். ஆனால் இப்போது உங்கள் குழந்தைக்கு 6 மாதங்களாகிவிட்டதால், குழந்தை உணவில் புதிய சுவைகளை அறிமுகப்படுத்த இதுவே ஏற்ற பருவம். ருசியிருந்த, ஊட்டச் சத்துக்கள் சமநிலையிலுள்ள செரிலாக் உணவு வகைகளான-செரிலாக் வீட் ஆரஞ்சு, செரிலாக் வீட்-வெஜிடபிள், செரிலாக் வீட் ஆப்பிள் -ஒவ்வொன்றும் உடல் வளர்ச்சிக்கு வேண்டிய முக்கிய ஊட்டச் சத்துக்களும், தாதுப் பொருட்களும், வைட்டமின்களும் சரியான சமநிலையில் கலந்த முழுமையான உணவு. உங்கள் குழந்தைக்கு பரவசமூட்டும் சுவைகளை வகைவகையாக அளிக்கும் ஏற்றதொரு மெனு. இரண்டு வயது வரையிலும், அதற்கு அப்பாலும் தொடர்ந்து தரக்கூடிய மெனு.

உதயவேளை உற்சாகத்திற்கு

காலைச் சிற்றுண்டிக்கு, செரிலாக் வீட்-ஆரஞ்சின் பழச் சுவை நற்பலன்களை உங்கள் குழந்தைக்கு கொடுக்கலாம். பொறுக்கி எடுக்கப்பட்ட ஆரஞ்சுச் சுவைகளை, கோதுமை மற்றும் பாலுடன் கலந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்டது. உங்கள் குழந்தையின் நாள் சுறுசுறுப்பாகத் தொடங்கி உதவும் முழுமையான உணவு



மதிய உணவின் மனநிறைவு

மதிய உணவின்போது மற்ற எல்லாரையும் போல, உங்கள் குழந்தைக்கு காய்கறிகள் தேவை. பசுமையான தோட்டுகள் மற்றும் தக்காளியின் நற்பலன்கள் கோதுமை மற்றும் பாலுடன் கலந்த செரிலாக் வீட்-வெஜிடபிள். உங்கள் குழந்தைக்கு கிடைப்பதோ திருப்தியான மதிய உணவு



அந்திவேளை ஆனந்தம்

நாள்முழுக்க விளையாடிக் களைத்த குழந்தைக்கு அந்தி வந்ததும் அருமையான விருந்து தேவை. சற்றே வித்தியாசமான உணவு கிடைத்தால் குழந்தைக்குப் பரவசமாகும். இருக்கவே இருக்கிறது செரிலாக் வீட்-ஆப்பிள். ஆப்பிள் பழங்கள், பால் மற்றும் கோதுமையுடன் கலந்த அற்புதச் சுவை. உங்கள் குழந்தைக்கு வித்தியாசமான விருந்து.





பேக்குகளின் மீதுள்ள குறிப்புகளைப் பின்பற்றுக.
செரிலாக்கின் தரமான தயாரிப்புகளை

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம்-ஒவ்வொரு வேளை உணவிலும்

MudraU: NES: U/92–18

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka



சிறிய திரை + தொடர்ந்து பார்த்த காட்சிகள் + எதிரில் பளிச்சிடும் வெளிச்சம் = களைப்புற்ற கண்கள். அவற்றை தேய்த்து விட்டுக் கொள்வதினால் பயன் ஒன்றும் இல்லை. களைப்புற்ற கண்களுக்குத் தேவை பாதுகாப்பான, மென்மையான, அக்கறை மிக்க ஆப்ட்ரெக்ஸ் ஐ-பாத். இதை ஐ-கப்பில் ஊற்றி கண்களை சுழற்றிக் கழுவுங்கள். ஆப்ட்ரெக்ஸ் கண்களின் களைப்புணர்ச்சியை அகற்றி இதமளிக்கிறது. மேலும், அவற்றை மெல்லமைதிப்படுத்துகிறது. இரவுப் பொழுதில் கண்களுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும் ஆப்ட்ரெக்ஸ் ஐ-பாத் உலகெங்கும் பயன்படுத்தப்படுகிறது.



இரவுப் பொழுதில் புத்துணர்ச்சி பெற்ற கண்கள்

ஆ ப் ட் ரெ க் ஸ் ஐ லோ ஷ ன்